வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVERSMITH STREET, COLOMBO.

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1991 தைத் திங்கள் 11ம் நாள் (24—1 1960) ஞாயிற்றுக்கிழமை றஜபு பிறை 24 இதழ் 29

# பெப்ரவரி 4! சுதந்திர தினமில்லை!!

## துக்கதினம் - கரிநாள்

## தமிழ் பேசும் மக்கள் இம்முறை வெகு தீவிரமாக அனுஷ்டிக்க வேண்டும்

### யாழ் நகரில் பெரிய ஊர்வலமும் கூட்டமும்

### விடுதலை முரசு கொட்டும்— உரிமை முழக்கம் கேட்கும்

## தமிழரசுக் கட்சி அறிக்கை

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4-ந் தேதி தமிழ் இலங்கையின் மூலை முடுக்குகளில் எல்லாம் கறுப்புக் கொடிகள் உயர்த்தப் பட வேண்டும். வழக்கம் போல் இம்முறையும் இலங்கையின் சுதந்திர தினம் தமிழ் பேசும் மக்களின் துக்க தினமாக அனுஷ்டிக்கப்பட வேண்டும்—இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்திருக்கும் ஒரு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

அவ்வறிக்கையில் தமிழரசுத் தந்தை துக்க தினம் பற்றி வெளியிட்ட கருத்தும் இரத்தினச் சுருக்கமாக இணைக்கப்பட்டிருக்கிறது.

"தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் இன்னும் சுதந்திரம் கிடைக்கவில்லை. 1948-ம் வருடத்தில் இலங்கை பெற்ற சுதந்திரம் தமிழ் பேசும் மக்களுக்கு இல்லை. தமிழ் பேசும் மக்கள் தமக்கு சுதந்திரம் கிடைக்கும் வரை அரசாங்கத்துக்கு தீவிரமான எதிர்ப்பு காட்டிக் கொண்டிருக்க வேண்டும். பெப்ரவரி 4-ல் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும். அது அமைதியாகவும் அஹிம்சை நெறியைத் தழுவியதாகவும் இருக்க வேண்டியது மிக அவசியம்"-

இவ்வாறு தமிழரசுத் தந்தை அபிப்பிராயம் தெரிவித்ததாகக் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

கட்சி அறிக்கையில் எந்த வகையில் துக்கம் அனுஷ்டிக்கலாம் என்பது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது.

1. எங்கும் கறுப்புக் கொடிகள் கட்டிப் பறக்க விடுதல்.

2. அரசாங்கம் ஏற்படுத்தும் கொண்டாட்டங்களில் பங்கு பற்றாதிருத்தல்.

3. பாடசாலைகளில் நடைபெறும் வைபவங்களைப் பகிஷ்கரித்தல்.

4. எல்லோரும் அன்றைய தினம் ஆத்ம சுத்தியோடு பிரார்த்தனையில் ஈடுபடுதல்.

5. தாம் இழந்து போன மொழி, குடி, நில உரிமையை மீட்டு, சுதந்திரம் பெற்று, தன்மானத்தோடு வாழத் தம்மால் ஆனதைச் செய்ய ஒவ்வொருவரும் திடசங்கற்பம் செய்துகொள்ளுதல்.

மேற்படி வகைகளில் துக்கம் அனுஷ்டிக்கலாம் என்று கட்சி அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

யாழ் நகரில் பெப்ரவரி 4-ல் பிரமாண்டமான கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது. வட மாகாணம் எங்கிலுமிருந்து தமிழ் பேசும் மக்கள் திரண்டு வந்து ஊர்வலமாக மைதானத்துக்குச் செல்லுவார்கள். யாழ் நகரில் முன் எப்பொழுதும் இல்லாத மாதிரி இம்முறை பரந்த அளவில் வெகு தீவிரமாகத் துக்க தினம் அனுஷ்டிக்கப்படுவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மட்டக்களப்பிலும் மற்றும் திருமலை, பன்னார் முதலான இடங்களிலும் துக்க தின அனுஷ்டானம் விரிவான அடிப்படையில் நடக்கும் என்று கட்சிக் கிளைக் காரியாலயங்கள் அறிவிக்கின்றன.

வடக்கில் விநோதம் :

## 'எங்களுக்கு, இல்லையேல் தமிழரசுக்கு வாக்களியுங்கள்'

## மாற்றுக் கட்சி அபேட்சகர்கள் இப்படித்தான் கேட்கிறார்கள்

(சுதந்திரன் யாழ் நிருபர்)

வட பகுதியில் போட்டியிடும் பல்வேறு கட்சி அபேட்சகர்களும் சுயேச்சை அபேட்சகர்களும் புதுவிதமாக வாக்குப் பிச்சை கேட்டு வீடு வீடாக அலைகிறார்கள். எப்படியும் தமிழரசுக் கட்சியின் பெயரைச் சொன்னால்தான் உள்ளே செல்ல முடிகிறது என்ற உண்மையைத் தெரிந்து கொண்ட அவர்கள் "எங்களுக்கு வாக்களியுங்கள்; இல்லையேல் தமிழரசுக்கு வாக்களியுங்கள்" என்று கேட்டுக்கொள்கிறார்கள்.

இப்படி ஒருவர் இருவர் அல்ல, எல்லாக் கட்சிக்காரரும், எல்லா அபேட்சகர்களும் கேட்டுக்கொள்வதாகத் தெரியவருகிறது.

அகில இலங்கை ஆனைப் பந்திக் காங்கிரஸின் தனிப் பெருந் தலைவர் திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் கூட யாழ்ப்பாணத்தில் இப்படித்தான் வாக்குக்கேட்டு அலைவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

தனிப் பெருந் தலைவர் என்ன, (சமச)மாஜிக் கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா கூட, "உங்கள் வாக்கை எங்களுக்கு அளியுங்கள்; இல்லையேல் வேறு எவருக்கும் வேண்டாம—தமிழரசுக் கட்சிக்கே கொடுங்கள்" என்று கொம்யூனிஸ்டுகளும் போட்டியிடும் தொகுதிகளில் தமிழ் வாக்காளர்களுக்கு இதோபதேசம் செய்து வருகிறார்.

தமிழரசுக் கட்சிக்கு இப்படி இவர்கள் எல்லோரும் 'பீஸ்' இல்லாத வக்கீல்களாக ஆஜராகி வக்காலத்து வாங்குவதன் காரணம் தமிழரசுக் கட்சியின் பெயரைச் சொல்லாமல் எந்த வீட்டுக்குள்ளும் சென்று எவரையும் கண்டு எதையும் பேச முடியாத நிலைமை தமிழ்ப் பகுதிகளில் நிலவுவதே. "நீங்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

## அம்பாறைக் கச்சேரி விஷயம் 'ஐஸ் பெட்டி'யில்!

### தேர்தல் முடியும்வரை எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி

கல்முனைப் பகுதியில் ஆரம்பிக்கப் பட்டிருக்க வேண்டிய கச்சேரி அம்பாறையில் ஏற்படுத்தப்பட்டது தெரிந்ததே. அந்தக் கச்சேரி விஷயம் இப்போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தேர்தல் முடியும் வரை அங்கு வேலை நடைபெற மாட்டாது என்று தெரியவருகிறது.

மட்டக்களப்பு தென்பகுதியில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கான, அவர்களிலும் குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கான கச்சேரி ஜனாப் காரியப்பர், ஜனாப் முஸ்தபா ஆகி

(4ம் பக்கம் பார்க்க)

## அசுத்த இரத்தம்?

### வேதனை தரும் பல பயங்கரமான நோய்களுக்குக் காரணமாகிறது!



இரத்தத்திலுள்ள அசுத்தங்கள் அகற்றப்படாவிட்டால் அவை அங்கு பெருமளவில் தேங்கிக்கிடந்து நச்சுத் தன்மையை உண்டாக்கி விடுகின்றன அதனால் கடுமையான வியாதிகள் பல ஏற்பட ஏதுவாகின்றன.

- வாத நோய்கள்: இடுப்புப் பிடி, சந்து, வாதம், கில்வாயு, கை கால் பூட்டுகளில் பிடிப்பு—நோவு.
- இரத்த நாள இறுக்க நோய்: இரத்தக் கொதிப்பு, இரத்தக் கட்டுத் தொந்தரவுகள்.
- மந்தமான இரத்த ஓட்டம், சோர்வு, பலத பலகசம், அசதி, நரம்புத் தடிப்பு, நரம்பு சுருளல் புண், கிளவை, கட்டி.
- சரும வியாதிகள்! பருக்கள் தேமல்கள், சொறி சிரங்குகள் (ECZEMA)
- மூலம்: உள் மூலம், வெளி மூலம், இரத்த மூலம்.




ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(Richelet's Blood Purifier)

இரத்தத்தை சுத்திகரிக்கவும், அதற்கு சக்தியூட்டவுமாக விஞ்ஞான முறைப்படி தயாரிக்கப்பட்டது. இது உடம்பில் எந்தப் பாகத்திலுமுள்ள நோய்நஞ்சையும் நீக்கி உடம்பைச் சீர்படுத்துகிறது. உள்ளூர ஏற்பட்ட நச்சுத் தன்மையால் உண்டாகும் நோய்களின் வலிகள்—வருத்தங்கள் படிப்படியாகவொழிக்கப்படுகிறது இம் மருந்தினால். மேலே சொன்ன எந்த ஒரு வியாதியால் கஷ்டப்படும் நோயாளியும் ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர் உபயோகிக்கலாம். பூரண சுகம், பலம், சந்தோஷம் அப்பொழுது நிச்சயம் கிடைக்கும்.

எங்கும் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு—11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

# காய், கனி வளத்துக்கு தேனீ வளர்ப்பு பெரிதும் உதவுகிறது

## தேன் பண்ணை வைத்திருப்பதில் சிரமம் இல்லை-செலவும் குறைவு

## கிராமப் புறங்கள் ஏற்ற இடங்கள்

தேன் பண்ணை பற்றிக் கூறும்பொழுது தேனின் உயர்வு, நன்மை பற்றிச் சொல்லாமலிருக்க முடியவில்லை. மிகப் பழங் காலத்திலேயே தமிழ் மக்கள் தேனின் அருமை பெருமைகளை அறிந்திருந்தார்கள். இன்றும் மக்கள் பலவித லேகியங்களையும், சூரணங் களையும் குளிகைகளையும் தேனுடன் சேர்த்துச் சாப்பிடும் முறை வழக்கத்தில் இருந்து வருகிறது தாகத்தை அடக்கும் சக்தி தேனிடம் காணப்படுகிறது. மேலும் தேன் நல்ல ஜீரண சக்தியைக் கொடுக்கும் பொருளாகும். குடல் சம்பந்தமான கோளாறுகளுக்குத் தேன் பரிகாரமுமாகும். சிறு குழந்தைகளுக்கு உணவுடன் தேனையும் சேர்த்துக்கொடுத்தல் அவசியம்.

### நன்மைகள்

இந் நன்மைகள் தவிர, தேனீ வளர்ப்பால் வேறு பல அநுகூலங்களும் உள. மலர்கள் நன்ருகக் காய் பிடிப்பதற்கும், தானிய மணிகள் அதிகமாக உண்டாவதற்கும் தாவரங்களில் தேனீக்களின் நடமாட்டமிருப்பது அவசியமாகும். கிராமப் புறங்களில் தோட்டங்களை வைத்திருப்போர் தேனீ வளர்த்தலை உப தொழிலாகத் தம் தோட்டங்களில் மேற்கொள்வார்களாயின் அவர்கள் அதிக விளைவைப் பெறுதல் கூடும்; அதிகமான விளைச்சல் மறைமுகமாகக் கிடைக்கும் நன்மையாகும். இவை ஒரு புறமிருக்க, தேனீ வளர்ப்பினுல் நாம் நல்ல சில பாடங்களையும் பயிலலாம். தேனீக்களின் சமூகக் கட்டுப்பாடும் வாழ்க்கை முறையும், அவற்றின் இடைவிடாத முயற்சியும் உழைப்பும் நன்கு கவனிப்பவர்களுக்கு ஒரு நல்ல படிப்பினையாகும். தேனீ வளர்ப்பின் மூலம் நம் சிறுவர்களுக்குச் சொற்ப விஞ்ஞான அறிவையும் புத்திமதிகளையும் ஒழுங்கையும் கற்பித்தல் எளிதாகும்.

### பழங்காலத்தில்

பழங்காலத்தில் கிராமங்களையடுத்துக் காடுகள் மிகுதியாக இருந்தன. வயல்களும் விளை நிலங்களும் அவ்வாறே அமைந்திருந்தன. இக் காரணத்தால் தேனீக்கள் பல விடங்களில் கூடு கட்டியிருந்தன. நாட்டில் தேனுக்குக் குறைவே இல்லை. மண் சட்டிகளை மக்கள் தாம் விரும்பிய இடத்திலே மரங்களில் கட்டிவைத்து, தேனீக்கள் அவைகளில் கூடுகட்ட

அ. விஜயன் விக்டோரியா
பி. ஏ.

வசதி செய்துகொடுத்தார்கள். சுவர்களிலே பொந்துகளைத் தேனீக்களுக்கு வசதியாக அமைத்து வைத்தார்கள். பழங்கால மக்கள் தேனீக்களை ஓட்டிவிட்டு, தேனடைகளை எடுத்து கையினுல் தேனடைகளைப் பிழிந்து எடுத்துக்கொண்டார்கள். ஆனுல் மக்கள் தேனீக்களைச் செயற்கைக் கூடுகளில் வளர்க்கும் முறை 18-ம் நூற்ருண்டின் இறுதிக் காலத்திலேயே தொடங்கியது.

### தேனீ வளர்ப்பது சுலபம்

கிராமங்களில் வசதியுள்ளவர்கள் தம் வீட்டில் அல்லது தோட்டத்தில் செயற்கைக் கூடுகளை வைத்து தேனீக்களை வளர்க்கலாம். கிராமங்களில் நீண்ட தூரத்திற்கு மரஞ் செடி கொடிகள் இருக்கின்றன. தேனீக்கள் ஒரு மைல் தூரங்கூடச் சென்று மகரந்தத்தையும் மதுரத்தையும் தேடி வரக் கூடியனவாயிருப்பதால், கிராமப் புறங்களில் இவ்வாகாரம் போதுமான அளவு தேனீக்களுக்குக் கிடைக்கும். தேனீக்களை வீட்டில் செயற்கைக் கூட்டில் வைத்தும் வளர்க்கலாம். அவை எளிதில் பழகும் சந்துக்கள். அன்றியும் தேனீ வளர்ப்புக்கு அதிகமான பயிற்சியும் சிரமமும் வேண்டியதில்லை. கிராமப்புறப் பெண்களோ, வயது வந்த பிள்ளைகளோ அவைகளைக் கவனித்துக்கொள்ளலாம்.

### பணச்செலவு அதிகமில்லை

தேனீ வளர்ப்புக்கென்று பணச் செலவும் அதிகமில்லை. முதலில் ஒரு கூட்டையும் தேனெடுக்கும் கருவிகளையும் வாங்கிக்கொண்டால் போதும்; வேறு உபகரணங்கள் சொற்ப விலையுள்ளவையே. ஒருமுறை வாங்கின கருவிகள் பல வருஷங்கள் வரை உழைக்கும். சராசரி ஒரு கூட்டிலிருந்து ஓராண்டுக்கு 8 முதல் 12 ருத்தல் வரை எடையுள்ள தேன் கிடைக்கிறது. கிராமப்புறத்திலிலுள்ள ஒருவர் சுமார் 10 கூடுகளை வைத்துக் கொண்டு, தேனீ வளர்ப்பை ஓர் உப தொழிலாக மேற்கொள்வாராஞல், அவரது வருவாய் பெருகி, பொருளாதாரம் உயரும் என்பதில் சந்தேகமில்லை.

### கிராம மக்களுக்கு ஒரு ஆலோசனை

கிராமப் பகுதிகளில் பொதுவாக அனைவரும், முக்கியமாக தோட்டங்களை வளர்க்க வேண்டும். அவர்கள் பத்துக்கு மேற்பட்ட தேன்கூடுகளைக்கூட நிருவகித்தல் எளிதாகும். தோட்டங்களில் வளர்க்கப்படும் தேனீக்கள் ஆரோக்கியமுள்ளவை; புஷ்டியானவை. தேனையும் மெழுகையும் மிகுதியாகத்தரும் இயல்புடையவை. அநுபவமில்லாதவர்கள், புதிதாகக் கூட்டிலிருந்து தேனீக்களைப் பிடித்துவந்து, செயற்கைக் கூட்டில சேர்க்கும் முறையைத் தெரியாமலிருக்கலாம். அப்படிப்பட்டவர்கள் தேனீச் சமூகத்தோடு ஒரு கூட்டை விலைக்கு வாங்கிக் கொண்டால், பிறகு வளர்ப்பு முறையைச் சுலபமாக்கிக்கொண்டு, தேன் பண்ணையைப் பெருக்கிக் கொள்ளலாம்.

### கவனிக்க வேண்டிய விஷயங்கள்

தேனீக்களை வளர்ப்போர் அவைகளின் இயல்புகளை அறிந்துகொண்டால், அந்த இயல்புகளுக்கு ஏற்ப அவைகளுக்கு வசதிகளை அமைத்துக் கொடுக்கலாம். வசதிகள் நிறைந்திருக்கும் இடத்தில் தேனீக்கள் நிலைகொண்டு வாழ்கின்றன. அப்படிப்பட்ட இடத்தில் அவைகளின் உழைப்பும் சிரமமும் குறைகின்றது. தேன் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட அவைகளுக்கு அப்போது அதிக அவகாசம் கிடைக்கிறது. உதாரணமாக, கூடுகளை வைக்குமிடத்தில் நில அதிர்ச்சி கூடாது. மோட்டார் போன்ற வாகனங்கள் வேகமாக ஓடும் பாதை ஓரங்களில் உள்ளவர்கள் தேனீக்களை வளர்க்கும் [illegible] களின் ஓட்டத்தால் தேன் கூடிருக்கும் நிலத்தில் அதிர்ச்சி ஏற்படாமலிருக்கத்தக்க ஏற்பாடு செய்ய வேண்டும். கூடுகளுக்கு அருகில் நெல் குற்றுதல், மா விடித்தல் முதலிய வேலைகளைத் தவிர்க்க வேண்டும்.

### சுகாதாரம்

இன்னும், தேனீக்களுக்குக் காற்ருேட்டம் அவசியம். ஆனுல் பெருங் காற்ருே, அதிக வெளிச்சமோ கூட்டின்மேல் படலாகாது. ஐந்தாறு கூடுகளிருந்தால் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது ஆறடி இடைவெளி அவசியமாகும். மனிதர்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் நோய்கள் வருவதுபோல் தேனீக்களுக்கும் வருவதுண்டு. நோய்களுக்கு தக்க பரிகாரம் தேடுவது ஒருபுறமிருக்க, தூய்மையாக இருக்கும்படி பார்த்துக்கொள்வது முக்கியமாகும்.

மேலும் தேனீக்களுக்கு விரோதிகளாகக் கருதப்படும் மரங்கொத்தி, குருவி சாதி, குளவி, பல்லி, சுண்டெலி, எறும்புகள், மெழுகுப் பூச்சிகள் என்பனவற்றின் கொடுமையிலிருந்து அவைகளைப் பாதுகாக்க வேண்டும்.

### உணவு

அடுத்ததாக, தேனீக்களுக்கு உணவு அகப்படாத காலங்களில் செயற்கை உணவைத் தயாரித்து அவைகளுக்குக் கொடுப்பது அவசியம். உதாரணமாக, சம பங்குகள் தேனையும் தண்ணீரையும் கலந்து. தேன் கூட்டுச் சட்டங்களிலும் அடைகளிலும் தெளிக்கலாம்; அல்லது கோதுமை மாவைத் தூள் செய்து; சிறிது தேன் கலந்த நீரில் பிசைந்து கூட்டில் வைக்கலாம். தேனீக்கள் இவ்வுணவை உட்கொண்டு ஓரளவு திருப்தியடைகின்றன. ஆனுல் இவ்வுணவுதானும் கொடுக்காவிடில் தேனீக்கள் கூட்டை விட்டு வெளியேறி விடக் கூடும். தேனீ வளர்ப்பு சம்பந்தமாக மேலே கூறிய முக்கிய விடயங்களை தேனீப் பண்ணை வளர்க்க விரும்புவோர் கவனிக்க வேண்டும்.

### கூட்டுறவு முறை

கிராமங்களில் தேனீ வளர்த்தலை ஒரு முக்கிய தொழிலாகக் கொள்ள விரும்பும் மக்களுக்காக கூட்டுறவு முறையில் தேன் பண்ணையை ஆரம்பித்து நடத்தலாம். கூட்டுறவுத் தேன் பண்ணை, அங்கத்தவர்களுக்கு கடனுகப் பல கூடுகளைக் கொடுத்து, வளர்ப்பு முறையை பழக்கித்தந்து, அவர்கள் உற்பத்தி செய்து தரும் தேனை வாங்கி விற்றுக் கொடுத்து, ஏழை மக்களது வருவாயைப் பெருக்கி பொருளாதாரத்தை உயர்த்தலாம். தேனெடுக்கும் கருவி முதலியவற்றை கிரா

(15-ம் பக்கம் பார்க்க்)

## வேண்டுகோள்

இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்தின் வருங்கால வாழ்வைப் பெருமளவு நிர்ணயிக்கும் முறையில் எதிர்வரும் பொதுத் தேர்தல் அமையும். ஈழத்தின் பல்வேறு பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வதியும் மக்கள் தமது குடியுரிமை, மொழியுரிமை தாம் வழி வழி வாழும் இடவுரிமை ஆகிய அனைத்திற்கும் மேலாக கூட்டாட்சி அடிப்படையில் தமக்கென ஒரு தமிழரசை நிறுவும் உரிமைக்கு ஓர் உறுதுணையாய்—ஓர் அடித்தளமாய் இத் தேர்தல் அமையும். இந் நல்வாய்ப்பினை நாம் உண்மையாகப் பெற விரும்பின் தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி அபேட்சகர்கள் அனைவரையும் தெரிவு செய்ய வேண்டும்.

தமிழ் பேசும் மக்கள் ஒரே கொள்கை அடிப்படையில், ஒரே இயக்கத்தைச் சார்ந்து ஒரு கொடிக்கீழ் ஒன்றுபட்டு நின்று போர்க்குரல் எழுப்பின் தமிழ் இனத்தின் விடுதலை எழுச்சியை எவருமே புறக்கணிக்க முடியாது.

இந்தச் சூழ்நிலையில் ஒரு முக்கிய குறிப்பை கூறியே யாக வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருக்க விரும்பின் ஓர் அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். எமக்கின்று ஏற்பட்டிருக்கும் சாபக்கேடு என்னவெனில் தமிழரில் சொந்த வருமானம் உள்ளவரிடம் இலங்கையில் தமிழ்ப் பேரினம் தனது தனித்தன்மையை இழந்து அழிந்துபோகாது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம்—அதற்கான உணர்வு போதியளவு இல்லை. அதே நேரத்தில் தமிழ்ப் பேசும் இனத்தின் நலனிலும் நல் வாழ்விலும் நாட்டம் கொண்டுள்ள ஆண்கள் பெண்கள்—இருபாலாரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்திற்காக தமது முழு நேரத்தையும் செலவு செய்ய பண பலம் இல்லை. அதாவது வருமானம் இல்லை.

இந் நிலையில் தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணியில் ஈடுபாடும் கொண்டவர்களையே அபேட்சகர்களாய்த் தெரிவு செய்ய வேண்டும். அத்தோடு அவர்களுக்காக தேர்தல் பிரசாரம் செய்து பணமும் செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் இனத்திடம் நிதி உதவியையும் மற்றும் இன்னேரன்ன உதவிகளையும் வேண்டி நிற்கின்றது கட்டுக்கோப்போடு கடந்த காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு இயன்றவரை பணியாற்றியுள்ளது. வருங்காலத்திலும் அதன் பணி தொடர்ந்து சிறப்புற வேண்டின் ஈழத்தில் தமிழ் பேசும் இனம் தொடர்ந்தும் தமிழ் பேசும் இனமாகவே வாழ வேண்டின் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கு தாராளமாக நிதி தந்து உதவுங்கள் என்று வேண்டுகிறேன்.

எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்ப வேண்டிய முகவரி:
16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,
கொழும்பு—3.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு. கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செல்வி சாந்தநாயகி கார்த்திகேசு மட்டுவில் தெற்கு

கே: எழுத்தாளருக்குத் தேவையானது என்ன?

ப: முன்பெல்லாம் எழுத்தாளருக்கு மொழிப் பயிற்சி, கற்பனை வளம், இலக்கண ஞானம், சிந்தனைத் தெளிவு இவையெல்லாம் தேவைப்பட்டன. ஆனால் இப்போது "ஜெர்னலிஸ்ட்" என்று ஒரு கடிதத் தலைப்பு அச்சிட்டுக்கொண்டால் போதும் என்று தெரிகிறது. இது ஒன்றை வைத்துக்கொண்டு பம்பாய் வரை வேண்டுமானாலும் எழுத்தாளர் பிரதிநிதியாகச் சென்று திரும்பலாம்!

கே: வாழ்க்கை என்பது என்ன?

ப: வாழத் தெரிந்தவனுக்கு அது ஒரு கலை. வாழத் தெரியாதவனுக்கு அது ஒரு கொலை.

கே: காதலைக் கனவென்று கருதுபவர்கள்.........?

ப: நிஜ உலகில் இன்னும் நித்திரை செய்துகொண்டிருப்பவர்கள் என்றுபொருள்.

கே: கண்களினால் மிகுந்த பயன் அடைபவர்கள் ஆண்களா, பெண்களா?

ப: கலியாணம் ஆகும்வரை ஆண்கள். அதன் பின்னர் பெண்கள். கலியாணம் ஆகும்வரை பெண்கள் கால் பெருவிரலையும், நிலத்தையும் தவிர வேறு எதையும் பார்ப்பதில்லையே! கலியாணம் ஆன பின் ஆண்களின் கண்கள் எங்கும் வட்டமிடாதபடி •மனைவியர் கவசம் மாட்டிவிடுகிறார்கள் அல்லவா?

கே: நீங்கள் ஓய்வாக இருப்பது எப்போது?

ப: ஓய்வா? அது எனக்கு ஏது அம்மணி! •பேனாவைக் கை நகர்த்தாதபோது எல்லாம் சிந்தனையைத் தலை நகர்த்திக்கொண்டே இருக்கிறதே!

ஃ

செல்வி பரமேஸ்வரி சதாசிவம், நெடிய காடு

கே: நேயர்கள் கேட்கும் எல்லாக் கேள்விகளுக்கும் தங்கள் பதில் கொடுப்பதுண்டா?

ப: அது எப்படிச் சாத்தியமாகும்? சுதந்திரன் 16 பக்கங்களிலும் பதில் கொடுப்பதானாலும கேள்விகள் மிஞ்சிவிடுமே வாரம் ஒன்றுக்கு சுமார் 700 அஞ்சல் அட்டைகள், ஏறக்குறைய 3500 கேள்விகள் அல்லவா கிடைக்கின்றன.

ஃ

செல்வி பாலாமணி, வண்ணார்பண்ணை

கே: சிலர் பணத்துக்கு தூப தீபம் காட்டுகிறார்களே, இது மூடநம்பிக்கை அல்லவா?

ப: இல்லை, படத்துக்குத் தூப தீபம் காட்டுவதைவிட பணத்துக்கு தூப தீபம் காட்டுவது எப்படி மூடநம்பிக்கையாகும்? ஜெர்மனியில் அச்சிட்டு, பெல்ஜியம் கண்ணாடி போட்டுப் பிரேம்செய்யப்பட்ட படத்தின் முன்னால் ஜப்பான் கற்பூரத்தைக் கொளுத்துவதனால நமக்கு கிடைக்கும் சகாயத்தைவிட அதிக சகாயத்தைப் பணம் கைமேலே தருகிறதே என்று அவர்கள் விளக்கம் தரக்கூடும்.

கே: செல்வி குயுக்தியாருடன் பேனாத் தொடர்பு வைக்க விரும்புகிறேன்.

ப: தாராளமாக வையுங்கள். ஆனால் அவள் உங்களோடு பேனவில் தொடர்புதான் வைப்பாள். அவள் இன்னும் பேனா பிடித்து எழுதத் தொடங்கவில்லை!

ஃ

க. ஓன்ளுப்பம் தம்பி, ஆரைப்பற்றை

கே: "ஐயம் இட்டுண்" என்றும் "ஏற்பது இகழ்ச்சி" என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இரு கருத்தும் முரண்பட்டிருக்கிறதல்லவா? ஏற்க மறுத்தால் யாருக்கு இட்டு உண்பது?

ப: இல்லை. கருத்து முரண்படவில்லை. இரண்டு வாக்கும் இரண்டு சாராருக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒன்று இயல்பு உள்ளவர்கள் இட்டு உண்ண வேண்டும் என்பது. மற்றது உழைக்க முடிந்தவர்கள் இரந்து வாழ்வது இகழ்ச்சி என்பது இதில் எங்கே முரண்பாடு இருக்கிறது?

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்

கே: குயுக்தியாரே, உங்களிடம் கிடையாதது ஒன்று திருமதி குயுக்தியாரிடம் உண்டு அது என்ன?

ப: ஒன்று அல்ல. என்னிடம் இல்லாதது நான்கு அவரிடம் உண்டு. அவையாவன: நாணம், மடம், அச்சம், பயிர்பு.

ஃ

சி. சின்னையா, கொட்டாஞ்சேனை

கே: இந்துக்களின் திருமணத்தின்போது அரசாணியில் கரும்பும் முள்முருங்கையும் நாட்டுவதேன்?

ப: கரும்புபோல் இனிப்போடு ஆரம்பமாகும் கலியாண வாழ்க்கை முருக்கம் முள்போல் உறுத்தவும் செய்யும் என்று எச்சரிப்பதற்காக வாயிருக்கலாம்.

ஃ

எஸ். இராசநாயகம், மட்டக்களப்பு

கே: வானொலியில் ஒலிபரப்பப்பட்ட கொம்யூனிஸ்டு கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கேட்டீர்களா குயுக்தியாரே? அதைப்பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: கேட்டேன். லகர, ளகர, ரகர, றகர பேதம் அறியாத ஒரு கொழும்புக் குயில் பாடிற்று. அதைக் கேட்டபோது தியாகராஜ பாகவதருடைய ஒரு இசைத் தட்டுத்தான் எனக்கு ஞாபகம் வந்தது. "சிவபெருமான் இருபை வேண்டும், வேறென்ன வேண்டும்? சிவ பெருமான் இருபை வேண்டும்" என்பதுதான் அது. எல்லாம் வேண்டும் வேண்டும் வேண்டுமாகவேயிருந்தது! இதைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை!

கே: இதுகாலவரை செய்யப்பட்ட அரசியல் தமிழ் ஒலிபரப்புக்களில் திறம்பட அமைந்த ஒலிபரப்பு எது?

ப: வெளியிடப்பட்ட கருத்துக்களையும் திட்டங்களையும் நாம் ஒப்ப முடியாவிட்டாலும் ஒலிபரப்பின் தரத்தில் சிறந்ததாக அமைந்த அரசியல் தமிழ் ஒலிபரப்பு சமசமாஜக் கட்சியினுடையது தான். இந்த ஒலிபரப்பை நிகழ்த்திய திரு என். பி. தர்மலிங்கம் பாராட்டுக்குரியவராவர்.

கே: தமிழரசுக் கட்சியின் சிங்கள ஒலிப்ரப்பை நிகழ்த்திய பிரமுகர் யார்?

ப: சுதந்திரன் செய்தி வெளியிட்டிருந்தபடி கொழும்பில் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டிருந்த திரு பிரான்ஸிஸ் பெரேராதான் சிங்கள ஒலிபரப்பை நிகழ்த்தியவர். ஆனால் சமசமாஜக் கட்சியின் தமிழ் ஒலிபரப்பை டாக்டர் என். எம். பெரேராவே நிகழ்த்துவார் என்று சந்தியில் அடிபட்ட ஜம்பச் செய்திகளெல்லாம் பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயின. டாக்டர் பெரேரா புத்திசாலியாகையால் தமிழ் தப்பிப்பிழைத்தது!

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

ஃ

பெ. இ. சந்திரன், வட்டக்கச்சி

கே: மனிதனை மடையனாக்குவது எது?

ப: மனிதனை மடையனாக்குவதும், தேவனாக்குவதும் உணர்ச்சிதான். 1958 மே-ஜூன் மாதங்களில் உணர்ச்சி மனிதனை மடையனாக்கியதைக் கண்டோம். புரட்சித் துறவி சச்சிதானந்தர் நடத்தும் அந்தர் யோகத்தில் கலந்துகொண்டால் உணர்ச்சி மனிதனைத் தேவனாக்குவதைக் காணலாம்.

கே: உயிர்விடுவது கோழைத்தனமா?

ப: கஷ்டத்தையும் இன்னலையும் பொறுக்கமாட்டாமல் உயிர்விடுவது கோழைத்தனம். மானத்தைக் காப்பதற்காகவும் ஈனத்தைப் போக்குவதற்காகவும் உயிர் நீப்பது சூரத்தனம்.

ஃ

எம். எச். பலீல், காத்தான்குடி

கே: தமிழர்களை வெறுக்கும் சிங்கள வகுப்பு வெறியர்கள் முஸ்லிம்களோடாவது தொடர்ந்து சுமுகமான நட்புறவு பூண்டு வாழ்வார்களா?

ப: வெறியர்கள் ஒருபோதும் நல்ல நண்பர்களாக முடியாது. சிங்களவர்களை ஒதுக்கிவிட்டுத் தமிழர்கள் எல்லா அரசாங்க உத்தியோகங்களையும் பிடித்துக்கொண்டார்கள் என்று முன்பு கூப்பாடு போட்டார்கள் சிங்கள வெறியர்கள். இப்போது 'முஸ்லிம்கள் எல்லாவற்றையும் பிடித்துக்கொண்டார்கள், முஸ்லிம்கள்தான் இந்த நாட்டையே ஆள்கிறார்கள். ஆறு பேர்கொண்ட தஹநாயகா மந்திரி சபையில் மூன்று முஸ்லிம்கள் இடம் பிடித்துக்கொண்டார்கள். சிங்கள மக்களே உஷார்! உஷார்!' என்று ராஜாக்ஷ சோஷ்டி சிங்களத் துண்டுப் பிரசுரம் போட்டுவிட்டதே.

ஃ

தெ. சந்திரசேகரம், மானிப்பாய்

கே: மொழிப் பிரச்னையில் சமசமாஜக் கட்சியும் கொம்யூனிஸ்டு கட்சியும் ஒன்றையொன்று குறைசொல்லி மோதிக்கொள்கின்றனவே.

ப: காக்காயைப் பார்த்து கருங்குயிலி 'அடி கறுப்பி' என்று கூப்பிட்ட கதையாகத்தான் இருக்கிறது இது!

ஃ

செ. அரியநாதன், அம்பாரை

கே: தற்கால நவநாகரிகப் பெண்கள் தங்கள் கூந்தலை ஒட்டக் கத்தரித்துக்கொள்வதேன்?

ப: பேன் சீப்பு போட்டு இழுப்பதற்குச் சௌகரியமாயிருப்பதற்காக. பழங்காலத் தமிழ்ப் பெண்கள் நீண்ட நெடிய கூந்தல் உடையவர்களாயிருந்தும் கூந்தலைச் சுத்தமாக வைத்திருந்தார்கள். காலையில் முழுகி அகில் புகையூட்டிச் சந்தன எண்ணெய் தடவித் தங்கள் கேசம் பரிமளம் வீசும் வண்ணம் புனிதமாயிருந்தார்கள். இந்தக்காலத்தில் கேசம் எங்கேயிருக்கிறது? பாண்டல்பற்றிய சிக்கு முடிமயிர் அல்லவா உள்ளேயிருக்கிறது!

கே: ஈரேழு உலகிலும் காண முடியாத அதிசயம் ஒன்று இலங்கையில் உண்டு. அது என்ன?

ப: அரச சபைக் கோமாளியொருவன் அரசனாகிவிட்ட அதிசயந்தான் அதுவாயிருக்க வேண்டும்.

ஃ

செல்வி பொ. தங்கநாயகி, இரான்

கே: உங்களுக்கு பிரதமர் பதவி தந்தால்......?

ப: அதை ஏற்றுக்கொள்வதானாலும் இலங்கை வானொலியை எனக்காகத் தம்பட்டமடிக்கச் செய்து வீணொலியாக்கமாட்டேன்.

ஃ

எஸ். ராமசாமி, பூண்டுலோயா

கே: துன்பம் வரும்போது நாம் என்ன செய்ய வேண்டும்?

ப: ஒன்றும் செய்ய வேண்டாம். துன்பம் நம்மை என்ன செய்யும்? வருவது வந்து விட்டுப் போகட்டும்; இருளுக்குப் பின் ஒளி வந்துதானே ஆக வேண்டும்என்று கொஞ்சம் வேதாந்த சிந்தனையை விருத்தி செய்துகொண்டால் போதுமானது.

ஃ

மதியமுதன், சித்தாண்டி

கே: எங்கள் ஐயா நல்லையாவை இந்தப் பக்கம் காணவில்லையே.........

ப: எங்கள் ஐயா இப்போது தேர்தல் ஐயா ஆகிவிட்டார். அதாவது தேர்தல் காலத்தில் தானே வருகிறார். அப்படி வந்தவரும் கட்டுக் காசைக் கட்டி விட்டுக்கொழும்புக்குப்போனவர் இன்னும் தொகுதிக்குத் திருப்பி வரவில்லையே.

## தமிழரசு கூட்டங்கள்

தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பின் வரும் இடங்களில் பின் வரும் தேதிகளில் நடைபெற விருப்பதாக யாழ்-பிரதேச தமிழரசுக் கட்சி அலுவலகம் அறிவித்திருக்கிறது. இங்கு தரப்படுவன ஜனவரி மாதத்துக்கான கூட்டங்கள். பெப்ரவரி, மார்ச் மாதக் கூட்டங்கள் பற்றிய தகவல் பின்னர் வெளியிடப்படும்.

**முல்லைத்தீவு**
**23-1-60-ல் கூட்டம்**

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், துரைரத்தினம், கே. ஜெயக்கொடி, ஏ. சிவசுந்தரம், ஏ. அமிர்தலிங்கம், எஸ். சுப்பிரமணியம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், செனட்டர் ஜி. நல்லையா.

**யாழ்ப்பாணம்**
**24-1-60-ல் கூட்டம்**

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், எம். பாலசுந்தரம், ஏ. சிவசுந்தரம், எஸ். கதிரவேற்பிள்ளை, டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன், செனட்டர் ஜி. நல்லையா.

**சாவகச்சேரி**
**30-1-60-ல் கூட்டம்**

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஏ. அமிர்தலிங்கம், எம். பாலசுந்தரம், வி. என் நவரத்தினம், செனட்டர் ஜி நல்லையா.

**உடுப்பிட்டி**
**31-1-60-ல் கூட்டம்**

பேச்சாளர்கள்: திருவாளர்கள் எஸ். ஜே. வி. செல்வநாயகம், வி. ஏ. கந்தையா, ஏ. அமிர்தலிங்கம், கே. துரைரத்தினம், வி. தர்மலிங்கம், எஸ். கதிரவேற்பிள்ளை, கே. ஜெயக்கொடி, ஏ. சிவசுந்தரம், வி. என். நவரத்தினம், டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன்.


# அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

**ஸ்பேமடோன் கொம்பவுண்ட்**
**( Spermatone Compound )**

**ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின்** மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

**8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25**
**வி. பி. பி. தனி.**

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,
டாக்டர்

**'மோடர்ன் கிலினிக்'**
**(MODERN CLINIC)**
**255, காலி ரோட், கொழும்பு-4.**
பம்பலப்பிட்டிய கன்வண்ட் எதிரில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

## "தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

இலங்கையின் பல பகுதிகளிலே தமிழியக்க வாரஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலே காணப்பட்ட சுவரொட்டி விளம்பரங்கள் மக்களுக்குத் தமிழியக்கத்தின் நோக்கத்தையும் பயனையும் உள்ளத்திற் பதியத்தக்க முறையிலே எடுத்துரைத்தன. இளந் தமிழர் இயக்கமும், அகில இலங்கைத் தமிழ் மொழி இயக்கமும் வேறு பல நிலையங்களும் சிறந்த தொண்டாற்றியுள்ளன. தமிழ்ப் பத்திரிகைகள் பல தமிழியக்கத்துக்குப் பெரும் ஆதரவளித்தமை மகிழ்ச்சிக்குரியது.

### மாற்றம்

சில பத்திரிகையாளர்கள் இனித்தம் பத்திரிகைகளை தமிழ் முகவரியுடன் அனுப்புவதற்கு உடன்பட்டுளர். மக்களிடையே தோன்றியுள்ள தமிழுணர்ச்சி பெரும் பயன் அளிக்கும் என்பதிலே தடையில்லை. உள்ளூர் ஆட்சி நிலையங்கள் பல எல்லாக் கருமங்களையும் தமிழிலே செய்ய முன் வந்திருக்கின்றன. இதுவரையும் திருமுக ஏடுகளை ஆங்கிலத்தில் மட்டுமே அச்சிட்டு வைத்திருந்த பலர் இப்பொழுது தமிழிலும் அச்சிடுவிக்கத் தொடங்கியுளர். இத்துறையிலே தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துடன் தொடர்புடைய மருத்துவ கலாநிதி ஒருவர் முன்னோடியாக விளங்குகிறார். இவரைப் பின்பற்றி ஏனைய மருத்துவ கலாநிதிகளும், வழக்கறிஞர்களும் தமிழுக்கு முதன்மை கொடுப்பார்கள் என்றே எண்ணுகிறோம்.

### சத்தியாக்கிரகம்

மக்களிடையே தோன்றியுள்ள தமிழுணர்ச்சியை ஊக்கித் தமிழர்கள் யாவரும் யாவற்றையுந் தமிழிலே செய்கிறார்கள் எனும் நிலைமையை விரைவிலே உண்டாக்குதற்குத் தமிழியக்கத் தொண்டர்கள் முயலுதல் வேண்டும்.

"இன்னும் தமிழுக்கு முதன்மை கொடுக்காத பத்திரிகையாளர்களும், தமிழறிஞர்களும், தமிழ்ப் பெரியார்களும், பொது நிலையங்களின் நிருவாகிகளும் பலர் உளர். இவர்களை எப்படி ஊக்குவது?" என்று தொண்டர்கள் அடிக்கடி எழுதுகிறார்கள்?

இவர்களையெல்லாம் தொண்டர்கள் சந்தித்துத் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேருமாறு கேட்டல் நன்று. இவர்கள் தொண்டர்களாகச் சேர மறுத்தால் தமிழிலே எல்லாக் கருமங்களையும் செய்யச் சொல்லி இவர்களைக் கேட்குக. பல தொண்டர்கள் சேர்ந்து கையெழுத்திட்டு வேண்டுகோள் விடுக்குக. இவற்றினாலே பயனில்லை எனின் சத்தியாக்கிரகம்தான் வழி என்பதை இவர்களுக்கு அறிவிக்குக.

### அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்கள்

அரிசிப் பங்கீட்டுப் புத்தகங்களைப் பெறுதற்கு நிரப்பி அனுப்புவதற்குரிய குடியிருப்பவர்களின் அட்டவணைப் படிவங்கள் ஒவ்வொரு வீட்டிலும் கொடுக்கப்பட்டுள. இப்படிவங்களிலே குறிப்புக்கள் தமிழ் சிங்களம், ஆங்கிலம் எனும் மூன்று மொழிகளும் அச்சிடப்பட்டுள. இப் படிவங்கள் யாவற்றையும் தமிழிலே நிரப்பி அனுப்பும்படி தமிழ் பேசும் மக்கள் யாவரையுங் கேட்டுக்கொள்ளுகிறோம். இத்துறையிலே தமிழியக்கத் தொண்டர்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தல் வேண்டும்.

### தொண்டு

தமிழியக்கத்தை எங்கும் பரப்பித் தமிழை வாழவைத்தற்குப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள். இதனை வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் தமிழ்த்தாயின் பெயரால் ஒரு வேண்டுகோள் விடுகிறோம். உடனே ஓர் அஞ்சல் அட்டையில் உங்கள் பெயர், முகவரி, வயது, தொழில் என்பவற்றை எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம் மே/பா சுதந்திரன் த. பெ. 1183, கொழும்பு, எனும் முகவரிக்கு அனுப்புங்கள். உங்கள் நண்பர்களையும் இவ்வாறு செய்யுமாறு தூண்டுங்கள். தமிழை வளர்த்தற்கு-வாழவைப்பதற்கு-இந்த ஒரு சிறு தொண்டைத்தானும் செய்தற்குத் திரண்டு வாருங்கள். செலவின்றிச் சிரமமின்றி எல்லோரும் செய்யத்தக்கது இப்பணி, உங்கள் பங்கை நிறைவேற்றுவதற்கு இன்றே நீங்கள் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர்ந்துழைக்க வேண்டாமா?

தமிழியக்கத் தொண்டர்கள் விவரம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

## அம்பாறை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோரின் சூழ்ச்சியாலும், தம் இனத்தவரைக் காட்டிக் கொடுத்து கழுத்தறுபட வைக்கும் 'பண்பு' காரணமாகவும் கல்முனைப் பகுதியில் இல்லாமல் அம்பாறைக்குப் போகவேண்டியதாயிற்று என்ற தகவல் 10-1-60 சுதந்திரன் இதழில் தரப்பட்டது. அம்பாறையில் கச்சேரி ஸ்தாபிதமானதோடு சிங்களமே அங்கு அரசோச்சும் என்ற உண்மையும் மேற்படி இதழில் தெரிவிக்கப்பட்டது.

### கச்சேரி இடமாற்றம்

மேலும், ஜனாப்கள் காரியப்பரும் முஸ்தபாவும் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு தமிழரசுக் கட்சி சார்பில் கல்முனையில் போட்டியிடும் ஜனாப் மஷூர் மௌலானாவும் நிந்தவூர் பொத்துவில் தொகுதிகளில் இனப்பற்றுடைய முஸ்லிம்களும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவார்களேயானால் அம்பாறைக் கச்சேரியை முறைப்படி கல்முனைப் பகுதிக்குக் கொண்டுவர அவர்கள் முழுமூச்சோடு போராடுவார்கள் என்றும் சுதந்திரன் செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இதனால் தமக்கு ஏற்பட்டுவிட்ட ஆபத்தை உணர்ந்த ஜனாப்கள் காரியப்பரும் முஸ்தபாவும் பிரதமர் தஹநாயகாவின் காபந்து அரசாங்கத்தில் தாம் மந்திரிகளாக உள்ளதால் மேலிடத்தில் தமக்கிருக்கும் செல்வாக்கை உபயோகித்து தேர்தல் முடியும் வரை அம்பாறைக் கச்சேரி விஷயத்தை அப்படியே ஐஸ் பெட்டியில் போட்டாற் போன்று அமுக்கி வைத்துவிட்டதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இவர்களது தலையீட்டின் பேரிலேயே கச்சேரி வேலை செய்வது தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### பகிரங்க ரகசியம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்த இருவரும் வெற்றி பெற்று பிரதிநிதிகளாக வருவதானால் அம்பாறைக் கச்சேரி, வேலை செய்யத் தொடங்கும். சிங்களம் அங்கு அரசோச்சும். தமிழ் பேசும் மக்கள் திண்டாட வேண்டியதுதான். கடைசிவரையும் இவர்கள் மேற்படி கச்சேரியை கல்முனைப் பகுதிக்குக் கொண்டுவர முயற்சிக்கவே மாட்டார்கள் என்பது பகிரங்க ரகசியம்.

## கடவுளுக்குக் கடிதம்

எங்கும் நிறைந்தவா! ஒவ்வொரு வாரமும் நான் எழுதுவதில்லை; எழுதினாலும் நீட்டி முழக்குவதில்லை என்று குறைப்பட்டிருந்தீர்கள். அப்படியெல்லாம் எழுத 'சுதந்திரன்' என்ன 'கல்கி'யா? நானென்ன ராஜாஜியா?

நிற்க—

திருவெம்பாவையும் சுபமே முடிந்து அதிகாலை பஜனைக்காரரும் சுபமே தத்தம் வீடு போய்ச் சேர்ந்துவிட்டனர். இனி அவர்களை அடுத்த மார்கழிக்கு முன் தெருப் பக்கம் காண முடியாது. அதுபோலவே, அகில இலங்கை ஆனைப்பந்திக் காங்கிரஸின் தலைமைப் பீடத்துக் குருஜீ (ஜீ)யும், அவரது சிஷ்ய கோடிகள் எழுவரும் தேர்தல் விழாவில் பங்கு கொண்டு, பஜனை பாடிவரத் தொடங்கி விட்டார்கள். இந்த அகில இலங்கை ஆனைப்பந்தி பஜனைக் காங்கிரசார் கடந்த திருவெம்பாவைக்கு (தேர்தலுக்கு) ஊர்வலம் வந்ததன் பின்னர், குருவானவர் கடல் கடந்து உல்லாசப் பிரயாணம் செய்து வர, ஏனைய சிஷ்யர்கள் (கடந்த 'மார்கழியில்' இரண்டொருவர்தான்) வீட்டுக்குள் இருந்து தமிழ் வளர்த்து, வாயாலே பந்தல் கட்டி, அந்தரத்திலே அரண்மனை அமைத்து அரியாசனத்தின் கண் அமர்ந்து அரசோச்சி வந்தனர். (இங்கு கடைசிப் பகுதியை ஆறு வரிசையில் ஆரம்பித்து அடுக்கு மொழியில் எழுதியிருப்பதை தயவு செய்து கவனியுங்கள்) பின்னர் ஒருபடியாக அடுத்த திருவெம்பாவும் (தேர்தலும்) வந்து எல்லோரும் கமண்டல குண்டலங்களுடன் புறப்பட்டு விட்டார்கள் என்று அறிவீர்கள் இறைவா கச்சியேகம்பனே!


இந்த அகில இலங்கை ஆனைப்பந்தி பஜனைக் காங்கிரஸில் நீண்ட நாட்களாக பக்தி விசுவாசத்துடன் இருந்து வந்த ஒருவரும் இருக்கிறார். இவர் பல தடவை அமரர் வன்னியசிங்கத்துடன் போட்டியிட்டு-கச்சேரி வரை மேளதாள மாலை மத்தளங்களுடன் சென்று, குப்புற விழுந்து சந்தடியின்றி கொல்லைப்புறக் கதவால் திரும்பி வந்தவர்.

இவருடைய கிராமச் சங்க எல்லைக்குட்பட்ட கொக்குவில் கோண்டாவில் பகுதிகளில் கூட இவருக்கிருந்த ஆதரவு பிசுபிசுத்து விட்டதாக நமது உதவி நிருபர் விஸ்வாமித்திரர் பீ. சீ. போட்டிருக்கிறார்.

மேற் கொண்டு—

அரசியல் என்றால் எத்தனை ருத்தல் என்று கேட்கும் அப்புத்துரைகளும், கட்சிகளையும் கொள்கைகளையும் விளங்கிக் கொள்ளும் சக்தியற்ற பொன்னுத்துரைகளும், உறவு முறை பார்த்து வாக்கை விற்கும் சின்னத்துரைகளும் இன்னும் என்னென்ன துரைகள் உண்டோ அத்தனை துரைகளும் நன்றாக குளித்து, முழுகி, உண்டு, 'குடி'த்து சிவனே என்று ஆறி இருக்கிறார்கள். அவர்களுடைய மயக்கம் தெளியு முன்னர் அரசியல் தெரிந்த அறிவாளிகள், நியாயம் தெரிந்த நல்லவர்கள், தமிழ் ரத்தம் பீறிட்டுப் பாயும் இளைஞர்கள் எல்லோரும் ஒரு முகமாக தமிழரசுக் கட்சியின் கீழ் திரளுகின்றார்கள். மற்றவையெல்லாம் 'சிமோல்' விஷயங்கள்.

(12-ம் பக்கம் பார்க்க)

திறமாக நீர்ப்பாய்ச்சுவதற்குகந்த நம்பிக்கைவாய்ந்த பம்ப்-

**விங்கெட்**

நிர்மாண இயந்திரங்கள் உற்பத்திசெய்யும் உலகப்பிரசித்திபெற்ற மெஸ்ஸேர்ஸ் விங்கெட் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்ட இந்த அடக்கமான, உறுதிவாய்ந்த தண்ணீர் பம்ப்கள், அதிககாலம் மிகத்திறமான சேவையைத் தருகின்றன.

இவற்றின் பராமரிப்புச் செலவு மிக மிகக் குறைவு. பிசப் பொட்டா போட்டி லிங்களில் கிடைக்கும் வில்லியர்ஸ் 4 ஸ்றோக் பெற்றோல்/மண்ணெண்ணெய் என்ஜின்கள் பாவனைக்குச் சிக்கனமானவை. எம்மிடம் அவற்றில் பலரக உடைப்புகள் உள்ளன. ஹோஸ் குழாய்களும், கை உருளைகளும் கிடைக்கும்.

உப விநியோகஸ்தர்கள்:
ராஜரத்தினம் அன் கம்பெனி,
244, கே. கே. எஸ். ரோடு,
யாழ்ப்பாணம்,

முழு விபரங்களுக்கு எங்களை விசாரிக்கவும்:
தி கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்.
(பிரிட்டிஷ் பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது)
தபாற்பெட்டி 33. கொழும்பு.
காட்சி அறை: ஜெனரல் லேக்ஸ்ரோட்.
போன்: 7351.

**உயர்ந்த சேவை**

1½" மோடல்-மணித்தியாலம் 1500 - 6000 கலன் இறைக்கிறது.
2" மோடல்-மணித்தியாலம் 1680 - 11000 கலன் இறைக்கிறது.
3" மோடல்-மணித்தியாலம் 4800 - 16800 கலன் இறைக்கிறது.
டிலிவரிக்கேற்ப ஹெட்டும், சக்ஷன் லிவ்ட்டும் தேவை
ஆகக் கூடுதல் முழு ஹெட் 70 அடி
ஆகக் கூடுதல் சக்ஷன் லிவ்ட் 25 அடி

எமது பிரதிநிதியை விசாரிக்கவும்:
எம். பூபாலசிங்கம்,
244, கே. கே. எஸ், ரோட்,
யாழ்ப்பாணம். போன்


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே **நாஷனல்** பாட்டரிகளைப்





பாவிக்க ஆரம்பித்து
அதிக லாபம் பெற்று
ஆனந்தியுங்கள்.
நீடியகாலம் பாவிக்கிறது



விலையோ
மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்!
**எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,**
70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 143, மெயின்வீதி, காலி. போன்: 525


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைத் தமிழர் மகாசபையில்

## கொம்யூனிஸ்டு அதிகாரம்

## அத்துமீறி விட்டதால் அது சின்னபின்னமாகிறது

## பொறுப்புள்ள நிர்வாகிகள் ராஜிநாமா ஊழல்கள் அனைத்தும் அம்பலம்

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபை கொம்யுனிஸ்டு கட்சியின் ஓர் அங்கமாக இயங்கத் தொடங்கிவிட்டதால் சபைக்குள் பெரும் பிளவும் கொந்தளிப்பும் ஏற்பட்டிருப்பதாகவும் அதன் பயனாகச் சபையில் பல-மாற்றங்கள் ஏற்படவிருக்கின்றன என்றும் சுதந்திரன் ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் (29-11-59 இதழில்) கூறியது முற்றிலும் உண்மையாகி விட்டது.

சபையின் இணைச்செயலாளர்களில் ஒருவரான திரு இ. வி. செல்வரட்ணமும் பொருளாளர் திரு சி. இ. குணரத்தினமும் தமது பதவிகளை ராஜிநாமாச் செய்துள்ளதோடு மற்றும் பல நிர்வாக சபை உறுப்பினர்களும் தமது அங்கத்துவத்தைத் துறந்து வெளியேறிவிட்டனர். இன்னும் பெருந்தொகையானோர் வெளியேறவிருக்கிறார்கள்.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை கொம்யுனிஸ்டு கட்சியின் கைப்பொம்மையாகிவிட்டது என்ற உண்மை வெட்டவெளிச்சமாகியதும் அங்கத்தவர்கள் வெளியேற்றம் நடைபெறத் தொடங்கியிருக்கிறது.

சிறுபான்மைத் தமிழர்களின் பிரதிநிதித்துவ ஸ்தாபனமென்று தன்னை வர்ணித்துக்கொண்டும் தன் மூலம் தாழ்த்தப்பட்ட மக்களின் குரல் பாராளுமன்றம்வரை ஒலிக்க வேண்டுமெனவும் சொல்லியும்வந்தஇந்தஸ்தாபனம் தனதுகாரியக் கமிட்டி உறுப்பினரான திரு எஸ். கே. நல்லதம்பி கோப்பாய்த் தொகுதிப் பார்லிமென்ட் தேர்தலில் போட்டியிட முன்வந்ததை ஆதரிக்க மறுத்துவிட்டது. காரணம் கொம்யுனிஸ்டு கட்சி அபேட்சகர் திரு எஸ். பி. நடராசா அத்தொகுதியில் போட்டியிடுவதால் அவருக்குத் தாங்கள் முழு ஆதரவும் தரப்போவதாகச் சபையில் பெரும்பான்மையினரான கொம்யுனிஸ்டு கையாட்கள் முடிவு செய்து கொண்டதேயாகும்.

### உதவிச் செயலாளர் ராஜிநாமா

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த கமிட்டிக் கூட்டத்தில் திரு நல்லதம்பியை ஆதரிக்க முடியாதெனவும்கொம்யுனிஸ்டு கட்சிதான் தாழ்த்தப்பட்டவர்களின் ரட்சகரெனவும் அவர்கள் வற்புறுத்தி திரு நல்லதம்பியை ஆதரிக்கக் கோரி ஒருவரால் கொண்டுவரப்பட்ட பிரேரணையைத் தோற்கடித்தனர்.

சிறுபான்மைத் தமிழர் ஸ்தாபனம் சிறுபான்மைத் தமிழரான ஒருவரை ஆதரிக்காமல் அவருடன் போட்டியிடும் கொம்யுனிஸ்டு அபேட்சகரான (உயர் ஜாதி தமிழர்) ஒருவரை ஆதரிக்கச் சூழ்ச்சிகரமாக முடிவு செய்ததை அடுத்து மகாசபையின் உதவிச் செயலாளர்களில் ஒருவரான திரு இ. வி. செல்வரட்ணம் தமது பதவியை ராஜிநாமாச் செய்தார். திரு செல்வரட்ணம் சிறுபான்மைத் தமிழ் மக்களிடையே ஒரு சத்தியப் பிரமாண கமிஷனர் என்பதும் பி எஸ்ஸி (லண்டன்) பட்டதாரி என்பதும் குறிப்பிடத்தக்கது.

மகாசபைத் தலைவரிடம் அவர் தாம் சமர்ப்பித்துள்ள ராஜிநாமாக் கடிதத்தில் சபையில் உள்ள ஊழல்கள் பலவற்றை அம்பலப்படுத்தியிருக்கிறார். அக்கடிதத்திலிருந்து சில பகுதிகள் வருமாறு:

### அரசியல் தொடர்பு

“நான் சிறுபான்மைத் தமிழர்களின் பிரச்னைகளை தீர்ப்பதற்கு அவர்களுக்கு ஓர் இயக்கம் தேவை என்ற கருத்துடையவன். அவ்வியக்கம் கட்சிப்பற்றற்ற முறையில் கருமங்களை ஆற்ற வேண்டுமென்பது எனது எண்ணம். உங்கள் இயக்கம் அப்படி நடக்க முயற்சிக்கவில்லை.

“உங்கள் இயக்கம் நீங்கள் எப்படிச் சொன்ன பொழுதிலும் ஓர் அரசியற் கட்சியைச் சார்ந்த அதிக அங்கத்தவர்களைக் கொண்டது. இதை உங்கள் சபை 10-1-60ல் நான் எடுத்துக் கூறியபொழுது ஓர் ஆட்சேபனையுமின்றி ஏற்றுக் கொண்டது.

“நீங்கள் ஓர் அரசியற் கட்சியைச் சேர்ந்திருக்கிறீர்கள். இணைக் காரியதரிசிகளிலொருவரான திரு க. பசுபதி, மகாசபைஸ்தாபன அமைப்புப் பொறுப்பாளரான திரு கே. டானியல், இன்னும் காரிய நிர்வாக சபை, பொது நிர்வாக சபையிலுள்ள பல அங்கத்தவர்கள் நீங்கள் சேர்ந்துள்ள கட்சியைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது சார்ந்தவர்களாகவோ இருக்கிறார்கள்.

### கட்சிக்கு ஆதரவு தேடுகிறார்கள்

“மகாசபையிலுள்ள பல அங்கத்தவர்கள் உங்களுக்கும், வேறுபல உங்கள் கட்சியைச் சேர்ந்த மகாசபை பிரமுகர்களுக்கும் கடமைப்பட்டவர்களென்ற எண்ணத்துடன் மகாசபையின் கொள்கைக்கு மாறாக உங்கள் கட்சிக்கு மறைமுகமாக ஆதரவு தேடும் வகையில் மகாசபையின் பேரில் முயற்சி செய்து வருகிறார்கள். மகாசபையின் சில பிரமுகர்கள், சில அங்கத்தவர்களை தங்கள் கட்சியில் சேரும்படி கேட்டதையும் நான் அறிவேன்.

### நம்பிக்கை இல்லை

“ஆகவே மகாசபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் சில கடமைப்பாடுகளின் அடிப்படையிலும் ஓர் அரசியல்கட்சிக்கு ஆதரவளிக்கும் அடிப்படையிலும் நடந்துகொள்வதால் மகாசபையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகவே மகாசபையிலிருந்து ஆழ்ந்த துக்கத்துடன் ராஜிநாமாச் செய்து கொள்கிறேன்”

மேற்கண்டவாறு திரு செல்வரட்ணம் தமது ராஜிநாமாக் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

### பொருளாளர் ராஜிநாமா

திரு செல்வரட்ணத்தைத் தைத் தொடர்ந்து பொருளாளர் திரு சி. இ. குணரத்தினமும் தமது பதவியை ராஜிநாமாச் செய்து வெளியேறியுள்ளார். அவர் தாம் சபைக்கு சமர்ப்பித்துள்ள ராஜிநாமாக் கடிதத்தில் பின்வருமாறு கூறியிருக்கிறார்:—

### கடிதம்

“மகாசபை அங்கத்தவர்கள் அரசியல் கட்சிகளில் அங்கம் வகித்தாலும்கூட மகாசபையின் தொண்டுகளிலோ கூட்டங்களிலோ கட்சிக் கொள்கைகளைப் பேசுவதற்கிடமில்லை. ஆனால் 10-1-60ல் நடந்த நிர்வாகசபை கூட்டத்தில் கட்சிப் பிரசாரமே நடந்தது.

“சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் அங்கம் வகிக்கும் ஒருவர் தனிப்பட்டமுறையில் சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிட்டால், மகாசபையின் அங்கத்தவர் எவரும், அவருக்கெதிராக வேலை செய்யக்கூடாது” என்ற எனது பிரேரணை அக்கூட்டத்தில் தோல்வியுற்றது. ஆகவே ஒரு சிறுபான்மைத் தமிழனுக்கு, அதிலும் ஒரு நிர்வாக சபை அங்கத்தவனுக்கு ஆதரவு கொடுக்க முடியாத நிலையில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை இருப்பதால் உண்மையில் அது இருந்தும் பிரயோசனம் இல்லை. அதில் எம்போன்ற கட்சிப்பற்றற்றவர்கள்

(13-ம் பக்கம் பார்க்க)



வரிசை : 2 கலைஞர் : 10 அறிமுகப்படுத்துகிறோம்

# சித்திரக் கலையில் சுடர்விடும் ‘சர்மா’

“காந்தன்”

கோபம் கொடியது,இல்லையா? கொடிய கோபம் கலைஞர்களுக்கு வருமானால் கேடில்லை. நாடு நலமடைகிறது; கலை வளம் பெறுகிறது; கலைஞனும் புகழடைகிறான். எப்படி?

சைத்திரிகர் (ஜெகநாத) சர்மாவுக்கு ஒருநாள் பொத்துக்கொண்டு வந்தது கோபம். பக்கத்திலே இருந்தது விறகுக்கட்டை ஒன்று. கூரிய கத்தி ஒன்று கண்ணில் பட்டது. இரண்டையும் எடுத்தார் கையில். அப்படியும் இப்படியும் வெட்டினார். முடிவில் கிடைத்தது நிர்வாணப் பெண் உருவம் ஒன்று.

அராலி சனசமூக நிலையத்தின் 10-வது ஆண்டு விழாவையொட்டி நடைபெற்ற கண்காட்சியில் மேற்படி உருவம் (மரச்சிலை) பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. பார்த்தவர்கள் பிரமித்தார்கள். இப்படியான அற்புத படைப்புக்கும் நம்மிடம் கலைஞர் இருக்கிறாரா என்று வியந்தார்கள். எந்தச் சூழ்நிலையில் அந்தப் படைப்பு கிடைத்தது என்பதை அப்போது அவர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். சரக்குத்தான் முக்கியம். அதனால் சூழ்நிலையைப் பற்றி அறிய அவர்கள் சுற்றிஅலையவில்லை.

முனீஸ்வரம் வடிவழகி தேவாலயத்தை அலங்கரிக்கும் நெய்வண்ணச் சித்திரங்களைப் பலரும் பார்த்திருக்கலாம். ரஸித்திருக்கலாம்; அவையெல்லாம் யாருடைய கை வண்ணம் என்பது தெரியுமா? நெய் வண்ணச் சித்திரமென்ன, நீர்வண்ணச் சித்திரங்களையும் நினைத்த மாத்திரத்தில் உருவாக்கி உயிர் கொடுக்கும் திறன் படைத்த பிரம்மாவின், அதாவது சர்மாவின் கை வண்ணம்தான் அவை.

‘சித்திரமும் கைப்பழக்கம் என்று சொல்வதுண்டென்றாலும், அந்த நாட்டம் இரத்தத்திலுமிருக்க வேண்டும்’ என்று கருத்துத்தெரிவிக்கும் சைத்திரிகர் திரு ‘சர்மா’. கலையபிமானம் மிக்க ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். நல்லூர்வாசி. 11-5-23-ல் பிறந்தார்; தகப்பனார்: சுப்பிரமணியஐயர்.

கண்ணாடியில் இவர் வரைந்த சித்திரங்கள் எல்லாவற்றையும் எங்கெங்கே இருக்கின்றன என்று தேடிப் பிடித்து ஒன்று சேர்த்தால் அவை ஒரு அருமையான கண்காட்சிக்குப் போதும். லட்சுமி, சிவன், பார்வதி, பிள்ளையார் படங்களை நூற்றுக்கணக்கில் வரைந்திருக்கிறார். “கலைச் செல்வி” முதல் இதழின் அட்டைப் படமும், ‘தேவனி’ன் “வான வெளியிலே......” என்ற நூலுக்கு வரையப்பட்ட முகப்புப்படமும் பலரும் பாராட்டியவையாகும்.

‘ஓவியத்துறையில் என்னுடைய மனோதிருப்திதான் நான் கண்ட மிச்சம்—கலை கலைக்காகவே என்ற உணர்ச்சிதான் உந்துகிறது. பண வருவாய் என்பதே இல்லை’ என்று தாம் ஈடுபட்டுள்ள துறையின் நிலைமை பற்றி மனச்சலிப்போடு கருத்துத் தெரிவிக்கும் சர்மா வாழ்க்கையை நடத்த நல்லூர் ஸ்ரீ நிரஞ்சனா அச்சகத்தை நிர்வகித்து வருகின்றார். இவரது மனைவியார் திருவாட்டி இந்திராட்சி; இவர்களுக்கு இரு ஆண்களும் ஒரு பெண்ணுமாக மூன்று குழந்தைகள்.

“குழந்தைகள் வரையும் சித்திரங்களில்தான் ரசனை மிகவுண்டு. ஆனால் குழந்தைகளின் சித்திரக்கலை உருப்பட இலங்கையில் சித்திர பாடத்திட்டத்தில் அவசியம் மாற்றம் வேண்டும்” என அனுபவ வாயிலாக அபிப்பிராயம் தெரிவிக்கிறார் திரு சர்மா.

சித்திரக்கலையை பிறர் உதவியின்றித் தாமாகவே பயின்று, அதில் சுடர்விடும் திரு சர்மா, இன்று குன்றிலிட்ட தீபமாக விளங்க வேண்டியவர்; ஆனால், சிதறு பூக்களாக இவரது சித்திரங்கள் அங்கங்கே தெறித்து போய்விட்டன. திரு சர்மாவின் சித்திரங்கள் தொகுத்துச் சேர்க்கப்பட்டால் அவை, கலைப் பொக்கிஷமாகப் பரிமளிக்கும்.

இவருக்குப் பிடித்தன: கனுதேசாய், சட்டர்ஜி, ரபேல், டாவின்ஸி, தனிமை, [illegible] பிடிக்காதவை: [illegible] பெருமை.

வரதர் வெளியீடு

G. C. E. இந்து சமய பாடம்

1960 டிசம்பர் மாதப் பரீட்சை தொடக்கமாக உள்ள புதிய பாடத் திட்டத்தின்படி தொகுக்கப் பெற்ற நூல்.

சைவ சமய பாடத் திரட்டு
(SAIVAISM)

வித்துவான் பொன். முத்துக்குமாரன் பி. ஓ. எல்.
பண்டிதர் ச. பஞ்சாட்சரசர்மா

ஆகிய இருவரும் சேர்ந்து எழுதிய பதவுரை, குறிப்புரை, விளக்கங்கள், பயிற்சி வினா-விடைகள், அட்டவணைகள் யாவும் அடங்கியது.

விலை ரூ. 3-25. (பார்சல் செலவு வேறு)

பரீட்சைக்குப் பயில்வோருக்குக் கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த புத்தகம் இதுவே.

விற்பனையாளர்:-

ஆனந்தா அச்சகப் புத்தகசாலை,
226, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். போன்: 348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ச் 19-ம் நாள்! பொதுத் தேர்தல் நாள்!!

## இனத் துரோகிகள் அனைவரும் தோல்வி காணும் திருநாள்

### தமிழரசு அபேட்சகர்களின் வெற்றிப் பெருநாள் தமிழினத்தின் விடுதலை நன்னாள்

பொதுத் தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் தேர்தல் பிரசாரமே முக்கிய இடம் பெறுகிறது.

பொதுத் தேர்தல் காலத்திலேதான் புற்றீசல்கள் போல பலரும் புறப்படுவார்கள். வகுப்புவாத கோஷங்களைக் கிளப்புவார்கள். பணத்தை வாரி இறைப்பார்கள். "வானத்தை வில்லாக வளைப்பேன், மணலைக் கயிறாகத் திரிப்பேன், கடலை இறைத்துக் கட்டாந்தரையாக்குவேன், என்னையே தெரிவு செய்யுங்கள்!" என்று சண்டப்பிரசண்ட அண்டப் புளுகுகளை அவிழ்த்து விடுவார்கள்.

#### இவர்கள்தான் அரசியல்வாதிகள்

நாம் ஏமாந்துவிட்டால் பிறகு அவர்களைக் காணவே முடியாது. தேசம் தேசமாகப் பறப்பார்கள். தூர கிழக்கு யாத்திரை செய்வார்கள். கோடைக்கானல், குற்றாலம் குளிர் வாசஸ் தலங்களுக்குப் போவார்கள். தத்தம் பதவிக்கு ஆபத்து என்று தெரிந்தால் தாம் மேற்கொண்ட பிரயாணத்தையும் பாதி வழியில் நிறுத்திவிட்டுப் பறந்தடித்துக் கொண்டு வருவார்கள். இத்தகைய எத்தர்கள் தான் 'உயர்தர' அரசியல் வாதிகளாக இலங்கையில் இடம் பெற்றிருக்கிறார்கள், சிங்கள, தமிழ் சமூகங்களில்!

இவர்களை நம்பிய தன் கதியை நாடு இன்று அனுபவிக்கிறது. நாமும் அனுபவிக்கிறோம். ஆனால் மீண்டும் தருணம் கிடைத்திருக்கிறது நமக்கு, நமது விதியை நாமே நிர்ணயஞ் செய்து கொள்ள. நாம் என்ன முடிவு செய்துகொள்ளப் போகிறோம்? நமக்கு நாமே வாழ்வை வகுத்துக் கொள்வோமா? இன்றேல் தாழ்வை, தன்மான இழப்பை வருவித்துக்கொள்வோமா?

#### தமிழ் பேசும் மக்கள் நிலை

தமிழ்ப்பேசும் பெருமக்களாகிய நாம் எந்தக் கட்சியை—எந்த அபேட்சகர்களை நமது பிரதிநிதிகளாகத் தெரிந்தெடுக்கப் போகிறோம்? நமது முடிவுதானென்ன? ஒரு கணஞ் சிந்தித்துப்பார்க்க வேண்டும். நாட்டில் நமது இன்றைய நிலையென்ன?

தமிழ்ப்பேசுமினம் மொழியுரிமையற்று, குடியுரிமையற்று, வாக்குரிமையற்று, வாழுமுரிமையற்று வாடுகிறது; வருந்துகிறது. மலைநாட்டுத் தமிழ்ச் சகோதரர்கள்—இலட்சக்கணக்கானோரை குடியுரிமையும், வாக்குரிமையுமற்ற அவல நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது ஆட்சிப்பீடம்! சிங்களம்மட்டும் சட்டத்தால் தமிழுக்கு நாட்டில் இடமில்லை என்ற கட்டாய நிலை வந்துவிட்டது தமிழ்ப் பிரதேசங்கள் எல்லையற்ற சிங்களக் குடியேற்றத்தால் சர்வ சிங்கள மயமாகின்றன. தமிழினம் கண்ணியமாக வாழ முடியாதென்பதை 1958 மே—ஜூன் வகுப்புக் கலவரம் நிதர்சனமாக எடுத்துக்காட்டி விட்டது.

#### பாடம் கற்பிக்க வேண்டும்

இவ்வளவுக்கும் ஆதரவும், ஆக்கமும், ஊக்கமும் அளித்தவை கடந்த காலத்தில் ஆட்சி நடத்திய அரசாங்கங்களே குறிப்பாக, அந்த அரசாங்கங்களுக்கு ஆதரவளித்த தமிழ்ப் பேசுமினத்தைச் சேர்ந்த துரோகிகளே என்பதை நாம் மறக்கக் கூடாது. இந்த நினைவின் அடிப்படையிலேதான் நிகழவிருக்கும் பொதுத் தேர்தலின்போது நல்ல தீர்ப்பை நாம் வழங்க வேண்டும். இனத் துரோகிகளுக்கும், எத்தர்களுக்கும், எட்டப்பர்களுக்கும், காட்டிக் கொடுக்கும் கயவர்களுக்கும், சுயேச்சை 'மூன்று தலைக் கழுதை'களுக்கும் தக்க

---

நாவேந்தன்

---

பாடம் கற்பிக்க வேண்டும். இது நமது கடமை; உரிமை.

#### தமிழரசுக் கட்சி

'நமக்கு நாமே' என்ற நம்பிக்கையுடன் தமிழ்ப் பேசுமினம் ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒரே கட்சியாக, ஒரே கொடியின்கீழ் ஒன்று கூடும் போதுதான் நாமுரிமை பெற முடியும் அந்த அரிய நிலைக்கு அழைத்துச் செல்லக்கூடிய தலைவர்களைக் கொண்ட ஒரு அமைப்பு—கட்சி எது? இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒன்றுதான் தமிழினத்தின் விடுதலையை, உரிமைகளை மீட்டுத் தரக்கூடிய தலைவர்களையும், கொள்கைகளையும் கொண்ட ஒரே ஒரு அமைப்பாகும். கடந்த பத்தாண்டுகளாகத் தமிழ்ப் பேசுமினத்தின் ஏகப் பிரதிநிதியாக, உரிமைக் காவலனாக நின்று விளங்குவதும் தமிழரசுக் கட்சியேதான். பதவிக்கோ, பணத்துக்கோ கொள்கைகளைத் துறந்து, இனத்தை அடகுவைக்கும் எத்தர்களில்லாத, மாசு மறுவற்ற, தமிழ்ப்பேசும் மக்களின் ஒரே ஒரு அரசியல் இயக்கம் இலங்கைத் தமிழரசுக் கட்சியேயாகும்.

இந்த உண்மையை உணர்ந்து நாம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களையே பிரதிநிதிகளாகத் தெரிவு செய்வோமானால் நமக்கு நாமே நன்மை செய்தவர்களாவோம். அவர்கள் வெற்றியே இனத்தின் வெற்றி அவர்கள் அனைவரும் வெற்றியடைவது சர்வ நிச்சயம் என்ற நிலை இப்பொழுதே உருவாகிக் கொண்டிருக்கிறது. அந்த நிலை இன்னு பலப்பட நமதுழைப்பு அவசியம்.

#### வேடம் போடுகிறார்கள்

கடந்த காலத்தில் தமிழ்ப் பேசுமினத்தைக் காட்டிக் கொடுத்த கயவர்கள் வெவ்வேறு போர்வையில், வெவ்வேறு கோஷங்களுடன் வாக்குப் பிச்சை கேட்டு வருகிறார்கள் நம்முன். பழிக்குப் பழி வாங்குதலை விடுத்துப் பல்லிளித்து நிற்குந் தருணமல்ல இது! சுயேச்சைகளாகவும் தமிழ்க் காங்கிரசுகளாகவும், ஏட்டு முன்னணிப் பேச்சாளர்களாகவும், இன்னைக் கட்சியினராகவும் வருமிவர்களை நாம் இனங்கண்டு தக்க பதில் தரத் தவறக்கூடாது. இந்த யு. என். பி., எம் ஈ. பி. தாசர்களுக்கெல்லாம் நோக்கம் ஒன்றுதான், தமது சுயநலம் பேணுதல்! இவர்கள் பேச்சில் தேனொழுகும். தியாக வீரர்களாக, தமிழினத்தின் இரட்சகர்களாக, ஐக்கியத்தின் காவலராக வேடம் போடுகிறார்கள். பலே! தேர்தல் முடியும்வரை தான் இந்த வேடமெல்லாம். இவர்களைப்பற்றி முன்னாள் ஊர்காவற்றுறைத் தொகுதிப் பிரதிநிதியும், தமிழரசுப் பிரமுகரும் பிரபல நியாயவாதியுமான திரு வே. அ. கந்தையா கூறிய கதையை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

#### கந்தையா கருத்து

"ஐக்கிய முன்னணி, சுயேச்சை, காங்கிரஸ், தமிழ்ப் பேசும் முன்னணி என்ற மாறு வேடங்களில் எல்லாம் உலாவும் இந்த எத்தர்களின் கட்சிகளும், இலட்சியங்களும் தேர்தல் காலத்தில் மாரி காலக் கொசுக் கூட்டத்தைப் போல உற்பத்தியாகித் தேர்தல் முடிந்ததும் நெடுந்தீவு மாடுகளைப் போலக் கட்டறுத்துக் கொள்கை துறந்து குத்துக்கரணமடித்துப் பறந்துவிடும்."

#### என்ன பதில்?

இன்று நம்முன் அபேட்சகர்களாக கையேந்தி நிற்பவர்களில் இந்த எத்தர் கூட்டத்தைச் சேர்ந்த பலருமிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

இவர்களையெல்லாம் ஆதரித்து அபேட்சகர்களாக நம்முன் நிறுத்தியவர்களின் மேதைத் தனத்திற்குக் கைமாறு காட்டத் தவறலாமா? தமிழரசு ஒன்றே தமிழினத்திற்கு விமோசனமளிக்கும் என்பதைத் தெரிந்தும், சுயநலத்தால், பதவியாசையால் தேர்தலில் போட்டியிடத் துணிந்தவர்களுக்கு, கட்டுப்பணச் சலுகை தேடி ஆலாய்ப் பறந்தவர்களுக்கு ஆதரவளித்திருக்கிறார்கள் திருவாளர்கள் ஜீ ஜீ பொன்னம்பலம், அடங்காத் தமிழர் சுந்தரலிங்கம், என். எம் பெரேரா கம்பனியார்! இதிலெல்லாம் அவர்களுக்குக் கொள்கை வேறுபாடு எதுவுமே கிடையாது. இவர்களுக்கு ஒரு அபேட்சகர் தேவை. அவர்களுக்கு ஒரு கட்சி தேவை. ஆளை, ஆளைப் பார்த்துப் பச்சை அரசியல் விபசாரம் புரிந்திருக்கிறார்கள். அதற்குத் தமிழ்ப் பேசும் பெருமக்களிடையே

(13-ம் பக்கம் பார்க்க)

## இ. தி. மு. க. பொங்கல் விழா

### பொதுச் செயலாளர் பேச்சு

"அகில உலகமும் விமரிசையாகக் கொண்டாடுகிறது மே தினத்தை. அதே போல திராவிடப் பெருங்குடி மக்கள் பொங்கல் விழாவைக் கொண்டாட வேண்டும்" என்று இ. தி. மு. க. பொதுச் செயலாளர் திரு. இரா அதிமணி மேற்படி கழகம் கொண்டாடிய பொங்கல் விழாவில் பேசும் போது குறிப்பிட்டார்.

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக சார்பில் 17-1-60-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை கொழும்பு லெயாட்ஸ் புராட்வே நாராயண குரு மண்டபத்தில் பொங்கல்விழா இயல், இசை, நாடகத்தோடு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு திரு. வி. எஸ். இரத்தினம் தலைமை தாங்கினார்.

தலைவர் தமது தலைமை உரையில் சமுதாய முன்னேற்றங் கருதி உழைக்கும் இ. தி. மு. கழகம்தான் பொங்கல் விழாவை அதிக அக்கறையோடு கொண்டாடுகிறதென்றும் மற்ற கட்சிகள் தமிழருக்காகவே உயிர் வாழ்வதாகக் கூறினாலும் இப்படிப்பட்ட சமுதாய விழாக்களை கொண்டாட முன் வராதிருப்பது வருந்தத்தக்கதென்றும் குறிப்பிட்டார்.

பொதுச்செயலாளர் இரா. அதிமணி பேசும்போது சொன்னதாவது:-

"பொங்கல்விழா தமிழ் சமுதாயத்திற்கு முக்கிய விழா அதன் அருமை தெரியாதவர்கள் உலக அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இன்றைய சூழ்நிலையில் இவ் விழா முக்கியமானதா என்று கூடக் கருதலாம் ஆனால் அகில உலகமும் கொண்டாடும் மேதினவிழாவைப் போன்று திராவிட சமுதாயத்தில் இப் பொங்கல் விழாவும் ஒரு புதுமை வாய்ந்த விழாவாகும். இதனை எல்லாக் கட்சியாரும் கொண்டாடி மகிழ வேண்டும்.

"வள்ளுவராண்டு பிறப்பும் இத் திங்கள் முதல் நாளில் ஆரம்பமாகின்றது அவ்வாண்டுப் பிறப்பையும் சேர்த்து புத்தாண்டுப் பொங்கல் நாளாகப் பொங்கலைக் கொண்டாட வேண்டும்" இலங்கை பாராளுமன்றத் தேர்தலில் இ. தி மு. க. எந்தக் கட்சியை ஆதரிக்கும் என்ற முடிவை செயற்குழு கூடி தீர்மானிக்குமென்றும் திரு இரா. அதிமணி மேலும் குறிப்பிட்டார்.

எஸ். தியாகராஜா பொங்கல் பாட்டு பாடி எல்லோரையும் மகிழவைத்தார். செல்வி இராஜம் நடன விருந்து அளித்தார். திருவாளர்கள் எச் பத்மநாதன், ஏ. [illegible] சோமசுந்தரம் ஆகியோரும் பேசினார்கள்.

## செட்டிகுளத்தில் சுந்தரர்

### முப்பதுபேர் முன்னிலையில் தட்டத்தனியக் கத்தி ஓய்ந்தார்

வவுனியாத் தொகுதியில் போட்டியிடும் திரு சி. சுந்தரலிங்கம செட்டிகுளத்தில் தாம் கூட்டிய கூட்டமொன்றில் முப்பதுபேர் முன்னிலையில் தட்டத் தனியக் கத்தி ஓய்ந்தார். கடைசியில் தருணம் பார்த்து கம்பி நீட்டினார்.

செட்டிகுளம் கிராம முன்னேற்ற முன்றலில சுந்தரரின் கூட்டம் நடந்தது. தமது காரில் இருந்த ஒலி பெருக்கியைத் தாமே எடுத்துக்கொண்டுபோய் வைத்திருந்து, "பெரியோர்களே நான் கூட்டம் போடுகிறேன், வாருங்கள்...வாருங்கள்" என்று ஆனை தனுப் போட்டதுபோலப் பல தடவை கத்தினார். எப்படியோ முப்பது பேர்வரை சேர்ந்தார்கள். அரை மணி நேரம் தமிழரசுக் கட்சியைத் திட்டினார். அவ்வளவோடு அடங்கிப்போய், "இனி யாரும் கேள்விகள் கேட்க விரும்பினால் கேட்கலாம்" என்றார்.

கேட்டார்கள் சிலர். கிடைத்தவை ஆணித்தரமான பதில்கள் அல்ல; மழுப்பல்கள். பத்திரிகைச் செய்திகளும் முழுப் பொய் என்று முழங்கினார். கூட்டத்தில் சல சலப்பு ஏற்பட்டது குழப்பத்துக்கான சூழ்நிலை உருவாகியது.

அந்தக் கட்டத்தில் ஒரு பெரியவர் ஒலி வாங்கி (மைக்) முன்னால் சென்று, "தயவு செய்து ஐயாவுக்கு கஷ்டம் கொடுக்காதீர்கள்" என்று இரந்தார். பெரியவர் குறுக்கிட்ட தருணம் பார்த்து ஐயா நைஸாக நழுவித் தப்பினார்.

'எல்லாம் நான் தலைவர்' சுந்தரர் எங்கேகூட்டம்வைத்தாலும் இதே நிலைமைதான் உருவாகிறது.

—சங்கிலியன்


# ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை 1960

சாதாரண விஞ்ஞான தூயகணிதப் பயிற்சிகள்

ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு அற்லஸ் ஹோல் புதுப் பாடங்கள் தயாராகிவிட்டன

★ தமிழ்ப்பாஷை ★ பொதுவிஞ்ஞானம்
★ எண்கணிதம் ★ தூய கணிதம்
★ பொது விவேகம் ★ பூமிசாஸ்திரம்
சரித்திரம்

பரீட்சை விபரங்கட்கும் புதிய பாடத் திட்டத்திற்கும் இன்றே எழுதுங்கள்.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை, த. பெட்டி 649.
கொழும்பு—10.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமசமாஜிகள் ஆட்சிக்கு வர முடியுமா?

## தமிழரசே நீ வாழி!

—கா. சி. ஆனந்தன்—

ஈழத்தின் அரசியலை எண்ணிப் பார்த்து
எந்தமிழர்க் கோர் தந்தை 'ஈழக் காந்தி'
கோலத்தை நினைவினிலே கொண்டுவந்து
கொஞ்சம் போல் சிந்தனையில் குளிக்கப்
போனேன்......
ஆழத்தை நான் கண்டேன்! அடடா! மக்கள்
ஆயிரமாய்க் கூடுவது தமிழென்பாவின்
தாலிக்குப் பழம் பெருமை தருதற்காமோ?
தமிழரசே உன்கூட்டம் வெல்க! வெல்க!

காலிமுக சத்யாக்கிரகம்

பொய்யில்லை! கனவில்லை! புகழ்ச்சியில்லை!
புனைகதையில் வருகின்ற நிகழ்ச்சியில்லை!
ஐயய்யோ! ஒரு மகனைத் தந்தை முன்னே
அடிக்கின்றார்! அந்தரத்தில் வீசுகின்றார்!
நையத்தான் புடைக்கின்றார் ஏனையோரை!
நடுங்காது காலிமுகத் திடலில் ரத்த
மை கொண்டு வரைகின்றார் தமிழரேடு!
மானத்தி னேடன்றோ வாழி! வாழி!

திருமலை யாத்திரை

அருமை மகள் வளர் சிறுமி எட்டேஎட்டு
ஆண்டுடையாள் இளமொட்டு துள்ளிப்
பாய்ந்து
திருமலைக்குப் போகின்றாள்! பிஞ்சுக் கால்கள்
தெருவூர்ந்த காட்சிதனை மறக்கலாமோ?
உருமெலிந்த முதியோரும் மரணதேவன்
உத்தரவை எதிர்பார்க்கும் முதுமை நாளில்
மரியாத வம்சத்தின் மானங் காக்க
மாநாடு செல்கின்றார்! என்னே வீரம்!

சுதந்திர தின உண்ணாவிரதம்

உண்ணாமல் தமிழ்வாழ விரதங்கொண்டு
உச்சிவெயில் நேரத்தில் பசியைக்கூட
மண்ணாக மதித்திட்ட சிறுவரெல்லாம்
மட்டுநகர்ப் பசும்புல்லில் காய்கின்றார்கள்!
முன்னோடி வீரர்சிலர் தாடிவைத்து
மொழிமீது சபதத்தை எடுக்கின்றார்கள்!
என்னென்பேன் தமிழரசின் ஆற்றலுக்கு
இணையுண்டோ? பெருமைக்கு ஈடுமுண்டோ?

சிறீ எதிர்ப்புப் போராட்டம்

சிங்களத்தை வண்டியிலே வைத்து மாற்றார்
செந்தமிழர் மண்ணுக்கு அனுப்பக்
கண்டேன்!
அங்கெழுந்த போராட்டம் அடடா! பார்த்தால்
அஞ்சுகின்ற கோழையரும் வீரர் ஆவார்!
மங்கையரும் முதியோரும் தாரைக் காய்ச்சி
மரபுக்கு வந்த மறு துடைக்கின்றார்கள்!
சிங்கமெனப் பாய்ந்துவரும் நகரகாவற்
சேவகர்கள் பிடிக்கின்றார்! அடைக்கின்றார்கள்!

தடுப்புக் காவல்

தெரியாத குகையொன்று கண்டேன்! அங்கு
திடமோடு முத்திங்கள் மாண்டுபோன
அரியபுகழ் வன்னியரும் நண்பர் தாமும்
அடையுண்டு பட்ட துயர் கண்டு கொண்டேன்!
வெறியோர்கள் செய்கையினால் வறுமைதாக்க
வீட்டுக்குள் பூட்டுண்டார் மான வீரர்!
பெருமாந்தர்! அன்னாரைப் பெற்றுவிட்ட
பேரணியே தமிழரசே நீடுவாழி!

அவசரகாலம் 58

சீரான வழக்கறிஞர் செல்வரெல்லாம்
சிறைக்குள்ளே செல்கின்றார்! அதனைக் கண்டு
மாறான நெஞ்சங்கள் மருளக் கண்டேன்!
மந்திரிகள் துள்ளுவதும் கண்டேன்!
மெத்தக்
கூரான கத்திகளை மறவர் நெஞ்சில்
குத்துகின்ற பட்டாளக் கும்பல் கண்டேன்!
போராடுந் தமிழரசார் கொஞ்சமேனும்
புறமுதுகு காட்டாத தன்மை கண்டேன்!

மற்றயோர் என்ன செய்தார்?

கூதலுக்குக் கூத்தாடும் மயிலைப் போலும்
குளிர் மழைக்கு முளைக்கின்ற காளான்
போலும்
தேர்தலுக்கு வருகின்ற பெரியகைகாள்!
தெரியாமல் கேட்கின்றேன்! கோபிக்காதீர்!
சாதனையில் என் செய்தீர்? ஈழநாட்டுச்
சரித்திரமே நீ செப்பு! சான்றோர் யாவர்?
நீதிவழி நின்ற தமி ழரசே! தாயே
நில்லம்மா! வருகின்றேன்! நீதான் தெய்வம்!

## இவர்கள் தொழிலாளர்களை நம்புகிறார்கள்—ஏமாறப்போகிறார்கள்

### குறிப்பாக குடியேற்றக் கொள்கையால் தமிழர்களிடம் தலைகாட்ட முடியாது

### சிங்கள மக்களுக்கும் 'மாஜி'களின் வேஷம் அம்பலம்

"சமசமாஜக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி ஈட்டி அரசாங்கம் அமைத்தால்...?" இப்படி ஒரு கேள்வி தமிழ் பேசும் மக்களிடையே குறிப்பாக இளைஞர்களிடையே கிளம்புகிறது.

உண்மையைச் சொல்லப் போனால் இன்றைய நிலையில் இந்தக் கேள்விக்கு இடமே இல்லை. சமசமாஜக் கட்சி மொழிக் கொள்கையில் தன் வரிப்புலித் தோற்றத்தைத் தேர்தல் விஞ்ஞாபன மூலம் காட்டியபின்னர் தமிழ் பேசும் மக்கள் அவர்கள் விஷயத்தில் சிந்தனையைச் செலுத்த நியாயமே இல்லை.

#### பகற் கனவு

உறுதியான கொள்கையுடையவர்கள் தாம் என்று சமசமாஜக் கட்சியினர் நாள் எல்லாம் தம்பட்டமடித்து விட்டு இப்போது தேர்தல் நெருங்கியதும் குத்துக்கரணம் அடித்ததானது அவர்களின் வேஷத்தைச் சிங்களமக்களும் அறியும்படி செய்து விட்டது. ஆகவே சமசமாஜக் கட்சியினர் ஆட்சிக்கு வர நினைப்பது வெறும் பகற்கனவு.

இந்த நிலையில், "தமிழ் பேசும் மக்கள் சமசமாஜிஸ்டுகள் ஆட்சிக்கு வந்தால்?" என்ற ஆசங்கையைக் கிளப்பித் தமது சிந்தனையைக் குழப்பிக்கொள்ள வேண்டியதில்லை. வாதத்துக்காக அவர்கள் அப்படி வரலாம் என்று வைத்துக் கொண்டால் என்ன ஆகும் என்பதை இங்கு ஆராய்வது பயனுடையதாகும்.

#### பிரச்னைகள்

தமிழ் பேசும் மக்களின் இன்றைய முக்கிய பிரச்னைகள் நான்கு. அவை முறையே (1) தமிழின் அந்தஸ்து (2) சிங்களக் குடியேற்றம் (3) மலைநாட்டுத் தமிழர் பிரஜா உரிமை (4) சமஷ்டி அரசமைப்பு. இவற்றுள் சிங்களக் குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், மற்ற மூன்றும் கிடைக்க வேண்டும். தமிழரசுக் கட்சி அதற்கான முயற்சியில் தீவிரமாக ஈடுபடவே உறுதி பூண்டிருக்கிறது; ஈடுபட்டும் வருகிறது.

#### குடியேற்றம்

உடனடியாக நிறுத்தப்பட வேண்டியது திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்பதில் தமிழ் பேசும் மக்களிடையே கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தனி இடமிருந்தால்தான் அவர்களின் மொழி, பண்பாடு எல்லாம் வாழ முடியும். இலங்கைவாழ் தமிழர் ஒரு தனித் தேசிய இனம் என்பதற்கு யோக்கியாம்சம் தமிழ் பிரதேசம் என்ற ஒன்று இருப்பதுதான். சென்ற வருடக் கலவரப் பொழுது இந்த விஷயம் வெட்ட வெளிச்சமாய் விட்டது. ஆகையாற்றான் இருக்கிற நிலத்தையாவது காப்பாற்ற வேண்டும். ஏனென்[illegible] வேண்டும். ஒரு வீடு இல்லாததால்தான் [illegible] சமீப காலம் வரை ஒரு தேசியவினமாகக் கருதப்படவில்லை. வீடில்லாதவர்கள் ஓட்டாண்டிகளாக அலைந்து மடிந்து போக வேண்டியதுதான்.

#### சமசமாஜக் கொள்கை

இந்த விஷயத்தில் நமது சமசமாஜ நண்பர்கள் என்ன சொல்கிறார்கள்?

"எமது கொள்கை என்னவென்றால் நாட்டின் சட்டப்படி நடப்பதுதான்" என்கிறார்கள். அதாவது ஒரு குடியேற்றத் திட்டத்திற்கு ஆட்களைத் தெரியும்போது முதலில் அந்த சுற்று வட்டாரத்திலும், பின்பு மாவட்டத்திலும் இருக்கும் ஆட்களைத் தெரிவு செய்தபின் இலங்கை முழுவதிலுமிருந்தும் தெரிவு செய்ய வேண்டுமாம் இதில்தான் சூட்சுமம் இருக்கிறது.

சுந்தரம்

#### பறி கொள்ளைத் திட்டம்

மன்னார், வவனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் நிலமிருக்கிறது; ஆனால் போதிய ஆட்களில்லை. அப்போது இவ்விடங்களில் குடியேறுவதற்கு ஏனைய மாவட்டத்திலிருந்துதான் தெரிவு செய்ய வேண்டும். அப்போது நிலமில்லாது தவிக்கும் ஏனைய தமிழருக்கு என்ன நடக்கும்? ஒரு தமிழனுக்கு எதிராக சிங்கள மக்கள் போட்டிக்கு கிளம்புவார்கள்! அப்போ சிங்களக் குடியேற்றம் நடவாது வேறென்ன நடக்கும்? தமிழனின் நிலம் பறிபோகாது எப்படித் தப்பும்? இந்த பறிகொள்ளைதான் நம் தோழர்களின் திட்டத்தின்கீழ் நடக்கும்.

இன்னொரு முறை தமிழன் நம்பிக்கெட வேண்டாம் சென்ற காலங்களில் நம்பிக் கெட்டும் குடி முழுகவில்லை. ஆனால் இம்முறை குடிமுழுகி விடும்.

#### இனச் சுரண்டல்

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். மார்க்சிய வாதத்தின் ஒரு அம்சம் ஒரு மனிதன் இன்னொருவனை, ஒரு தேசம் இன்னொரு தேசத்தை, ஒரு இனம் இன்னொருவினத்தைச் சுரண்டுவதை எதிர்ப்பதே. அதன் பிரகாரந்தான் சமீபத்தில் தீபேத்தில் சென்●னாவின் ஆக்கிரமிப்பு நடந்தபொழுது இலங்கைச் சமசமாஜக் கட்சி இதை வன்மையாகக் கண்டித்தது. இதை வரவேற்கிறோம். ஆனால் இதே தோழர்கள் இலங்கைத் தமிழரைச் சிங்கள ஏகாதிபத்தியம் நசுக்கப் பார்க்கும்பொழுது ஏன் வாழாவிருக்கின்றனர்? மறைமுகமாக ஏன் ஆதரவு அளிக்கின்றனர்?

#### தொழிலாளர் ஆதரவு!

சமசமாஜக் கட்சிக்கு ஒரு அரசாங்கத்தை அமைக்குமளவுக்குப் போதிய செல்வாக்கு இல்லை என்று ஆரம்பத்தில் கூறியதையும் இங்கு விரிவாகப் பார்க்கலாம். தொழிலாளரின் பலத்தைத் தான் நம்புகிறார்கள் இவர்கள். ஆனால் இதே தொழிலாளர் அவர்களது மொழிக்கொள்கையை ஆதரிக்கிறார்களா? அது தானில்லை சென்ற கலவரத்தில் இவர்கள் நம்புந்தொழிலாளர்கள் பலர் தமிழரைத் தாக்கியதை மறுக்க முடியாது. தொழிலாளர்களில் பலர் தங்கள் சொந்த நலனுக்காகப் பல தடவை

(15-ம் பக்கம் பார்க்க)

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.

உங்கள் நீடித்த எழிலுக்கு
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
என்னும் அழகின் அணிகலனை
அணியுங்கள்.

பார்வைக்கு மட்டும் அழகல்ல, அவை நவீன நூலிழைகளால் இணைக்கப்பட்டிருப்பதால் உறுதியாக உழைக்கின்றது.

இன்னும் அழுக்குப் பிடியாமல், சுருங்காமல், மடிப்புக் குலையாமல் இருக்கக் கூடியது
'எலேட்'
சுப்பர்லோன் ஜோர்ஜட்
அற்புதமான டிசைன்களிலும் எடுப்பான கண்கவர் வர்ணங்களிலும் கிடைக்கின்றன.

குண்டன்மால்ஸ்,
லிமிட்டெட்,
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1960 ஜனவரி மாதம் 24-ந் தேதி

194ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.
தொலை பேசி எண்: 3411. த. பெ. 1183

# என். எம். எம்மாத்திரம்?

அச்சுவேலி என்னுமிடத்தில் அண்மையில் நடைபெற்ற சமசமாஜக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசிய பிரஸ்தாப கட்சியின் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா "அன்றும் இன்றும் எங்களது மொழிக் கொள்கை ஒன்றே" என்று கூறிவிட்டதாகத் தமிழ்த் தினசரிகளில் மட்டும் ஒரு செய்தி வெளிவந்திருப்பதைக் கண்டு கள்ளங்கபடமற்ற தமிழ் மக்கள் சிலரும், சமசமாஜிக் மயக்கத்தில் கட்டுண்ட தமிழ் வாலிபர் பலரும் சற்று ஆறுதலடைந்து மனநிம்மதியோடிருப்பதாகத் தெரிகிறது.

அன்றும் இன்றும் சமசமாஜிகளின் மொழிக் கொள்கை ஒன்றே என்ற கூற்றினை நாமும் மறுக்கவில்லை. ஆனால் அந்த ஒன்றான கொள்கை என்ன என்பதுதான் கேள்வி. அந்த ஒன்றான கொள்கை சம அந்தஸ்து கொள்கைதான் என்று யாராவது நம்புவார்களானால் நிச்சயம் அவர்கள் ஏமாற வேண்டியதுதான்!

அன்றும், இன்றும், இனிமேலும் சமசமாஜிஸ்டுகள் கடைப்பிடித்து வந்த — கடைப்பிடிக்கப்போகும் மொழிக் கொள்கை இதுதான்: எம். ஈ. பி. செய்தது போல் படு முட்டாள்தனமாகத் திடுதிப்பென்று தமிழ் மக்களிடையே சிங்களத்தைத் திணிக்காமல், காலஞ்சென்ற திரு. டி. எஸ் சேனநாயகாவின் காலத்தில் யு. என். பி. கைக்கொண்ட பாணியை அனுசரித்துப் படிப்படியாக வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவது போல சிங்களத்தைத் தமிழ் மக்களிடையே செலுத்துவதுதான் சமசமாஜிஸ்டுகளின் மொழிக் கொள்கையாகும்.

இந்தச் சூழ்ச்சிகரமான மொழிக் கொள்கை அன்றும் இன்றும் என்றும் ஒன்றாகவேதான் இருக்கிறது! இருக்கப் போகிறது! இந்தப் படிப்படியான பரிணாமத்தின் முதற் படிதான் அவர்கள் சம அந்தஸ்து எனப் பொருள்படும் Parity of Status என்ற 3 சொல் உறுதி நிலையிலிருந்து 95 சொல் வழ வழா நிலைக்கு இறங்கியிருப்பதாகும். இப்படியே படிப்படியாக இவர்கள் மொழிக் கொள்கை இறக்கம் கண்டுவிடாதென்பதற்கு டாக்டர் பெரேராவின் மேடை உறுதி எந்த வகையிலும் பயன்படப் போவதில்லை!

இந்த ஆட்டங் கண்ட மேடை உறுதியில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் இந்த ஆதாரமற்ற மேடைப் பேச்சுக்குத் தமிழ் மக்கள் மதிப்பளிக்க வேண்டும் என்று சமசமாஜிஸ்டுத் தோழர்கள் எதிர்பார்ப்பார்களேயானால், இரட்கம என்னும் சிங்களப் பிரதேசத்தில் சிங்கள மகாஜனங்களின் முன்னால் டாக்டர் பெரேரா ஆற்றியுள்ள கீழ்க்காணும் பேச்சுக்கு அவர்கள் தரும் வியாக்கியானம் என்ன, விளக்கம் என்ன என்று அறிய நாம் ஆசைப்படுகிறோம்.

(Ceylon Daily News Page 4, 1—10—1958.)

"The L.S.S.P. will pave the way for a united Ceylon, if the government is entrusted to us; and it will lead the way to **a Sinhalese Only Ceylon within ten years**, if the country adhere to our line of action. The ultimate end towards a **Sinhalese Only Ceylon**, without bloodshed, will be to give the Sinhalese the Sinhalese language, and the Tamils the Tamil language, thus enabling the Tamils to take to the study of Sinhalese, the language of the majority."

மேற்படி வாசகத்தின் தமிழாக்கம் பின்வருமாறு:

[இலங்கை டெய்லி நியூஸ் பத்திரிகை 4ம் பக்கம் 1-10-58]

"ஆட்சிப் பொறுப்பு எம்மிடம் ஒப்படைக்கப்படுமாயின் ஓர் ஐக்கிய இலங்கை உருவாவதற்கு சமசமாஜக் கட்சி வழிவகுக்கும் நாங்கள் கடைப்பிடிக்கும் செயல் முறைகளை நாடு ஏற்றுக்கொள்ளுமாயின் பத்து வருடங்களுக்கிடையில் இலங்கை தனிச் சிங்கள மயமாக்கப்படுவதற்கு வழிகோலப்படும். இரத்தம் சிந்தாமல், இறுதி முடிவில் இலங்கையை தனிச் சிங்கள மயமாக்குவதற்கு உள்ள (தந்திரமான) வழி சிங்களவர்களுக்கு சிங்களத்தையும் தமிழருக்குத் தமிழையும் (கொடுப்பதுபோல்) கொடுத்து அதன்மூலம் பெரும்பான்மை மக்களின் மொழியாகிய சிங்களத்தைத் தமிழ் மக்கள் கற்றுக்கொள்ளும்படி செய்வதேயாகும்."

அன்றும் இன்றும் என்றும் சமசமாஜக் கட்சியின் அந்தரங்க நோக்கம் என்ன என்பது இப்போது புலனாகிறதல்லவா? தனிச் சிங்கள மயமான இலங்கையை உருவாக்குவதுதான் அவர்களுடைய இறுதியான நோக்கம் என்பதற்கு இதைவிட வேறு ஆதாரம் என்ன வேண்டியிருக்கிறது? அதற்காக அவர்கள் கடைப்பிடிக்கும் Line of action (செயல் முறைகள்) தான் முதலில் சமஅந்தஸ்து, படிப்படியாக உத்தியோக அந்தஸ்து அப்புறம் உரிய அந்தஸ்து...... முதலியன!

தமிழ் மக்களுக்குத் தமிழைக் கொடுப்போம், தமிழை வளர்ப்போம் என்று சொல்வதெல்லாம் தமிழர் மீதும் தமிழ்மீதும் கொண்ட காதலால் அல்ல என்பதும், அப்படி இனுக்கு மொழி பேசி மயக்குவதன் மூலம், தமிழ் மக்களைச் சிங்களம் பயிலும்படி செய்து, படிப்படியாகத் தமிழை ஒழித்து, பத்தாண்டுக் காலத்தில் இலங்கையைத் தனிச் சிங்கள நாடாக்குவதே சமசமாஜிஸ்டுகளின் கபடத்தனமான நோக்கம் என்பதும் வெளிப்படை.

துலாம்பரமான இந்த உண்மையைக் காண முடியாதவர்கள் கபோதிகள்! அறிய முடியாதவர்கள் அனுதாபத்துக்குரியவர்கள்! உணர முடியாதவர்கள் இனப்பற்று மொழிப்பற்று அற்ற மரக்கட்டைகளாவர்!

ஒருவர் மேடையில் நின்று அழகாக என்ன கூறுகிறார் என்பது முக்கியமல்ல. நடைமுறையில் உண்மையாக என்ன செய்கிறார் என்பதுதான் முக்கியமாகும் காலஞ்சென்ற திரு டி. எஸ். சேனநாயகா பாராளுமன்றத்தின உள்ளும் புறமும் உரக்கக் கூவினர் 'சம அந்தஸ்து, சம அந்தஸ்து' என்று. ஆனால் நடைமுறையில் சிங்களத்தைத் திணித்து வந்தார். திரு டட்லி சேனநாயகா 'சம அந்தஸ்து' பல்லவியைத் தொடர்ந்து பாடிக்கொண்டே தமிழ்மொழிக்குக் குழிதோண்டினார் சேர் ஜோன் கொத்தலாவலை யாழ்ப்பாணத்துக் கொக்குவில் மேடையிலே 'சம அந்தஸ்தே என் கொள்கை' என்று சூளுரைத்தார்! ஆனால் நாம் தொடர்ந்து எச்சரித்து வந்தோம்—தகப்பன் சேனநாயகா காலத்திலிருந்தே சிவப்பு விளக்குக் காட்டி வந்தோம்—தமிழுக்கு ஆபத்து வரப்போகிறது—யு. என். பி. தனிச் சிங்களக் கொள்கையை தழுவப்போகிறது என்று.

மேடையில் நின்று போட்ட சமஅந்தஸ்து கோஷம் நிலை பெறவில்லை. நாம் கூறிய தீர்க்கதரிசனம்தான் களனித் தீர்மானத்தின்மூலம் நிதர்சனம் நடைபெற்றது.

டாக்டர் என். எம். பெரேரா அந்தரங்க சுத்தியுடையவராக இருக்கலாம். அவர் உள்ளத்தைத் தொட்டே பேசுகிறார் என்றும் வாதிக்கலாம். ஆனால் அவர் கட்சிக்குள்ளே மொழிப் பிரச்னையில் குழப்பமும் அபிப்பிராய பேதமும் தலைதூக்கிவிட்டன என்பது சுதந்திரன் அந்தரங்கமாக அறிந்து தமிழ் மக்களுக்கு முன்கூட்டியே தெரிவிக்கும் செய்தியாகும்.

டாக்டர் பெரேராவைத் தவிர ஏனையோர்—டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா உட்பட—சமசமாஜக் கட்சி தனது மொழிக் கொள்கையை வெளிப்படையாக மாற்றியமைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள்.

அதன் பெறுபேறுதான் சமசமாஜக் கட்சியின் மொழிக் கொள்கையில் வெளியில் தெரியும்படியாகத் திடீரென்று ஏற்பட்டிருக்கும் தடுமாற்றத்துக்குக் காரணமாகும். ஆட்சியைக் கைப்பற்றுவதற்குச் சிறுபான்மையினரான தமிழ் மக்களின் நல்லெண்ணம் துச்சமானது; பெரும்பான்மையினரான சிங்கள மக்களைத் திருப்திப்படுத்தினாலொழிய எந்தக் கட்சியும் ஆட்சிக்கு வரமுடியாது என்ற வாதம் சமசமாஜக் கட்சிக்குள்ளே தலை தூக்கிப் பலம் பெற்றுவருகிறது.

டாக்டர் பெரேராவைவிட சேர் ஜோன் திறந்த வாயினர். அக்கினிப்பு ஏற்பட்டபோது இனைத்து பேசுகிறோம் என்று அறியாது உளறுபவர். நல்லெண்ணத்துடன்தான் சம அந்தஸ்தை நிலைநாட்டுவேன் என்று கூறினார். ஆனால் ஆகவில்லை, நாட்டின் பிரதமராக விருந்தும், அசட்டுத் துணிவு நிறைந்தவராக இருந்தும் அவர் தமது சொல்நாணயத்தைக் காப்பாற்ற முடியவில்லை கட்சியின் நிர்ப்பந்தத்துக்கும் சிங்கள வெறியின் அழுத்தத்துக்கும் அடிபணிந்து போக வேண்டியவரானார். இந்த நிலையில டாக்டர் என் எம் எம்மாத்திரம் என்பதைத் தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

எந்த சிங்களக் கட்சியும் நமக்கு விமோசனம் அளிக்க முடியாது. தன்கையே தனக்குதவி என்ற தத்துவத்தின் படி தமிழ் பேசும் மக்களின் ஒரே ஸ்தாபனமான தமிழரசுக் கட்சியின் மூலந்தான் இலங்கைவாழ் தமிழ் பேசும் சமுதாயத்துக்கு விடிவு ஏற்பட முடியும் என்பதை உன்னிப்பாகவும் உறுதியாகவும் தமிழ் பேசும் மக்கள் உணர வேண்டும்.

# மந்திரிப் பதவி பறந்ததும் பிறந்தது புது ஆசை ஜீ.ஜீக்கு

## ஐக்கிய முன்னணி அமைக்க விரும்பியது துரோகத்தை மறைக்கவா, இல்லையா?

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி எதிர் வரும் பொதுத் தேர்தலை முன்னிட்டு தனது கொள்கைகளையும் திட்டங்களையும் ஒரு நான்கு பக்கப் பிரசுரமாக வெளியிட்டுள்ளது.

அந்தப் பிரசுரத்தின் முதல் வாக்கியம் அ. இ. தமிழ் காங்கிரஸின் நோக்கம் என்ன என்பதை விளக்குகிறது.

"சாதி, மொழி, சமயம் என்னும் வேறுபாடுள்ள மக்கட் தொகுதியினர் பூரண சமஅந்தஸ்தோடும் சமாதானத்துடனும், ஒருவர்க்கொருவர் நேசபான்மையுடனும் வாழுகின்ற ஓர் இலங்கையை உருவாக்குவதையே எமது இலட்சியமாகக்கொண்டு அதற்காக இதுகாறும் முயன்றோம், இனியும் இதையே எமது இலட்சியமாகக் கொண்டு முயலுவோம்," என்பது முதல் வாக்கியமாகும்.

1 இந்த வாக்கியத்திலிருந்து பின்வரும் வினாக்கள் கிளம்புகின்றன. தமிழுக்கும், தமிழருக்கும் எதுவித தொடைசலுமில்லாமல், இவ்வளவு பரந்த கட்டுப்பாடற்ற இலட்சியத்தோடு கூடிய ஒரு ஸ்தாபனத்துக்கு ரொம்பவும் குறுகியதாகத் "தமிழ்க் காங்கிரஸ்" என்று தமிழையும் இழுத்துப் பெயர் வைப்பானேன்? இவ்வளவு பெரிய இலட்சியத்துக்கு "அகில இலங்கைத் தேசிய காங்கிரஸ்" என்ற பெயர் மிகப் பொருத்தமாயிருக்குமல்லவா? தமிழ் மக்களைப் பெயரால் மயக்கி, நண்பர் டட்லி கோஷ்டியை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த இலட்சியத்தால் மயக்கலாம் என்பது அந்தரங்கத் திட்டமா?

சுதந்திரன்
அரசியல் விமர்சகர்

2. "சாதி"—"சம அந்தஸ்து"—மேற்படி வாக்கியத்தில் இந்த இரண்டு வார்த்தைகளும் எதைக் குறிக்கின்றன? சாதியென்றால் சிங்கள சாதி, தமிழ் சாதியென்று மட்டும் பொருள்படுமா அன்றேல் தமிழ் மக்களுக்குள்ளேயே இருந்து தமிழ் இனத்தின் பலத்தைப் பாதிக்கும் பல்வேறு உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற சாபத்தீட்டையும் குறிப்பதாகுமா? அப்படியானால் தாழ்த்தப்பட்ட மக்கள் என்று அழைக்கப்படும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கி, அவர்களைக் கோவிலுக்குள் அனுமதித்து, அவர்களோடு சமபந்தி போசனம் உண்டு 'நேசபான்மையுடன் வாழத் தமிழ் காங்கிரஸ் தயாரா? தமிழ் காங்கிரஸ் தலைவர்கள் தயாரா? தமிழ் காங்கிரஸ் 'தனிப் பெருந் தலைவர்' திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம் தயாரா? கட்சியின் இலட்சியத்தை இதுகாறும் ஏன் செயலில் காட்டவில்லை? உடனடியாக செயலில் காட்டி எழுத்தும் செயலும் ஒன்றென்று நிரூபிக்க முடியுமா?

தமிழர் ஒற்றுமை என்ற தலைப்பின்கீழ் நமது கவனத்தைக் கவரும் இரண்டு வாக்கியங்கள் பின்வருமாறு:

"1954ம் ஆண்டின் பின் தமிழரது நலவாழ்வுக்குப் பகையான பல சக்திகள் பகிரங்கமாகத் தலைவிரித்தாடத் தொடங்கின. எனவே இச்சூழ்நிலையில் தமிழர் அனைவரையும் ஒன்றுபடுத்தும் முன்னணி ஒன்று ஏற்படுத்துவது வரலாற்றின் ஏடுகளில் என்றும் காணாத அளவுக்கு அவசியமாயிற்று. 1956ம் ஆண்டின் பொதுத் தேர்தல்களின் முன்னும் அதன் பின்னும் ஐக்கிய முன்னணி ஒன்றை உருவாக்குவதற்கு எமது காங்கிரஸ் மிகவும் முயன்றது"

உண்மையிலேயே தமிழினத்துக்குப் பகையான சக்திகள் தோன்ற ஆரம்பித்த காலம் 1947-ம் ஆண்டாகும். இலங்கை சுதந்திரம் அடைந்து திரு டி. எஸ். சேனநாயக அதிகாரத்தைக் கைப்பற்றியபோதே தமிழினத்துக்குப் பகையான சக்திகள் திரள ஆரம்பித்து விட்டன. இந்த உண்மையை 'தனிப்பெருந் தலைவர்' திரு பொன்னம்பலமே 1947-48ம் ஆண்டுகளில் ஊரூராக, மேடை மேடையாக வெளியிட்டுக் கதறினார். இன்று எண்ணிப்பார்த்தாலும் அவர் கொட்டிய தீச்சுடர் வார்த்தைகள் ஞாபகத்துக்கு வரும். இப்படி ஆவேசத்தோடு தமிழினத்தைத் தாக்கிய பகையான சக்திகளை அப்போதே உணர்ந்து எதிர்த்தவர், பின்னர் கேவலர் ஒரு அற்ப மந்திரிப் பதவிக்காக திரு டி. எஸ். சேனநாயகாவின் கால்களில் மண்டியிட்டுச் சரணடைந்தார். அப்படி சரணடைந்ததன் மூலம் தம்மை நாடி நம்பிப் பின்பற்றி நின்ற தமிழ் இனத்தை மேற்படி பகையான சக்திகளுக்குப் பலியிட்டார் என்பது பழைய சரித்திரமாகும். அவர் அன்று பதவியேற்காமல் எதிர்த்து நின்றிருந்தால் தமிழினத்தின் நிலை இன்று ஏற்பட்டிருக்கும் பரி

(13-ம் பக்கம் பார்க்க)

### தமிழரசு தேர்தல் விஞ்ஞாபனம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின்தேர்தல் விஞ்ஞாபனம் அடுத்த வாரச் சுதந்திரனில் இடம் பெறும்.

### எங்களுக்கு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தக் கட்சி? தமிழ்க் கட்சியென்றால் வாருங்கள் அதற்குத்தான் எங்கள் வாக்கு" என்று அநேகமாக எல்லா வாக்காளர்களும் பச்சையாகச் சொல்லிவிடுகிறார்கள்.

அதனால் பரிதாபத்துக்குரியவாகள் தமிழரசுக் கட்சியின் பெயரைத் தமது துணைக்கு இழுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு

# அப்புக்காத்து ஐயா மீது பத்துக் குற்றச்சாட்டு

## முடியுமானல் மறுக்கட்டும் நாம் மன்னிப்புக் கோரத் தயார்

## இராசதுரையையும் வாபஸ் பெறக் கேட்போம்

### மறுக்க முடியாவிட்டால், திராணி இல்லாவிட்டால் திருவாளர் மயில்வாகனம் தாமே விலக வேண்டும்

### சுதந்திரன் நிருபர் 'இராமபாணம்' சவால்

மட்டக்களப்புத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கு மட்டக்களப்பில் ஒரு அபேட்சகராகப் போட்டியிடும் அப்புக்காத்தர் மயில்வாகனம் ஒரு "உறுதி" மொழி வழங்கியிருக்கிறார்.

அதாவது, "3-1-1960ல் வெளிவந்த "சுதந்திரன்" பத்திரிகையில் "இராசதுரைக்கெதிராக மட்டக்களப்பில் சிங்கள முதலாளிமாரின் சதி வேலை" என்ற தலைப்பில் வெளிவந்த செய்தியிற் குறிப்பிடப்பட்டுள்ள விஷயம் யாவும் முற்றிலும் பொய் என்பதைப் பொதுமக்கள் அனைவருக்கும் உறுதியாக எடுத்துக் கூறுகிறேன்" என்று உறுதிமொழி கூறியுள்ளார்.

#### அப்புக்காத்தர் நம்பிக்கை

அந்தச் செய்தி தம்முடைய ஆதரவைக் குறைப்பதற்காக ஒருசிலரால் செய்யப்படும் வீண் பிரசாரமாகும் என்றும் தெரிவித்துள்ளார் அந்த அப்புக்காத்தர்.

அதுமட்டுமல்ல, இத்தகைய பொய்ப் பிரசாரங்களினால் மட்டக்களப்புப் பெருமக்கள் ஏமாந்துவிடமாட்டார்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார் அவர்.

#### தொப்பியைப் போட்டுக் கொண்டார்

பிரஸ்தாப செய்தியில் சுட்டப்பெற்ற அப்புக்காத்தர் மயில்வாகனனார் தாம் என்று நாம் குறிப்பிடவில்லை. "தொப்பி பொருந்தினால் அணிந்துகொள்" என்ற ஆங்கிலப் பழமொழிக்கிணங்க மயில்வாகனனார் தொப்பியைத் தாமே போட்டுக்கொண்டு விளக்கம் கூறியுள்ளார்; விளக்கம் கூறும் அளவிற்குப் பொதுமக்கள் அபிப்பிராயம் அவரைத் துளைத்திருக்கிறது. அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

அவரைப்போலவே நாமும் ஒன்றைத்தான் சொல்ல முடியும். அதாவது 'மட்டக்களப்புப் பெருமக்கள் உறுதியற்றவர்களுடைய உறுதிமொழியை நம்பி ஒருபோதும் ஏமாந்துவிடமாட்டார்கள்" என்பதே நாமும் சொல்லக்கூடிய அந்த ஒன்றாகும்.

அன்பார்ந்த அப்புக்காத்தர் மயில்வாகனம் அவர்களே!

பொதுப்படையாக நாம் கூறியதற்கு விரைந்து கொண்டு மறுப்பும் விளக்கமும் கொடுத்துவிட்டீர்கள். பேஷ்! பேஷ்! வரவேற்கிறோம்.

#### மறுக்க முடியுமா?

இதோ, இப்பொழுது உங்களைப் பொதுமக்கள் நீதிமன்றத்தின் விசாரணைக் கூண்டில் ஏற்றி விரல் சுட்டிக் கேட்கிறோம். தாருங்கள் உங்கள் பதிலை. கூறுங்கள் உங்கள் உத்தாரத்தை.

இம்முறை பொதுப்படையாக நாம் எதையும் குறிப்பிடவில்லை. மட்டக்களப்பு அப்புக்காத்தர் மயில்வாகனம் அவர்களே! விளக்கந் தாருங்கள், விடை தாருங்கள் என்று பெயரும் விலாசமுமிட்டுக் கேட்கின்றோம்.

பதில் தரும் துணிவு உங்களுக்கு உண்டா? மனச்சாட்சி இடந்தருமா? பத்திரிகையில் அறிக்கை விட முடியுமா? மறுத்துத் துண்டுப்பிரசுரந்தானும் அச்சிட்டு வெளியிட முடியுமா? திராணியுண்டா? தெம்புண்டா உங்களுக்கு?

> **என். எம்மும் குடியேற்றமும்**
>
> தமிழ்ப் பிரதேசக் குடியேற்றத்தில் டாக்டர் என். எம். பெரேராவின் நிலையற்ற பேச்சும கொள்கைகளும் பற்றிய ஆதார பூர்வமான ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று அடுத்த வாரம் பிரசுரமாகிறது.

சவால் விடுகிறோம். எங்கே அங்கம் அங்கமாக, அம்சம் அம்சமாகப் பதில் தாருங்கள், மறுத்துக் கூறுங்கள் பார்க்கலாம.

#### உறுதி உண்டா?

முதலாவதாக—"உறுதியாக எடுத்துக் கூறுகின்றேன்" என்று மறுப்புத் தெரிவித்துள்ளீர்கள். உறுதியாக உறுதிகூறுபவருக்கு முதலில் உறுதி வேண்டும. இந்த உறுதி உங்களிடம் உண்டா? நீங்கள் அரசியலில் நிலையற்றவர்-உறுதியற்றவர்-கொள்கையற்றவர் என்று கூறுகின்றோம். மறுக்க முடியுமா?

#### தமிழரசில் சேர முடியவில்லை

இரண்டாவதாக—மட்டக்களப்புத் தொகுதிக்குப் போட்டியிட்டு எப்படியாவது பாராளுமன்றப் பிரதிநிதியாகிவிட வேண்டும் என்ற சுயநலத்தை முன்வைத்து தமிழரசுக்கட்சியில் சேர்ந்துகொள்ள முற்பட்டீர்கள். ஆனால் உங்கள் முயற்சி பயனளிக்கவில்லை. மறுக்க முடியுமா?

#### விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது

மூன்றாவதாக—மட்டக்களப்புத் தொகுதிக்கு திரு இராசதுரையை நியமிக்காமல் உங்களைத் தமிழரசுக் கட்சி அபேட்சகராக நியமிக்கும்படி கோரி தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு அவசர அவசரமாக தந்தியனுப்பினீர்கள். உங்கள் விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை நிராகரிக்கப்பட்டது மறுக்க முடியுமா?

#### இதுதான் [illegible]

நான்காவதாக—தமிழரசுக் கட்சியில் சேர முற்பட்ட நீங்கள், தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்புத் தொகுதிக்குப் போட்டியிட விரும்பிய நீங்கள், உங்களைக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை யென்ற கோபத்தினால் இன்று தமிழரசுக் கட்சி அபேட்சகரான திரு. இராசதுரையையே எதிர்த்துப் போட்டியிடுகிறீர்கள் இதுதான் உங்கள் பண்பா? இதுதான் உங்கள் கொள்கையா? இதுதான் உங்கள் உறுதியா? சில சிங்கள முதலாளிகளின் தூண்டுதலை நீங்கள் இந்த முடிவுக்கு வந்ததற்குக் காரணம் என்கிறோம். மறுக்க முடியுமா?

#### சுய இச்சைப் போர்வை

ஐந்தாவதாக—இன்று ஒரு சுய இச்சையாகப் போட்டியிடும் நீங்கள் இடைக்காலத்தில் சமசமாஜக் கட்சியைச் சார்ந்தவராக மாறினீர்கள். சமசமாஜக் கட்சி மட்டக்களப்புக் கிளையின் உபதலைவராக இப்போதும் இருந்து வருகிறீர்கள். சுமார் ஒன்றரை ஆண்டுக்கு முன்பு தொகுதி நிர்ணயக் கமிஷனர்கள் மட்டக்களப்புக்கு வந்தபோது சமசமாஜக் கட்சி சார்பில் சாட்சியம் அளித்தீர்கள். அப்படியிருந்தும் இன்று சுய இச்சை வேஷம் போட்டுக்கொண்டு போட்டியிடுவதன் மர்மம் என்ன? சமசமாஜி என்றால் மட்டக்களப்பு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள் எனவே அவர்களை ஏமாற்றவே சுய இச்சைப் போர்வையில் வருகிறீர்கள் என்கிறோம்—மறுக்க முடியுமா?

#### மாய்மாலம்

ஆறாவதாக — கிறிஸ்தவர்கள் விசேஷமாக கத்தோலிக்கப் பெருமக்கள் நாஸ்திகம் பேசும் கொம்யூனிஸ்டுகளையும, சமசமாஜிஸ்டுகளையும் வெறுப்பவர்கள என்பதை அறிந்து அவர்கள் கண்ணில மண்ணைத் தூவுவதற்காகவே சுய இச்சை மாயமாலம் என்கிறோம் — மறுக்க முடியுமா?

#### சமசமாஜிஸ்ட்

ஏழாவதாக — நீங்கள் சுய இச்சை என்று முகமூடி அணிந்து வந்தபோதிலும் சமசமாஜக் கட்சி வெளியிடும Samasamajist என்ற ஆங்கிலப பத்திரிகையில் சமசமாஜ அபேட்சகர்கள் பட்டியலில், கட்சி ஆதரிப்பவராக உங்கள் பெயரும வெளியிடப்பட்டிருக்கிறதே — மறுக்க முடியுமா?

#### சிங்களவர் பேசும் வார்த்தை

எட்டாவதாக — மட்டக்களப்பிலிருந்து ஐஸ் போட்டு மீன் ஏற்றும் ஒரு பிரபல சிங்கள முதலாளியும், ஒரு சிங்கள பேக்கரி மனேஜரும் மூன்று தடவைக்குக் குறையாமல் உங்கள் வீட்டிற்கு வந்து உங்களுடனும் உங்கள் மனைவியுடனும் எதிர்வரும் பொதுத் தேர்தல் பற்றி [illegible] தனர். [illegible] பேசுவாா்த்தை [illegible] என்கிறோம். மறுக்க முடியுமா?

#### ஹோட்டல் மேல் மாடியில்

ஒன்பதாவதாக-1959-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21ந் தேதிக்கும் 26-ந் தேதிக்குமிடையில் மட்டக்களப்பிலுள்ள ஒரு சிங்கள ஹோட்டலின் மேல் மாடிக்கு நீங்கள் இரண்டு தடவைகள் இரவிரவாக ஒன்பது மணிக்கு மேல் சென்றீர்கள் மறுக்க முடியுமா?

#### ஆதரவு இல்லை

பத்தாவதாக "உங்களுடைய ஆதரவைக் குறைப்பதற்காக சிலர் செய்யும் வீண் பிரசாரம்" என்கிறீர்கள். உங்களுக்கு அறவே ஆதவு இல்லை என்கிறோம் நாம். அற்ப சொற்பமேனும் ஆதரவு இருந்தால் அல்லவோ அதிலிருந்து எதையாவது குறைக்க முடியும்? நீங்கள் உங்களுக்கு ஆதரவு இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கும் உங்கள் இனபந்துக்கள் வதியும் ஒரு கிராமத்துக்கு ஆதரவு தேடி ஒரு வீட்டுக்குச் சென்றீர்கள். திரும்பிவந்து பார்க்கும் போது காரின் நான்கு டயர்களும் காற்றுப்போய்க் கிடந்தன. இந்தத் தகாத காரியத்தைச் செய்தவர் யார் என்பது தெரியவில்லை ஆயினும் இது ஒன்றே போதும உங்களுக்கு ஆதரவு இல்லை என்பதைக் காட்டுவதற்கு என்கிறோம்—மறுக்க முடியுமா?

#### சவால்

நாம் மேலே குறிப்பிட்டுள்ள பத்து அம்சங்களையும் அங்கமங்கமாக உங்களால் மறுக்க முடியுமானால் பெருமகிழ்வோடு உங்களை வரவேற்கவும் மன்னிப்புக் கோரவும் தயாராயிருக்கிறோம். அது மட்டுமல்ல தங்களோடு போட்டியிடும் திரு இராசதுரையை வாபஸ் வாங்கும்படி கேட்டு அவரைத் தடுத்து நிறுத்திவிட்டு உங்களை ஏகப் பிரதிநிதியாக பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்கவும் முயற்சிப்போம் என்று உறுதியளிக்கிறோம்.

ஆனல் மேற்படி குற்றச்சாட்டுகள் அத்தனையையும் நீங்கள் மறுக்க முடியாமல் போனல் நீங்கள் வாபஸ் பெறுவீர்களா? இதுவே நிருபர் "இராமபாணம்" உங்களுக்கு விடுக்கும் சவாலாகும்.

மிகச் சுத்தமான பிரபல மருந்து மூலிகைகளிலிருந்து சாஸ்திர ரீதியாகத் தயாரிக்கப்பட்ட

**ஆயுர்வேத மருந்துகள்**

● சியாவனப் பிரஸ் அவால் கல்லியம் மற்றும் அஷ்டவர்க்கங்களும் கலந்தது
எல்லா வயதினருக்கும், நோயினின்று உடல் தேறும் எல்லாக் கட்டங்களிலும் எல்லாக் காலங்களிலும் குணமளிக்கும். சதா உஷ்ணப் பிரதேசத்திற்குரிய ஆயுர்வேத டானிக் மருந்து.

● குல்கண்ட் ஜெலி கல்லியத்துடன் கூடியது. வெள்ளியும் ஏலக்காயும் வனஸ்லொச்சனும் சேர்ந்தது சகலவித உஷ்ணப் பிரதேச நோய்களையும் போக்கடிக்கின்றது கண்ணிலும், உடம்பிலுமுள்ள அரிப்பையும் எரிச்சலையும் அதோடு மலச்சிக்கலையும் இல்லாமலாக்குகின்றது. இரத்தத்தை சுத்திகரித்து மூளையைக் குளிர்மைப் படுத்துகிறது. இரத்தம் கசியும் மூல நோய்க்குச் சிறந்தது.

● பெமிப் பிளக்ஸ் வெள்ளி மயமான வில்லைகள்
வெள்ளை படுதலுக்கும் அங்க சம்பந்தமல்லாத சீழ் கண்டிக்கவும் இத்தியாதியான நோய்கள் எப்படிக் கடுமையானதாயினும் கண்டிக்கவல்லது.

அதோடு பலதரப்பட்ட ஆயுர்வேத மருந்துக்களும் எங்களிடம் உண்டு பம்பாய் மெஸர்ஸ் சாக்பந்தர் ஸ்தாபனத்தாரால் உறபத்தி செய்யப்படுவன.

விநியோகஸ்தர்கள்:

**சிர்ருல் கதீர் அன் கம்பெனி,**

41&43, இரண்டாம் குறுக்குத்தெரு, கொழும்பு-11.

போன் : 6009&3710

சி. சி. சி.

**தெங்குப் பசளைக் கலவைகள்**



அதிக விளைச்சலுக்கு உத்தரவாதமளிக்கின்றன

நீங்கள் எமது பசளைக் கலவைகளில் நம்பிக்கை வைக்கலாம் ஏனெனில் அவை [illegible] பெறுவதற்கு உங்களுக்கு உதவியளிக்கின்றன.

இலவச விளக்கப் பிரசுரத்திற்கு தயவுசெய்து எழுதுங்கள்-

**கொழும்பு கொம்மேர்ஷியல் கம்பெனி லிமிட்டெட்**

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப் பெற்றது. அங்கத்தவர். பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது.

தபால் பெட்டி 33, கொழும்பு. CCC625

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாள் இன்பம்

சிறுகதை — எழுதியவர்: உதயணன்

செங்கதிர்கள் இருளின் வயிற்றைப் பிளந்தெறிந்ததால் அடிவானம் தோய்ந்து செந்நிறமாகக் காட்சி தந்தது.

மணி ஆறரை!

கந்தசாமி புரண்டு படுத்தான். அவன் கொஞ்சம் முன்னதாகவே எழுந்து விடுவதால் அவனுடைய வீட்டில் ஏதாவது புதுமையாக நடந்து விடப்போகிறதா? தலையைத் தூக்கி ஒரு நோட்டம் விட்டான். அடுப்பு புகைந்து கொண்டிருந்தது; கோப்பியாக்கும்.

தங்கம் வாசற்படியில் உட்கார்ந்து தங்களது மூன்றுவது 'படைப்பை' மடியில் வைத்து தலை வாரிக் கொண்டிருந்தாள். குழந்தை கெட்ட கேட்டுக்கு குஞ்சம் ஒன்றுதான் குறைச்சல்.

கந்தசாமி வலது பக்கமாகத் திரும்பிப் படுத்தான். கன்னம் 'சில்' லென்றிருந்தது; தலையணை ஈரம்! ஆமாம் இனி அவன் வடிப்பதற்குக் கண்ணீரே இல்லை; எல்லாவற்றையும் வடித்து விட்டான்; சாட்சி, நனைந்து போன அந்தத் தலையணை. இனி அவன் வணங்குவதற்குத் தெய்வமே இல்லை; எல்லா 'தெய்வங்களை' யும் வணங்கிவிட்டான்; சான்று, நைந்து போன அவனுடைய உள்ளம். இனி அவன் சிந்தித்துப் பார்க்க ஒரு வழியுமே இல்லை; எல்லா வழிகளிலும் சிந்தனையைச் செலுத்திப் பார்த்து விட்டான்; ஆதாரம், தனது சிந்தனா சக்தியைப் பற்றி அவனுக்கிருந்த நல்லெண்ணம்.

அவனுடைய ஐந்தாவது சிருஷ்டி தவழ்ந்து வந்து அவனுடைய கால் கட்டை விரலைக் கடித்து, முளைத்துவரும் பல்லின் பலத்தைக் காட்டியது. கந்தசாமி குழந்தையைத் தூக்கி தனக்குப் பக்கத்தில் படுக்க வைத்தான். பாயின் முரட்டுப் புல் குழந்தையின் முதுகுப் புண்ணை உராஞ்சியதால் அது வீறிட்டுக் கத்தியது. குழந்தையைத் தூக்கி தன் நெஞ்சில் உட்கார வைத்து விட்டு சிந்தித்தான். நல்ல வேளை, சிந்திப்பதற்கும் பணம் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் இருந்ததே.

குழந்தையின் உடலெல்லாம் கிரந்திப் புண். பிறந்த ஊராக இருந்தால் அளவெட்டிப் பரியாரியார் இருக்கவே இருக்கிருர். இங்கு கொழும்பில்? ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக அவனுக்கு நேரமில்லை. நேரம் இருந்தாலும் மருந்துக்கும் பத்தியத்துக்கும் சத்துள்ள உணவுக்கும் மற்றது இல்லை—பணம்!

"வேலைக்குப் போகவில்லையா? மணி ஏழாகி விட்டது" என்று சொல்லிக் கொண்டு வந்த தங்கம் கோப்பியை அவனுக்கு அருகில் வைத்தாள்.

"போக வேண்டியதுதான்" என்று எழுந்த கந்தசாமி அவளைப் பார்த்துச் சிரித்தான். அவன் சிரித்தது உள்ளம் பொங்கிய களிப்பினுல் அல்ல—வெள்ளம் தலைக்கு மேல் போய் விட்டதாம் இனி அழுதென்ன சிரித்தென்ன என்ற நினைவினுல். அந்தச் சிரிப்பு அவனையும் அவளையும் ஏமாற்றிவிட்டு தன் உயிரை மாய்த்துக் கொண்டது.

கந்தசாமி காலைக் கடன்களை முடித்துக் கொண்டு வந்து வெற்றி முரசு கொட்டும் மூன்ருவது வார மாக அந்தக் காற் சட்டையை அணிந்து கொண்டான்.

—சைக்கிளை, வெளியே இழுத்து அதன் முதுகை—ஆசனத்தை தட்டிக் கொடுத்தான். காற் சட்டைக் கால்களை காலோடு சேர்த்துச் சுற்றி ஒரு 'கிளிப்' பைக் கொழுவி விட்டான்; காற் சட்டை சைக்கிளில் மாட்டிக் கொள்ளக் கூடாது என்பது ஊரறிந்த காரணம்; அவன் மட்டிலும் தெரிந்த சில பல காரணங்களும் இருக்கலாம்.

தங்கம் வாசலில் வந்து நின்ருள்.

கந்தசாமிக்கு விஷயம் விளங்கிவிட்டது.

'கணவன்மார்களே! நீங்கள் வெளியே புறப்படும் சமயமாக வாசலில் குறுக்கே வந்து நின்று உங்கள் மனைவியர் ஒரு புன்னகையை வலுக் கட்டாயமாக உங்கள்பால் விட்டெறிந்தால் அடுத்து வர இருக்கும் ஒரு பேராபத்துக்கு முகம் கொடுக்கத் தயாராகுங்கள். அவர்களைத் தொட்டுத் தாலி கட்டிய அந்தப் பழைய கணக்கைக் கூட்டிப் பார்த்து ஆறுதலடையுங்கள். மிஞ்சி மிஞ்சிப் போனுலும் அவர்களுடைய கோரிக்கை ஒரு புடவையாகவோ ஒரு பொன்னகையாகவோதான் இருக்கும். 'ஆகட்டும்' என்று சொல்லி வைத்தால் போதும் வாக்கைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இல்லை. கண்ணீர்க் குண்டுகளுக்குப் பயந்து உங்கள் பலவீனத்தை வெளிப்படுத்தாமல் தைரியமாக நடந்துவிட்டால் உங்கள் வர்க்கத்தினரின் மானத்தைக் காத்த பெருமையைப் பெறுவீர்கள்'

"தங்கம்...!" கந்தசாமி சிரமப்பட்டு ஒரு சிரிப்பை இழுத்து வந்து தன் முகத்தில் மேயவிட்டான். "எங்கள் நிலைதான் உனக்குத் தெரியுமே. கடன்காரரால் பகல் நேரத்தில் வீட்டுக்கு வரவே முடியவில்லை. பொறுத்ததோடு இன்னும் ஒரு மாதம் பொறுத்துக் கொண்டால், நீ கேட்ட சேலையை வாங்கிவிடலாம்"

தங்கத்தின் முகத்தில் எந்த விதமான உணர்ச்சியின் பிரதிபலிப்பும் தெரியவில்லை; பெண்ணல்லவா?

"அதுவும் போக", கந்தசாமியே தொடர்ந்தான். "மற்றவர்கள், வசதியுள்ளவர்கள் ஆடம்பரமாகத்தான் வாழ்வார்கள். அதைப் பார்த்து நாமும் ஆசைப்பட்டால் முடியுமா? பிள்ளைகளுக்கே உருப்படியான சட்டை எதுவும் இல்லை. உன்னை இந்தக் கோலத்தில் காண்பதில் எனக்கு மட்டும் திருப்தியா, என்ன? என்னவோ கெட்ட காலம். சேலையை அடுத்த மாதம் வாங்கிக்கொள்ளலாம். 'ம்' என்று சொல்லு. நான் நிம்மதியாக வேலைக்குப் போய் வர. 'ம்' [illegible]

"உங்களுக்கு எப்பொழுதுதான் இந்தப் பஞ்சப்பாட்டு தொலையப்போகிறதோ தெரியாது. வருஷம் பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும். இனிமேல் உங்களை ஒன்றும் கேட்காமல் தெருவால் போகிறவன் வருகிறவனைச் சேலை வாங்கித் தரச் சொல்லிக் கேட்கட்டுமா?"

"நீயுமா தங்கம்?" என்ருன் 'சிசர்' பாணியில். அவனுடைய முகத்தில் பரிதாபம் இடம் பிடிக்க அகத்தில் வேதனை குடிபுகுந்தது.

"நீயுமா? நிலைமை தெரிந்த நீயுமா என்னை வதைக்கிருய்?" என்றவன் தன் கண்களில் ஜென்மம் பெறும் முத்துகளை மனைவி கவனித்து விடக்கூடாதே என்று சைக்கிளில் ஏறி வேகமாக மிதித்தான்.

'அவளும்தான் எத்தனை காலத்துக்குப் பொறுப்பாள்? என்னுடைய தங்கம் தங்கமானவள்'

கந்தசாமியை—கந்தசாமியையா—தாங்க முடியாமல் அந்தப் பழைய சைக்கிள் நெளிந்தது. பின் சில்லு ஒன்பதாவது கம்பியையும் முறித்துபன்னரும் சாமகீதம் பணிவுடன் பாடலுற்றது. கந்தசாமி திருவுளம் இரங்கி சைக்கிளை விட்டு இறங்கி அதைத் தள்ளிக்கொண்டு நடந்தான்.

கந்தசாமிக்கு முன்னுல் போய்க்கொண்டிருந்த ஒருவன் தனது காற்சட்டைப் பையில் கையைவிட்டு கைக்குட்டையை வெளியே எடுத்தான். அதோடு ஒரு மடித்த காகிதமும் சோந்து வந்து தெருவில் விழுந்தது.

"ஐயா...!" என்று குரல் கொடுத்தபடி கந்தசாமி அதை எடுத்து விரித்தான். அது ஒரு நூறுரூபா நோட்டு. அதற்கிடையில உரியவன் தெரு மூலையில் திரும்பி விடவேகந்தசாமி நோட்டை ஆகாய வெளியில் பிடித்துப் பார்த்தான். சந்தேகமில்லை: அது ஒரு கள்ள நோட்டு!

நேர்மை, வேண்டாம் என்றது.

வறுமை, வேண்டும் என்றது.

உள்ளத்தில் ஒரு மின்னல்!

'.........வருஷம் பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையுங் கோதாரியும்......வருஷம்பன்னிரண்டு மாதமும் உங்களுக்குத்தான் கொள்ளையும் கோதாரியும்.........வருஷம் பன்.........'

கந்தசாமி நடந்தான். எதிரே ஒரு பொலீஸ்காரன் வந்தான். கந்தசாமியை ஏதோ ஒன்று எச்சரிக்கை செய்தது: அந்தக் கள்ள நோட்டை எட்டாக மடித்து சட்டைப் பை அடியில் போட்டுக்கொண்டு குனிந்தபடி நடந்தான். பொலீஸ்காரன் போய்விட்டான்.

கந்தசாமி மேலும் நடந்தான். எதிரே அவனுக்கு கடன் கொடுத்த ஒருவன் வந்தான், கந்தசாமி பயந்து போய், சைக்கிளை தெருவோரத்தில் நிறுத்திவிட்டு ஒரு சந்தில் நுழைந்து மறைந்துகொண்டான்.

பொலீஸ்காரனைக் கண்டு கள்ள நோட்டை மறைத்த கந்தசாமி கடன்காரனைக் கண்டு தன்னையே மறைத்துக் கொண்டான். ஏன், கந்தசாமியும் இந்தச் சமுதாயத்தில் ஒரு 'ஒரு கள்ள நோட்டு'த்தானு? அவனைப்போன்ருர் மனிதரோடு மனிதனுக வெளிப்படையாக வாழவே முடியாதா?

இங்கு கந்தசாமியைப்பற்றியும் ஒரு வார்த்தை குறிப்பிட வேண்டும். அவன் நடுத்தர வகுப்பில் வந்து விடிந்தவன்—ஒரு குமாஸ்தா!

வழக்கம்போல அலுவலகத்தில் ஒரு கட்டுப் பணத்தையும் அதற்குரிய பத்திரங்களையும் ஒப்புக் கொண்டான் கந்தசாமி. அந்தப் பதினுயிரம் ரூபாவையும் வங்கியில் கொண்டு போய் கட்டிவிட்டு வர வேண்டும். அவனுடைய உள்ளத்தில் ஒரு மெல்லிய கீறல் விழுந்து துடித்தது. அவனுக்கு சிந்திக்க நேரமில்லை. மனைவியிடமும் மற்றவர்களிடமும் மதிப்பாக வாழ வேண்டுமென்ருல் பொய்யும் புரட்டும் செய்யத்தான் வேண்டும் என்று எண்ணியதோடு துணியவும் செய்தான்.

அந்தக் கள்ள நோட்டை எடுத்து அதில் அடையாளமாக ஒரு சிலுவைக் குறியைப் போட்டு அதை நோட்டுக் கட்டுக்கு நடுவில் திணித்தான். ஒரு நல்ல நோட்டை எடுத்துத்தாம் வைத்துக் கொண்டு நடந்தான்.

ஐயோ, அந்த அரைமணி நேரமாக அவனுடையமனம் துடித்த துடிப்பு! ஏதாவது விபரீதமாக நடந்து விட்டால் நாளைக்கு தங்கத்தின் கதி...? பிள்ளைகளின் நிலை...? 'தங்கத்தின்மீது ஆணை! இனிமேல் இந்த வேலையை நான் செய்யவேமாட்டேன்' என்று எண்ணியவனுய் வங்கிப் படிகளில் இறங்கினுன்—கையில் நல்ல நோட்டுடன்!

அந்த ஒரு நாளாவது அவனுடைய குடும்பத்தை இன்பமாக இருக்க வைப்போம் என்ற நினைவுபோலும், கடைத் தெருவில் இறங்கினுன் கந்தசாமி.

எல்லோருக்கும் வரிசையாக உடுப்பு வாங்கினுன். நல்ல உணவுப் பொருட்களைத் தேடி வாங்கினுன். தங்கத்துக்கு ஒரு 'கிலிட்' சங்கிலி, தனக்கு ஒரு ஜப்பான் பேனு, மூத்ததுக்கு ஒரு றிப்பன், இளையதுக்கு ஒரு கிலுகிலுப்பை—இன்னும் எத்தனையோ! கடைக்காரனுக்கு ஒன்றே கால் ரூபா கடன் வேறு வைத்துவிட்டுத் திரும்பினுன் கந்தசாமி.

அன்று இரவு, கந்தசாமி சாவதானமாக இருந்து கூப்பன் கடைக்கு இவ்வளவு காய்கறிக் கடைக்கு இவ்வளவு என்று எதிர்வரும் சம்பளப் பணத்துக்குப் பங்கிட்டுக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தான். அன்றைக்கு குளித்து முழுகி வயிருர உண்டதால் பிள்ளைகள் எல்லோரும் உறங்கிவிட்டனர்.

தங்கம் வெற்றிலையை மடித்து கந்தசாமியின் வாயில் வைத்துவிட்டுச் சிரித்தாள். பல நாட்களுக்குப் பிறகு அவளுடைய விழிகள் அவனை—

"ஏன் சிரிக்கிருய்?" என்று அவளுடைய கன்னத்தைக் கிள்ளப்போனுன் கந்தசாமி.

"ஆமாம், இன்றைக்கு இவ்வளவு பணம் ஏது?" என்று தங்கம் கேட்டாள்.

(15-ம் பக்கம் பார்க்க)

பொலீஸ்காரனைக் கண்டு கள்ள நோட்டை மறைத்த கந்தசாமி, கடன்காரனைக் கண்டு தன்னையே மறைத்துக் கொண்டான். ஏன், கந்தசாமியும் இந்தச் சமுதாயத்தில் ஒரு 'கள்ளநோட்டு'த்தானு? அவனைப் போன்ருர் மனிதரோடு மனிதராக வெளிப்படையாக வாழவே முடியாதா?

ஐயோ, அந்த அரைமணி நேரமாக அவனுடைய மனம் துடித்த துடிப்பு! ஏதாவது விபரீதமாக நடந்துவிட்டால் நாளைக்கு தங்கத்தின் கதி......? பிள்ளைகளின் நிலை......? 'தங்கத்தின் மீது ஆணை! இனிமேல் இந்த வேலையை நான் செய்யவே மாட்டேன்......'

'விரைவில் இன்னொரு காற்சட்டை தைத்துக் கொள்ள வேண்டும்' என்று வழக்கம் போல அன்றும் எண்ணிக் கொண்டான் அந்த எண்ணத்தை அடித்துப் புரட்டி விழுத்திவிட்டு பாய்ந்தது ஒரு பெரு மூச்சு.

வேலைக்குப் போகிறவராச்சே என்று சதம் சதமாகப் பொறுக்கி தங்கம் வாங்கி வைத்திருந்த மூன்று தோசைகளையும் பிள்ளைப் பரிவாரத்துக்குப் பகிர்ந்தளித்துவிட்டு பிதாவாகப் புறப்பட்டான் கந்தசாமி.

தாள்வாரத்தில் ஓட்டிக் கொண்டிருந்த, யுத்த காலத்தில் பலத்த பந்தோபஸ்துடன் ஈழத்திருநாட்டுக்கு வந்து சேர்ந்த வாகனத்தை

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே!




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி
● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரோமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை ஏற்படுத்தக் கூடிய கட்சி எது?

## தேர்தலுக்கு அபேட்சகர்களை நிறுத்தியதிலிருந்தே அது தெளிவாகிவிட்டது

## தமிழரசு ஒன்றுதான் தமிழ் பேசும் மக்கள் பிரச்னைகளுக்கு மருந்து

### அதைத் தரக்கூடிய பிரதிநிதிகளே இன்று தேவை

இலங்கையின் முதற் குடிகளாகிய நாம் இன்று அரசியல் அநாதைகளாக்கப் பட்டிருக்கிறோம். இலங்கை சுதந்திரமடைந்த பின் நமது மொழிக்கு ஏற்பட்டிருக்கும் துர்அதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் சிந்துகிறோம். எமது என எண்ணியிருக்கும் பிரதேசங்களிலும் நாம் சிறுபான்மையினராக மாற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதைக் கண்டு நெஞ்சம் விம்மித் துடிக்கிறோம்.

பண்டைய பண்பாட்டில் பெயர்பெற்ற இனம், உலகாண்ட இனம், இன்று இலங்கைத் தீவில் சிறுபான்மையினரென ஒதுக்கித் தள்ளப் பட்டிருக்கிறது. பெரும்பான்மையினர் மொழி எங்கள் தொண்டைக்குள் திணிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நமது பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நடைபெறுகிறது. இதனால் இன்று அம்பாறை, திருகோணமலை, மூதூர் முதலிய தமிழர் பிரதேசங்களில் சிங்களவர் அபேட்சகர்களாகப் போட்டியிட வாய்ப்புக் கிடைத்திருக்கிறது.

#### அணைப்பு

தென் இலங்கையில் நிறுவப்பட்டிருக்கும் சில அரசியல் கட்சிகள் இந்த நாட்டில் தமிழனை ஒதுக்கி ஒழித்துக்கட்ட நடவடிக்கை எடுத்து வருவதைப் பார்க்கிறோம் இதற்கு அரசாங்கமும் ஆதரவளித்து வருகிறது. தமிழ் பேசும் தலைவர்களில் சிலரை மந்திரிப் பதவி என்ற மாய்மாலத்தால், அப்போதைய யூ என் பி. தலைவர் திரு டி. எஸ். சேனநாயகா, தம்முடன் அணைத்துக்கொண்டார். இதனால் கல்லோயாப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் எதுவித எதிர்ப்புமின்றி நிறைவேற்றப்பட்டது,

#### தமிழரசுக்கட்சி தோற்றம்

யூ என். பி.யின் மாயா ஜாலங்களை நன்குணர்ந்த திரு எஸ். ஜே. வி. செல்வநாயகமும் காலஞ்சென்ற கடமை வீரர் திரு கு வன்னியசிங்கமும் பதவி வலையில் சிக்காது—தமிழ் மொழியும், தமிழ் பிரதேசமும் காப்பாற்றப்பட வேண்டுமானால் இலங்கைக்குச் சமஷ்டி ஆட்சிதான் சிறந்தது எனக் கண்டனர். தமது கருத்துக்களைத் தமிழ் பேசும் மக்கள் முன் தெரிவித்தனர். இதன் பயனாக 1949ம் ஆண்டு மார்கழி மாதம் தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்டது. கட்சி ஸ்தாபிக்கப்பட்ட பின் 1952ம் ஆண்டு தேர்தலில் வடகிழக்கு மாகாணங்களில் 7 அபேட்சகர்களை நிறுத்தினர். இவர்களில் இருவர் வெற்றி பெற்றனர். அப்போது தமிழரசுக் கட்சிக்கு 45 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகள் கிடைத்தன. பின்னர் 1956ம் ஆண்டு தேர்தல் வந்தபோது 14 அபேட்சகர்கள் போட்டியிட்டு 10 அபேட்சகர்கள் (இரு முஸ்லிம்கள் உட்பட) வெற்றி பெற்றனர்.

1960ம் ஆண்டு மார்ச்சு மாதம் 19ந் தேதி நடைபெற இருக்கும் தேர்தலில் தமிழரசுக் கட்சி 19 அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் இனத்தை ஒற்றுமைப்படுத்தப் பாடுபடுவதாக கூறிக்கொண்டு பல கட்சிகள் தமது அபேட்சகர்களை நிறுத்தியிருக்கின்றன. தமிழ் பேசும் முன்னணியை அமைக்க விரும்புவதாகக் கூறும் தமிழ் பேசும் முன்னணி கிழக்கு மாகாணத்தில் அதுவும் இரு தொகுதிகளில் மாத்திரம் போட்டியிடுகின்றது. ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவர் வவனியாவுடன் நின்றுவிட்டார். இப்போது எங்கெல்லாமோ தாம் ஏதேதோ செய்ததாக அறிக்கை விடுகிறார். இலங்கைத் தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்தி ஒற்றை ஆட்சியில் இரண்டறக் கலக்க விரும்புவதாகக் கூறும் தமிழ் காங்கிரஸ் 8 அபேட்சகர்களை நிறுத்தியிருக்கிறது.

#### ஆதரவு எந்தக் கட்சிக்கு

இக்கட்சிகள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ் பேசும மக்களின் ஒற்றுமையை விரும்புவதாகக் கூறிக்கொள்ளுகின்றன. தமிழர் வாழும் பிரதேசங்களில் அபேட்சகர்களை நிறுத்த முடியாது திண்டாடும் இவர்களால் ஒற்றுமையை ஏற்படுத்த முடியுமா? இவர்களால் முடியாதென்பதை ஒரு குழந்தைகூட ஒப்புக்கொள்ளும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் கட்சிகளில் பெரும்பான்மையான அபேட்சகர்களை நிறுத்த சக்தியும் செல்வாக்குமுள்ள கட்சி தமிழரசுக் கட்சிதானென்பது வெளிப்படை. எனவே இத்தேர்தல் மூலம் தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமையை விரும்பும் நாமெல்லோரும் நமது வாக்குகளைத் தமிழரசுக் கட்சிக்கே அளிக்க வேண்டும். தமிழரசுக் கட்சியின் கொள்கை-சமஷ்டி ஆட்சித் திட்டம் உலக நாடுகள் பலவற்றில் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றது.

#### சமஷ்டி ஆட்சியேஉகந்தது

"தற்கால ஜனநாயகத்தினால் பலதிறப்பட்ட அபாயங்கள் விளைகின்றன. அவற்றுள் எல்லாம் மிகப் பயங்கரமானது சிறுபான்மையினரின் உரிமைகளுக்கும் சுதந்திரத்திற்கும் சதா ஏற்படும் அபாயமாகும். சமஷ்டி அரசாங்க முறையின் மூலம் அதற்குப் பரிகாரம் தேடலாம் என்பது அரசியல் சிந்தனையாளரின் கருத்து என்று பிரபல நூலாசிரியரான பேராசிரியர் திரு டபிள்யு. எஸ். மெக்கனீ ஜனநாயகம் என்ற ஒரு கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

சமஷ்டி ஆட்சி ஒன்றினால்தான் இலங்கைத் தமிழரின் பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்பட்டு தமிழ் மக்கள் சந்தோஷமாக வாழ வழியேற்படும் என்பதை உணர்ந்தே முதுபெரும் ராஜதந்திரியும் சிறந்த கல்விமானுமாகிய ராஜாஜி இலங்கைக்கு சமஷ்டி ஆட்சிதான் உகந்தது என்று கூறினார்.

உலகசிந்தனையாளர்களும், அரசியல் அறிஞர்களும் சமஷ்டி முறையின் பலாபலன்களைப்பற்றி பல தடவைகளில் எழுதியும் விவாதித்துமிருப்பினும் சில தலைவர்கள் இங்கு சமஷ்டி முறை உகந்ததல்ல என பிரசாரம் செய்கின்றனர். சில இடதுசாரித் தலைவர்கள் தாங்கள் பின்பற்றும் நாடுகளில் சமஷ்டி முறை செயல்பட்டு வருவதை அறிந்தும் இந்த சமஷ்டி ஆட்சி முறையை எதிர்த்து வருகின்றனர். அவர்களுக்காக [illegible] பட வேண்டியதுதான்.

#### பிறநாடுகளில்

பர்மாவில் காரேன்களும், தென் ஆபிரிக்காவில் ஆபிரிக்க சுதேசிகளும் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் போராட்டமெல்லாம் சமஷ்டி ஆட்சிக்காகத்தான். ஒன்பது மாகாண சுயாட்சிகளைக்கொண்ட கனடாவில் சமஷ்டி அரசாங்கம் ஏற்பட்டிருக்கிறது. சுயேச்சை மாகாணங்களான 22 "கன்டன்"களை இணைத்து சுவிட்சர்லாந்தில் சமஷ்டி அரசாங்கம் நிறுவப்பட்டுள்ளது. அமெரிக்கா, ருஷ்ய அரசாங்கமும் மாகாண சுயாட்சிகளின் சமஷ்டியாகவே இயங்குகின்றன. இந்தியாவும் இன்று ஒரு சமஷ்டிக் குடியரசுதான். ஆதலால் சமஷ்டி அரசை ஏற்படுத்துவதற்குத் தேவைப்படுவது

#### புந்தொரி

தேசத்தின் விஸ்தீரணமுமல்ல; சனத்தொகையுமல்ல. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தேசிய இனங்கள் தேசத்தில் இருக்க வேண்டுமென்பதுதான் முக்கியமாக வேண்டியது.

#### இது தான் சமஷ்டி அரசமைப்பு

மொழி, கலாச்சாரம், இலக்கியம் ஆகியவை தனித்தனியாக ஆட்சி செய்தன. இப்பொழுது இரு இனத்தவர்களுக்கும் தனித்தனி பிரதேசங்களுமுண்டு. மேற்கு, தெற்கு, மத்திய பிரதேசங்களில் சிங்களவர்களும் கிழக்கு, வடக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்களும் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். இவர்கள் சகோதரர்களாக வாழ சமஷ்டி ஆட்சியே வேண்டும்.

தமிழ் மக்கள், முஸ்லிம்கள் உட்பட, பெரும்பான்மையினராக வாழும் தமிழ்ப் பிரதேசம் தமிழரசாகவும், சிங்களம் பேசும் மக்கள் வாழும் சிங்களப் பிரதேசம் சிங்கள அரசாகவும் மொழிவாரியாகப் பிரிந்து பிரதேச சுயாட்சியை நிறுவிக்கொள்வதோடு இந்த இரண்டு யூனிட்டுகளையும் சேர்ந்த பிரதிநிதிகளைக்கொண்ட ஒரு மத்திய அரசாங்கத்தையும் ஏற்படுத்திக்கொள்வது சமஷ்டி ஆட்சியாகும். சமஷ்டியால் நாடு பிளவுபடமாட்டாது. ஒரு சாரார் இன்னொருசாரார் மீது ஆதிக்கம் செலுத்துவதோ அன்றேல் பிரிந்து ஒதுங்கிவிடுவதோ சமஷ்டி ஆட்சி அல்ல. ஆனால் ஒரு பொது நோக்கத்தின் பொருட்டு பங்காளிகள் ஆவதுதான் சமஷ்டி ஆட்சி.

#### சிந்திக்க வேண்டும்

ஒற்றை ஆட்சித் திட்டத்தின்படி பெரும்பான்மையோர் தயவில் சிறுபான்மையோர் விடப்பட்டுள்ளனர். [illegible] டம், பிரஜாவுரிமை முதலிய பிரச்னைகளில் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் பெரும்பான்மை வகுப்புத் தலைவர்களின் பொதுவான போக்கும் சிறுபான்மையினருக்கு எத்தகைய உரிமை உண்டென்பது சமீபகால நடவடிக்கைகளால் உணரக்கிடக்கிறது.

சமஷ்டிவாதிகள் நமது மொழியும், கலையும், பண்பாடும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற ஒரே நோக்கத்திற்காகப் பாடுபடுகின்றனர். இந்த உண்மையை நாம் இன்று சிந்திக்கத் தவறினோமானால் பின் வருந்த வேண்டியவர்களாவோம்.

#### தமிழ்மறை கூறும்செய்தி

"இந்த இயக்கம் வெற்றி பெறுவதற்கு வெகுகாலம் செல்லுமே என்று ஒருசிலர் ஏங்குகின்றனர். வேறுசிலர் தமிழரசு கிடைப்பினும், தமிழ்நாட்டைப் பொருளாதாரத் துறையில் வளம் பெறச் செய்ய சில வருடங்கள் செல்லக்கூடும், அதுவரை பொருள் நெருக்கடி ஏற்படுமே என அஞ்சுகின்றனர். எனினும் இவர்கள் அனைவரும் "தமிழரசு" தமிழ் மக்கள் விரும்பத்தக்க ஓர் உன்னத இலட்சியம் என்பதை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்வர். நமது இலட்சியத்தை ஏற்று அதை எய்தும் வழியிலுள்ள துன்பங்களை நினைத்துத் தயங்கும் அன்பர்கட்கு,

"துன்பமுற வரினுஞ் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை"

என்று கூறுகிறது தமிழ் மறை.




அகில உலகும் வியந்து போற்றும் கேசத்திற்கு இயற்கை [illegible] யூட்டும் தைலம்.

இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும்
4 அவுன்ஸ் மற்றும் 16 அவுன்ஸ்
சைஸ்களில் கிடைக்கிறது.

சோல் ஏஜண்டுகள்:—

சிர்நல் கதீர் அன் கம்பெனி,
43, இரண்டாம்குறுக்குத்தெரு, கொழும்பு-11.
டெலிபோன்: 6009 & 3710.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் களத்திலே சுவையான சம்பவங்கள்

## எட்டப்பர், அப்புக்காத்தர் மாஸ்டர் ஆகியோர் பட்ட பாடு

மட்டக்களப்பு கச்சேரியில் கடந்த நாலாந் தேதி எதிர்பாராத சம்பவம் ஒன்று நடந்தது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் மட்டக்களப்பு தொகுதியில்போட்டியிடும் திரு செ. இராசதுரை தமது நியமனப் பத்திரத்தைத் தனித் தமிழில் எழுதித் தாக்கல் செய்துவிட்டு கச்சேரியின் திறந்த வெளித் தளத்துக்கு விரைந்து சென்றார்.

அங்கே நின்று வெளியில் கச்சேரி அருகில் திரளாகக் கூடிநின்ற மக்களுக்கு காட்சி அளித்தார். மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். எப்படித்தான் விஷயம் தெரிந்ததோ நாமறியோம். எட்டப்பர் எதிர்மன்னர் அங்கே கச்சேரியின் திறந்த வெளி மேல் தளத்துக்கு ஓடோடி வந்தார். திரு இராசதுரையின் முதுகைச் சுற்றித் தமது நீண்ட கரத்தைப் பொட்டுக் கொண்டு கோடரியால் வெட்டிப் பிளப்பதானாலும் கூட நமது ஒட்டு விட்டுப் போகாது என்ற பாவனையில் நெருங்கியடித்துக் கொண்டு வலிந்து சிரிப்பை வரவழைத்தார்.

கீழே நின்ற பொதுமக்களுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது. மகிழ்ச்சி ஆரவாரம் நின்றுவிட்டது. ஒரு கணம் சவ அமைதி நிலவியது. பின்னர் வழக்கப்பிரகாரம் எட்டப்பருக்குக் கிடைக்கும் வரிசை கிடைத்தது. இண்டல் மொழியும் கேலிச் சிரிப்பும் கொந்தளித்து எழுந்தன.

இவற்றையெல்லாம் ஆளோடு ஆளாக நின்ற புலவர் மணி கவனிக்கும் நிலையில் இல்லை. அவர் உலகு அப்போது வேறு. எட்டப்பரும் இராசதுரையும் கட்டிப் பிடித்த நிலையில் ஒன்றாகக் காட்சி அளிப்பது ஒன்றே பட்டிருப்பு மக்களிடம் புதுப் பிரசாரத்துக்கு மூலதனமாயிற்றே என்ற மகிழ்ச்சி அவருக்கு. காட்சி மறையுமுன் கமிராவில் அதைப் பதிவு செய்துவிட வேண்டும். காலமெல்லாம் அதைப் பாதுகாக்க வேண்டும் என்று விரும்பினார்.

...வி அழைத்தார், இதைப் படம் பிடிக்கலாமே, இதைப் படம் பிடிக்கலாமே என்று, காற்றோடு கலந்து மறைந்தது அந்தக் குரல். காட்சியும் முடிந்தது. எட்டப்பரின் முகத்தில் ஈயாடவில்லை. விர்ரென்று இறங்கிப்போனார் அவர் அப்போது புலவர் மணியைப் பார்த்திருக்க வேண்டுமே?

* * *

### அப்புக்காத்தர்

திருவாளர் மயில்வாகனம் என்பவர் மட்டக்களப்பு தொகுதியில் திரு இராசதுரையை எதிர்த்துப் போட்டியிடுகிறார் அல்லவா? இவரை அவருடைய ஆதரவாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் இரண்டொரு பிரமுகர்கள் கன்னங்குடா என்ற கிராமத்துக்கு வாக்கு வேட்டைக்காக அழைத்துச் சென்றார்கள்.

அங்கே ஒரு விட்டுக்குள் நுழைந்தார்கள். வீட்டுத் தலைவனை அணுகி வாய்திறந்தார்கள். ஜமாய்த்துக் கட்டப்போவதாக வெட்டிப் பிளந்தார்கள். எதிர் வார்த்தை ஏதும் பேசாத முழக்கம் முடியும்வரை பொறுத்திருந்த வீட்டுத் தலைவர் சாவதானமாகக் கேட்டார். "எல்லாம் சரிதான் யார் தேர்தலில் போட்டி யிடுகிறார்?"

கூடச் சென்றவர்கள் முந்திய வேகத்தில், "இதோ நிற்கிறாரே நம்ம அப்புக்காத்தர் மயில்வாகனம், இவர்தான் போட்டியிடுகிறார்" என்று பெருமையாகச் சொன்னார்கள்.

"ஓ, இந்த அப்புக்காத்து ஐயாதானா? இங்கே வந்த அப்புக்காத்து ஐயாவுக்கு இதுவரை வாய்திறந்து நம்மோடு ஒரு வார்த்தை கூடப் பேச வரவில்லை. எல்லாவற்றையும் துணைக்கு வந்த நீங்களே பேசிக்கொட்டினீர்கள் பார்ளிமேந்திலும் இப்படித்தான் நடக்குமோ? இங்கே பேசாத ஐயா அங்கேபோய் எமக்காக எதைப் பேசி எப்படி வெட்டிப்பிளக்கப்போகிறாராம்?

இருபதாம் நூற்றுண்டின் மட்டக்களப்பு வாக்காளரின் பேச்சு தேர்தலில் போட்டியிடுபவரையும் கூடச் சென்றவர்களையும் நாவசைக்க வைக்கவில்லை. மிகச் சிரமப்பட்டு "அப்ப நாங்கள் போய் வருகிறோம்" என்று ஒப்பனைக்குச் சொல்லிவிட்டு திரும்பியும் பாராது நழுவினார்கள். அன்றைய தினம் பின்னர் அந்தக் கிராமத்தில் வேறு எந்த வீட்டுக்குமே அவர்கள் போகவில்லை.

* * *

அப்புக்காத்து ஐயாவும் இன்னும் இரண்டொருவரும் நாவற்குடா என்ற கிராமத்துக்கு விஜயம் செய்தார்கள். படித்தறியாத ஒரு பாமரர் வீட்டுக்குள் போய் அங்கிருந்தவரிடம் வோட்டுப்போடும்படி கேட்டார்கள்.


யாரை இவர்கள் வோட்டுக் கேட்டார்களோ, அவரே இவர்களை ஒரு கேள்வி கேட்டார்: "நீங்கள் எல்லாரும் எந்தக் கட்சி?"

என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் பேந்தப் பேந்த விழித்தார்கள். ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "நாம் தமிழருக்காக வந்திருக்கிறோம்" என்றார்கள்.

"அப்ப நீங்கள் தமிழ்க் கட்சியோ? தமிழ்க் கட்சிக்கு அந்த தம்பி இராசதுரையாமே".

"நாங்கள் அந்தக் கட்சியல்ல. நாங்கள் வந்து..."





கண்ணதாசன் புரொடக்ஷன்ஸ் 'கவலை இல்லாத மனிதன்' என்ற படத்தில் கதாநாயகன் சந்திரபாபுவும் விஜயலட்சுமியும்.

எந்தக் கட்சியாயிருந்தாலும் என்ன, நம்ம வோட்டு தமிழ்க் கட்சிக்குத்தான் தம்பி. நீங்கள் அடுத்த இலெக்ஷனுக்கு அந்தக் கட்சியிலை வாருங்கோ, உங்களுக்குப் போடுகிறேன்."

"அப்ப, நாங்கள் போய் வருகிறோம்."

"யார் வேண்டாமென்றது?"

வெட்கக்கேடு, வேதனை- இரண்டோடும் இடிந்து போய் திரும்பினார்கள் அப்புக்காத்து ஐயாவும் பக்கத் துணையாகச் சென்ற பிரகஸ்பதிகளும்.

* * *

### தர்மலிங்கம்

அப்புக்காத்து ஐயாவுக்கு நடந்த இந்தவரிசை யாழ்ப்பாணத்தில் உடுவில் தொகுதியிலும் ஒருவருக்கு நடந்தது. அதில் உள்ள வேடிக்கை மிக ரஸமானது.

உடுவில் தொகுதியில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் திரு. தர்மலிங்கம் வாக்காளர்களைச் சந்திக்கச் சென்ற இடத்தில் ஒரு தமிழ் மூதாட்டியிடம் மாட்டிக் கொண்டார். தாம் சென்ற நோக்கத்தை அவர் சொன்னார். மூதாட்டி ஒரே அடியாகச் சொன்னார்: தம்பி எனக்கு வேறொன்றும் தெரியாது. [illegible]

"நான் அந்தக் கட்சிதான் ஆச்சி"—திரு தர்மலிங்கம் சொன்னார்.

"பொய். அது உந்த அமுதலிங்கம் எல்லோ போன முறையும் வந்து கேட்டு நான் போட்டது. நீ எனக்கு சுணக்கு விடப் பார்க்கிறாய் இல்லையா?"

திரு அமிர்தலிங்கம் முன்போல் வட்டுக்கோட்டைத் தொகுதிக்கே இம் முறையும் போட்டியிடுகிறார் என்றும் முன்னர் வட்டுக்கோட்டைத் தொகுதியின் ஒரு அங்கமாக இருந்த உடுவில் பகுதி இப்போது உடுவில் தொகுதியில் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றும் உடுவில் தொகுதிக்கு தாமே தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடுவதென்றும் உண்மையை அந்த மூதாட்டிக்கு விளக்குவதில் திரு தர்மலிங்கம் பட்ட சிரமம் போதும் போதுமென்றாகிவிட்டது. விஷயமறிந்ததும் தர்மலிங்கத்தைக் கட்டித் தழுவினார் மூதாட்டி. என்னே அன்னவரின் கட்சி அபிமானம்.

* * *

### மாஸ்டர்

திருவாளர் நல்லையா அதாவது நல்லையா மாஸ்டர் இருக்கிறாரே அவருடைய போக்கு தனியானது. எட்டப்பரின் தமிழ் பேசும் முன்னணி சார்பாக கல்குடா தொகுதியில் போட்டியிடும் அவர் "உண்மையில் முன்னணிதான் தமிழ் பேசுகிறதா அல்லது தமிழர்கள் தமிழ் பேசுகிறார்களா? எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை என்று பச்சையாகச் சொல்லிவிட்டார்.

இது மட்டுமா? "கட்சியைப்பற்றி யார் கவலைப் படுகிறார்கள். எனக்குக் கொஞ்சம் பணமுடை. ஐந்நூறு ரூபா (கட்டுப்பணத்தில்) மிச்சப்படுத்த விரும்பினேன். அவ்வளவுதான்" என்றும் தமது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தியவர் அவர்.

கடந்தநாலாந்தேதி தமது நியமனபபத்திரத்தை மட்டக்களப்பு கச்சேரியில் தாக்கல் செய்துவிட்டு வாழைச் சேனைக்குத் திரும்பிய சமயம் இடையில் உள்ள முறக்கட்டான் சேனையில் சிறிது நேரம் தாமதித்தார்.

முறக்கட்டான் சேனை சந்தியில் காரை நிறுத்தியதும் அங்கு நின்ற ஒருவரைப் பார்த்து "தம்பே! என்ற தமது வழக்கமான வார்த்தையோடு இறங்கினார்.

"தம்பே! நானும் இந்த முறை தேர்தலுக்கு நிற்கிறேன் தம்பே" என்றார்.

அதற்கு அங்கு நின்றவர் கொடுத்த பதில்:

"போனமுறை இலெக்ஷனுக்கு நின்றீர்கள்; நம்மிடம் வந்தீர்கள், அப்புறம் இந்த இலெக்ஷனுக்குத்தானே மாஸ்டர் வந்திருக்கிறீர்கள் இடையில் எத்தனையோ எல்லாம் நடந்து என்னபாடு பட்டோம். எட்டிப்பார்த்தீர்களா? இலெக்ஷன் வரும் போதுதான் நாங்கள் இருக்கிறது தெரிகிறதா?

"அப்ப நான் வாறேன் தம்பே"—மறு பேச்சில்லை. நிலைமை மாறிவிட்டது என்பதைத் தெரிந்துகொண்டு கம்பி நீட்டிவிட்டார் மாஸ்டர்.

* * *

திரு நல்லையா தமது நியமனப் பத்திரத்தைக் கச்சேரியில் தாக்கல் செய்து விட்டு வெளியில் வந்த சமயம் அவருக்குச் சரியான சூடு ஒன்று கிடைத்து விட்டது.

வெளியில் காத்து நின்ற தமது பழைய நண்பர் ஒருவரை அணுகி அவருக்கு சிகரெட் நீட்டினார் திரு நல்லையா.

அப்போது கடுகடுத்த முகத்தோடு அந்தப் பழைய நண்பர் சொன்னார்:-என்னுடைய நண்பர் 1947-ம் ஆண்டு நல்லையா மாஸ்டர் இப்போது இல்லை. இப்போது உள்ளவரை எனது நண்பர் என்று சொல்லவே எனக்கு வெட்கமாக இருக்கிறது. மெத்தப் பெரிய உபகாரம். எனக்கு சிகரெட் வேண்டியதில்லை"

அவ்வளவுதான் திரு நல்லையா அந்தப் பக்கம் கூடத் திரும்பி பார்க்கவில்லை. விரைந்து சென்று விட்டார்.

---

### பத்மினி

"பத்மினி அழுவது கூட அழகாகத்தான் இருக்கும்" என்றார் அறிஞர் அண்ணா. அதன் பொருள் படத்தைப் பார்க்கும்போது புரிகிறதல்லவா?

"பொன் விளையும் பூமி"யிலே பத்மினிக்கு என்ன குறை நேர்ந்ததோ? இப்படித் தலையிலே கையை வைத்து பார்ப்பவர்களைத் துடிக்கச் செய்யும் அளவுக்கு சோகக் குறி காட்டுகிறார்.

குணசித்திர நடிப்பு பத்மினிக்கு தண்ணீர் பட்ட பாடு.

---

### கடவுளுக்கு . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் ஒரு தொகுதி அபேட்சகர்களை இவ்வாரம் அறிமுகம் செய்வதாக கடந்த கடிதத்தில் குறிப்பிட்டேன் அல்லவா? அந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக இசைத் தட்டுச் சங்கீதம் கேட்கலாம்.

"தேடித் தேடி அலைகிறேனே
அரஹரோ! உங்க தெரிசனம்
கிடைக்கல்லையே அரஹரோ
"அரஹரோ.........
"அரஹரோ........."

—நாரதர்

20-1-1960.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மைத் தமிழர்....

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தும் பிரயோசனம் இல்லை என்பதே எனது கருத்தாகும். எனவே மகா சபையிலிருந்தும் தனதிகாரி என்ற பொறுப்புள்ள உத்தியோகத்திலிருந்தும் ராஜிநாமா செய்துகொள்ளுகிறேன்''

மேற்கண்டவாறு திருஞானரத்தினம் தமது ராஜிநாமாக் கடிதத்தில் கூறியிருக்கிறார்.

## மற்றும் ராஜிநாமாக்கள்

இவர்கள் தவிர, சி. பா. மகாசபை வாலிப முன்னணித் தலைவர் திரு மகாலிங்கம், மற்றும் மார்டின் நடேசு, பி. கிருஷ்ணபிள்ளை நல்லதம்பி ஆகிய கமிட்டி உறுப்பினர்களும் உடனடியாகவே பதவி துறந்தனர்.

கூட்டம் நடைபெறுகையில் அங்கு நிலவிய ஒழுங்கினத்தையும் அடாதுடித்தனங்களையும் காணச் சகிக்காதவராக மகாசபையின் கல்விக் குழுத் தலைவர் திரு கே. டி. மாணிக்கம் இடையில் அங்கிருந்து வெளியேறிப் போய்விட்டார். ஏற்கனவே ராஜிநாமாச் செய்தவர்களைத் தொடர்ந்து மற்றும் பல பிரமுகர்கள் தம் பதவி விலகல் கடிதங்களை இவ்வாரம் அனுப்பவிருக்கின்றனர்.

மகாசபை ஒரு கொம்யுனிஸ்டு ஸ்தாபனமேயென்பது அம்பலத்தில் நிரூபிக்கப்பட்டுவிட்டதால் அது ஒரு அரசியல் கலப்பற்ற ஸ்தாபனமெனக் எண்ணி ஏமாந்து கமிட்டியில்கூட அங்கம் வகித்தவர்களான அரசாங்க ஊழியர்கள் மத ஸ்தாபனத் தலைவர்கள் முதலானோர் தாமாகவே ஒதுங்கிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

ஞாயிற்றுக்கிழமை நடந்த அமளிமிக்க கூட்டத்தையடுத்து மகாசபை பூரண கொம்யுனிஸ்டு கைப்பொம்மை ஸ்தாபனமாகச் சுத்திகரிக்கப்படும் வகையில் கொம்யுனிஸ்டு அல்லாதவர்கள் ஒருவர் பின் ஒருவராக வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

## தலைவர் செய்த வேலை

சிறுபான்மைத் தமிழர் மகாசபை பொதுத் தேர்தலில் போட்டியிடுவதெனமுதலில் முடிவு செய்ததாயினும் கொம்யுனிஸ்டு அபேட்சகர்களுக்கு வாய்ப்பான முறையில் பின்னர் அத்தீர்மானத்தை மாற்றிக்கொண்டது. ஆகவே மகாசபைச் சார்பில் கோப்பாயில்போட்டியிடவிருந்த அதன் தலைவரான திரு எம். சி. சுப்பிரமணியம் (தீவிர கொம்யுனிஸ்டு தாசர்) தன் எண்ணத்தை மாற்றிக் கொம்யுனிஸ்டு அபேட்சகர் திரு நடராசாவுக்காக அத்தொகுதியில் வேலை செய்து வந்தார்.

## கொம்யுனிஸ்டு தலைமைப்பீடம் தலையீடு

அவரும் மகாசபையின் மற்றும் பல முக்கிய நிர்வாகிகளான கொம்யுனிஸ்டுகளும் மகாசபையின் பெயராலேயே திரு நடராசாவுக்கு வாக்குச் சீட்டுப் பிச்சை கேட்டு வந்தனர். திரு நல்லதம்பி திடீரென அத்தொகுதியில் சுயேச்சைவாதியாகக் குதித்தது அவர்களைத் திக்குமுக்காடச் செய்துவிட்டது. முதலில் நல்லதம்பிக்காக திரு நடராசாவைப் போட்டியிலிருந்து விலக்க அவர்களில் சிலர் எடுத்த முயற்சி கொம்யுனிஸ்டு தலைமைப் பீடத்தில் பலிக்கவில்லை. ஆகவே அவர்களும் திரு நடராசாவையே ஆதரிப்பதெனவும் மகாசபையல்ல கட்சி தான் தங்களுக்குப் பெரிதெனவும் வற்புறுத்திப் பேசத் தொடங்கினார்கள்.

இந்த அருவருக்கத்தக்க கருத்தை ஞாயிற்றுக்கிழமை நடந்த கமிட்டிக் கூட்டத்தில் கண்டித்தவர்கள் பலரும் இதுகாலவரையும் மகாசபை கொம்யுனிஸ்டு கட்சிக்குச் சார்பாகச் செய்து வந்த சூழ்ச்சிகரமான வேலைகளையும் அம்பலப்படுத்தினர். தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொம்யுனிஸ்டு கட்சிதான் பெரிதென்றால் மகாசபை எதற்கு என்ற கேள்வியும் அங்கு எழுப்பப்பட்டது.

## மார்ச் 19-ம் நாள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவு தேடப்பார்க்கிறார்கள்! நமது பதிலென்ன...?

- மார்ச் 19 ஆம் நாள்!
- பொதுத்தேர்தல் நாள்.
- இனத்துரோகிகள் கவிழும் நாள்.
- தோழர்கள் தோல்வியடையும் நாள்.
- தமிழரசு அபேட்சகர்களின் வெற்றித் திருநாள்.
- தமிழினத்தின் விடுதலை நாள்!

இவற்றைநாம்வெகு விமரிசையாகநிகழச் செய்யவேண்டும். அவ்வளவுதான்.

# மந்திரிப் பதவி...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தாப நிலையை ஒருபோதும் அடைந்திருக்காது.

உண்மை இப்படியிருக்க, 1954-ம் ஆண்டின் பின்தான் தமிழரது நல்வாழ்வுக்குப் பகையான சக்திகள் தலைவிரித்தாடத் தொடங்கின என்று கூறுவதன் இரகசியம் என்ன? 1954-ம் ஆண்டு வரை திரு பொன்னம்பலம் மந்திரியாக இருந்தார். 1954-ல் தான் சேர் ஜோன் கொத்தலாவலையினால் உதைத்துத் துரத்தப்பட்டார். அதாவது தாம் மந்திரியாக இருக்கும்வரை தமிழ் மக்கள் நிலை சீராகஇருந்தது. அதன்பின்னர் தான் சீர் கெட்டது என்பதாகத்தமிழ் மக்கள் நம்ப வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். இப்படிச் சொல்வதன் மூலம் தாம் மந்திரிப் பதவி யேற்ற தவறை மூடி மறைக்கப் பார்க்கிறார்.

அவர் ஒரு மானங்கெட்ட மந்திரியாக இருக்கும்வரை அதாவது 1954 வரை தமிழ் மக்கள், தலைவர்கள் ஐக்கியப் பட்டா, ஒற்றுமைபபட்டா இருந்தார்கள்? இல்லை. ஆனால் அவர் மந்திரியாய் இருக்கும் வரை ஒரு ஐக்கிய முன்னணியை அமைகக வேண்டிய அவசியத்தை திரு பொன்னம்பலம் உணராதது விந்தையே. என்று அவருக்கு மந்திரிப்பதவி பறந்ததோ என்று ஒத்துழைப்புத் துரோகிகள் எல்லோரையும்ஒதுக்கி விட்டு தமிழரசுக் கட்சி பொதுத் தேர்தலில் இடம் பிடித்துக்கொள்ளப் போகிறது என்பதை தமிழ்க் காங்கிரஸாரும் அதன் தலைவரும் உணர்ந்தார்களோ, அன்று தான் அவர்கள் மனதில் தமிழ் மக்கள் ஒன்றுபட வேண்டும், ஐக்கிய முன்னணி அமைக்க வேண்டும் என்ற கபட சிந்தனை உதயமாயிற்று வேடிக்கை! வேடிக்கை! இந்த வியாக்கியானத்தை வெட்கமில்லாமல் வேறு வெளியிடுகிறார் திருவாளர் பொன்னம்பலம் தமது கட்சியின் கொள்கைத் திட்டங்களில்! யாரை மருட்டப் பார்க்கிறார்? யாரை ஏமாற்றப் பார்க்கிறார் என்று கேட்கிறோம்.

இனத்துக்குத் துரோகம் விளைத்து, கூட நின்றவர்களைக் கைவிட்டு கொள்கையைக் கைவிட்டு, மலைநாட்டுத் தமிழர்களைக் கழுத்தறுத்து மந்திரி பதவிவகித்த காலம்வரை தமிழ் மக்களின் ஐக்கியமும் முன்னணியும் அவசியப்படவில்லை இந்த மாய்மாலக்காரருக்கு. மந்திரி பதவி பறிபோய் அடுத்து வந்த பொதுத் தேர்தலில் இடம் கிடைக்குமோ கிடையாதோ என்ற கவலை யேற்பட்டபோதுதான் —'ஐக்கிய முன்னணி யொன்றை உருவாக்குவதற்கு தமது காங்கிரஸ் முயன்றதாம்!'

(தொடரும்)

## தமிழ் இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

ஆலி-எல ஆறுகாமம் தோட்டம் தமிழ் இளைஞர் மறுமலர்ச்சி மன்றத்தினரால் கடந்த 9-1-60,ல் பதுளைக்கு விஜயம் செய்திருந்த உலக சைக்கிள் வீரர் திரு. வலம்புரிக்கு ஓர் வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்பில் ஏழு முத்தல் தேயிலை கொழுந்து மாலை அணிவிக்கப்பட்டு ஒரு வரவேற்புப் பத்திரமும் வாசித்து அளிக்கப்பட்டது.

செல்லமஹால் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

தமிழில் முதலாவது டார்சான் படம்

பிமா என்னும் யானையையும், பிட்ரோ என்னும் மனிதக் குரங்கையும் காணத் தவறாதீர்கள்!

யானை வளர்த்த வானம்பாடி

குமாரி — ஸ்ரீராம் — நம்பியார் நடித்தது.

2-வது வாரம்! எல்பின்ஸ்டன்—றீகல்

ஜெமினி கணேசன்-ராஜம்-ஜமுனா நடிக்கும்

நல்ல தீர்ப்பு

கெயிட்டி 6-வது வாரம்!

நாகேஸ்வரராவ்-வைஜயந்திமாலா-மனோகர் நடிக்கும்

அதிசயப்பெண்

(டெக்னிக் கலர் நடனங்கள்)

ஆவலோடுஎதிர்பார்த்த இவ்வாண்டுச் சிறந்தசினிமாப்படம்

அவள் யார்



சிவாஜி கணேசன்-பண்டரிபாய்

எஸ். வி. சகஸ்ரநாமம்,

எஸ். வி. ரங்கராவ்,

சௌகார் ஜானகி, மாலினி,

டி. ஆர். ராமச்சந்திரன்,

டி. கே. ராமச்சந்திரன், சந்தியா,

கோபால கிருஷ்ணன்

ஆகியோர் நடித்தது.

28-ம் திகதி முதல் ஆரம்பம்

சென்ட்ரல் (கொழும்பு) ஒடியன் (கலஹை) ராணி (யாழ்ப்பாணம்) ஜோதி (திருகோணமலை)

இன்னும் மூன்று திரைகளில் காண்பிக்கப்படும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விடாமுயற்சி

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்", "மனிதனால் ஆகாதது ஒன்றும் இவ்வுலகில் இல்லை" என்பது ஆன்றோர் வாக்கு. முயற்சியுடையவன் ஒரு நாளும் கீழ் நிலை அடையமாட்டான். கைக் கொண்ட ஒரு செயலை செய்ய முடியாது என்று பின் வாங்குதல் கூடாது அச் செயலை விடாது முயற்சியுடன் தொடர்ந்து செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. இதைக் கருதியே தெய்வப்புலவரும்.

அருமையுடைத் தென்று
அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

என்று கூறிப் போந்தார்.

இன்றைய உலகில் நாம் பல புதுமைகளைக் காண்கின்றோம். அவைகள் எல்லாம் எவ்வாறு தோன்றின? எல்லாம் எங்களைப் போன்றவர்களின் விடாமுயற்சியினாலேயாகும். விஞ்ஞானமும ஒரு விஞ்ஞானியின இடைவிடா முயற்சியினாலேயே உண்டாகியது. ஆகவே நாமும் முயன்றால் எதையும் செய்யலாம்.

முயற்சியின் எதிரி சோம்பல், ஆகவே சோம்பலுக்கு இடம் கொடுக்கக் கூடாது. சோம்பித் திரிபவனுக்கு எடுத்த காரியமெல்லாம் கஷ்டமாகத் தோன்றும். முயற்சியுடையவனுக்கு எக் காரியமும் சுகமாகத் தோன்றும். ஒருவன் பணமுள்ளவனாக இருந்தும் சோம்பேறியாயின் அவனுக்கு அப்பணத்தால் ஒரு பயனும் உண்டாகாது. முயற்சியுடையவன் ஏழையானாலும் அவன் முன்னவனிலும் பார்க்க அதிக நன்மையை அடைகிறான்.

"நீ எண்ணித் துணிந்த பின் உலகம் வாளேந்தி உன்னை எதிர்க்க வந்தாலும் நீ கைக் கொண்ட காரியத்தை கைவிடாது செய் வெற்றி உனதேயாகும்" என்பது ஒரு அறிஞரின் பொன் மொழி.

மாணவராகிய நாமும் சோம்பல் என்னும் சிறு களையை களைந்து, விடாமுயற்சி என்னும் பெரும் பயிரை வளர்ப்போமாக.

முயற்சி திருவினையாக்கும்
முயற்றின்மை
இன்பம் புகுத்தி விடும்

—புனிதவதி ஆறுமுகம்
புன்னாலைக் கட்டுவன்.

# தோழனே கேள்!

தோழனே! நீ இப்போது பள்ளியில் படிக்கும் மாணவனாகவல்லவா இருக்கிறாய்? படி! நன்றாகப் படி!! நீ வருங்கால இளைஞன்—சமூக சிற்பி என்பதை மனதிற்கொண்டு படி! இதை மறவாதே.

நீ எப்படிப்பட்டவனாக விரும்புகிறாய்? அரசியல் தலைவனாக விரும்புகின்றாயா? மேடைப் பேச்சாளனாக விரும்புகின்றாயா? அல்லது சமூக சிற்பியாம் எழுத்தாளனாக விரும்புகின்றாயா? இல்லை...இல்லை, காவியம் புனையும் கவியாக விரும்புகின்றாயா? அதுவுமல்லாவிட்டால் உலக உத்தமர்களைப் போல ஆக விரும்புகின்றாயா? அல்லது...கூறவே நாகூசுகிறது...! பிறந்ததைப் போல (எவருமறியாது) இறந்துவிடப் போகின்றாயா?

கூடாது! கூடவே கூடாது!! நீ சாதாரண மனிதனொருவனைப்போல இறந்துவிடக் கூடாது. நீ பிறந்ததன் பயனை அடைய வேண்டும்!

உனது பெயரை மக்களுள்ளங்களிலே பொறிக்க வேண்டும்! உன்னை நமது சமூகம் போற்ற வேண்டும். ஆகவே "தோன்றின் புகழோடு தோன்றுக..." என்ற குறளினை அடிக்கடி நினைத்துக் கொள். உச்சரித்துக்கொள்.

நீ எப்படிப்பட்டவனாக விரும்பினாலும், அதற்கு இப்போதிருந்தே உன்னை எல்லா விதத்திலும் ஆயத்தம் செய்துகொள்.

உன்னை எப்போதும், பசியுள்ளவனாக ஆக்கிக்கொள். ஆமாம் 'அறிவுப்பசி'யைத் தான் கூறுகிறேன். அப்போதுதான் நீ படிப்பாய். ஆனால் நண்பனே உத்தியோக மோகங்கொண்டு படிக்காதே! "நான் இந் நாட்டில் பிறந்தது இந்நாட்டின் நன்மைக்கே! எனது சமூகத்திற்குச் சேவை செய்யவே நான் உருவாகினேன்! நான் எனது சமூகத்திற்கு ஒரு வழிகாட்டியாக இருப்பேன்" என்னும் கருத்துக்களை மனதிற்கொண்டு கல்வி பயில்வாயாக.

நீ உனது பாடசாலையில்—கல்லூரியில் நடக்கும் ஒவ்வொரு விடயத்திலும் பங்கு பற்று விளையாட்டா...! அதில் நீ முதன்மையானவனாயிருக்க வேண்டும்!

மாணவர் கூட்டமா...! தினமும் அறிக்கையில் உனது பெயர் காணப்பட வேண்டும்! பேச்சுப்போட்டியா...! விடயங்களோடு, ஆதாரத்தோடு, கருத்தோடு நீ பேச வேண்டும்! வெற்றி உனதே— எல்லாவற்றிலும் இதோ இவைதான் முக்கியம். இந்த உலகம் பொல்லாதது! பாழடைந்தது. நரிகளும், நாசகாரர்களும் நிறைந்தது. கோட்டான்களையும், கோழைகளையும் கொண்டது. வல்லூறுகளையும் வஞ்சகர்களையும் வளர்த்துள்ளது. மடையர்களும், மாபாவிகளும் மலிந்தது. பாவிகளும், பச்சோந்திகளும் பரப்பியுள்ளது.

இவற்றிடையே நீ நல்லவனாக விரும்பினால்—ஒரு வழிகாட்டியாக வேண்டுமானால்—உன்னிடம் சில அரிய குணங்கள் சிறந்து விளங்க வேண்டும்.

ஆகவே நண்பா இதோ இவற்றைக் கவனி: ஒழுக்கமுள்ளவனாக இரு—'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'! அறிவாளிகளையே நாடு—'சான்றோர் இனத்திரு'! கடமைக்காக வாழ்—'அறஞ்செய்ய விரும்பு'! இரக்கமுள்ளவனாயிரு—'தானமது விரும்பு'! பிறருக்கு துன்பஞ் செய்யாதே—'சூதும் வாதும் வேதனை தரும்'! அடிமைகட்கு அன்பு காட்டு 'இழோராயினும் தாழ உரை'! கோபம் கொள்ளாதே—'நீராக்கோபம் போராய் முடியும்'! அதிகமாகப் பேசாதே 'மோனம் என்பது ஞான வரம்பு'! அமைதியோடு, அன்பாக, தூய்மையுடன் பேசு—வஞ்சகம் பேசேல்'—'ஞயம்பட உரை.'

சினேகிதனே இவற்றிற்கும் மேலான தொன்றுளது. அதுதான் உன் பெற்றோரிடம் அன்பு காட்டி அவர் சொற்படி நடப்பது—'பெற்றோரைப் பேண்'—'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை'—'தாயிற்சிறந்த தொரு கோவிலுமில்லை.'

ஆனால் நண்பா! உன்னைப் பெற்றோர் உன்னைப் பெட்டிப்பாம்பாக ஆக்கிவிடுவார்களெனக் கண்டால் சூழ்நிலைக்கேற்ப—அவர் தம் மனதை நோகப்பண்ணாமல் நடந்துகொள்.

தோழனே! செய்வினை திருந்தச் செய்! வெற்றி நிச்சயம் உன்னுடைய முதல் முயற்சி தோல்வியுறலாம். ஆனால்! கவலை கொள்ளாதே. இரண்டாவது முறையும் முயற்சி செய்! சில வேளை அதுவும் தோல்வியுறலாம். அப்போதும் உன் மனது உறுதியோடிருக்க வேண்டும்! மூன்றாவது முறை கட்டாயமாக நீ வெற்றி பெறுவாய்! அதுவும் தோல்வியுற்றால்...! முயற்சி! முயற்சி!! முயற்சி!!! ஈற்றில் வெற்றி! 'ஊக்கமுடைமை ஆக்கத்திற்கழகு.'

மறந்துவிடாதே. நீ வருங்கால இளைஞன்—வீரன்—தீரன்—அறிஞன் நாட்டில் நலம் பெற உழைப்பாயாக!! நீ வளம்பெற வாழ்வாயாக!!

—மு. [illegible]
மத்துகாமம்.

## "மனிதனும் விஞ்ஞானமும்"

இன்று உலகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. முயல் வேகத்திலா அல்லது ஆமை வேகத்திலா இல்லை! இரண்டுமே இல்லை! இன்றைய உலகம் மின்சார வேகத்தில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. இதற்கு மூலகாரணம் விஞ்ஞானமாகும். மிருகத்தோடு மிருகமாய் பரந்த அறிவற்ற பாமரராய் கிணற்றுத் தவளைகளாய் வாழ்ந்த மனித இனத்தை அறிவுச் சுடர் வீசும் அணையா ஜோதியாய் உருவாக்கிய பெருமை விஞ்ஞானத்தையே சாரும்.

வான வெளியிலே வட்டமிடும் வானம்பாடிகளைப் போல நானும் வான வெளியிலே வட்டமிட முடியவில்லையே என்று பெரு மூச்சு விட்ட மனிதனை வானம்பாடிகளைப் போல வலம் வர வைத்த பெருமை விஞ்ஞானத்தையே சேர்ந்ததாகும்.

உலக முன்னேற்றத்தின் வர்ச்சிக்கு ஆக்க வேலைகளையும் இயக்க வேலைகளையும் உருவாக்கும் உண்மையான உழைப்பாளி விஞ்ஞானமாகும். மனிதன் என்று சிந்திக்க ஆரம்பித்தானோ அன்றிலிருந்தே சீர்திருந்த ஆரம்பித்தான்.

ஒரு பொருளை எடுத்துக் கொண்டால் ஏன்? எப்படி? எதனால்? என்ற வினாக்களின் மூலம் சிந்தனையைச் செலுத்தினான். அதன் முடிவு மனிதன் அறிவு வளர்ச்சியடைந்தான். விஞ்ஞானம் என்ற விந்தை உலகத்தை அமைத்தான். உலகில் மறைந்திருந்த உண்மைகளைக் கண்டு பிடித்தான். அதை உலக மக்களுக்கு உணர்த்தினான். ஆங்காங்கே பல யந்திரங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. ஆக்க வேலைகளையும் இயக்க வேலைகளையும் கண்டு பிடித்து மனிதன் தனது தேவைகளைப் பெருக்கிக் கொண்டான்.

ஆழ் கடலின் மேல் அன்ன நடை போட்டான் மனிதன். வான வெளியிலே சுதந்திர வானம்பாடிகளைப் போல் பறந்து திரிந்தான் மனிதன் விரைந்து செல்லும் மோட்டார் வாகனங்களையும் விண்ணை ஊடறுத்துச் செல்லும் விஞ்ஞான விந்தைகளைக் கண்டுபிடித்தான் மின்சார வேகத்தில் உலகை முன்னேற்றிவிட்ட விஞ்ஞானத்தின் பெருமையை என்னவென்று கூறுவது. இதன் பெருமையை அறியாதவர் சிலர் விஞ்ஞானத்தை வெறுக்கின்றனர் இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை! கத்தியைக் கொண்டு காய்கறியை வெட்ட வேண்டுமே தவிர கழுத்தை வெட்டக் கூடாது அதைப் போல விஞ்ஞானத்தை கொண்டு ஆக்க இயக்க வேலைகளை உருவாக்க வேண்டுமே தவிர அழிவு வேலைகளைச் செய்யக் கூடாது இவற்றால் சிலரின் மனம் விஞ்ஞானத்தை வெறுக்கிறது. இதற்கு விஞ்ஞானம் என்ன செய்யும்? மதி படைத்த மனிதன் அல்லவா சதி செய்கிறான்? விஞ்ஞானிகள் விஞ்ஞானத்தால உலகை ஆக்க வேண்டுமே தவிர உலகை அழிக்கக் கூடாது மக்களின் வாழ்க்கை வசதியைப் பெருக்கி மக்கள் வளமாக வாழ வழி செய்ய வேண்டும். இதுதான் நாட்டுக்கு நல்ல தொண்டு.

—உதயகுமார்,
கொழும்பு.

## வளர்மதி புதிய மருமக்கள்

2729 சு. பவேந்திரநாதன், சுன்னாகம்.

2730 கா. வேதவனம், நீர்வேலி.

2731 மு. யோகராசா, யாழ்ப்பாணம்.

2732 பொ. சிவானந்தநாதன், சுன்னாகம்.

2733 த. கனகலிங்கம், யாழ்ப்பாணம்.

2734 சி. சுதந்திரராசா, தாவடி.

2735 வே. பூபாலசிங்கம், அனுராதபுரம்.

2736 சி. தங்கவடிவேல், நிக்கவெரட்டியா.

2737 நா. சிவதாஸன், கோப்பாய் தெற்கு.

2738 சி. இராமச்சந்திரன், தொண்டமானாறு.

2739 ஏ. கே. எம் கதிர்காமநாதன், யாழ்ப்பாணம்.

2740 கா. சிவபாலன், தம்பலகாமம்.

2741 எம். எஸ். அப்துல் காதர், யாழ்ப்பாணம்.

2742 சி. க. அந்தோனிப் பிள்ளை, பருத்தித்துறை.

2743 சி. முகம்மது முகையதீன், பட்டக்களப்பு.

---

## போதனையை விட சாதனையே பெரிது

அன்புத்தம்பிக்கு,

வணக்கம் பல. நீ அனுப்பிய கடிதம் கிடைக்கப்பெற்று மிக, மிக மகிழ்ச்சியடைந்தேன். உன்னிடம் உள்ள கலையார்வமும், எதையாவது சாதிக்க வேண்டும் என்ற உணர்ச்சியும் என்னை உவகை கொள்ளச் செய்தது.

நீ எவ்வளவு தூரம் கற்க முடியுமோ அவ்வளவு தூரம் கற்று ஓர் இலட்சிய வாதியாக ஓர் கொள்கைக்காக வாழ்பவனாக திகழ வேண்டும் என்பதே எனது அவா.

ஔவைப்பாட்டியார் கூறுகிறார்!—

"கற்கை நன்றே கற்கை
நன்றே
பிச்சை புகினும் கற்கை
நன்றே"

என்று நீ எப்பேர்ப்பட்ட வறுமை நோயால் துன்புறுத்தப்பட்டாலும் இல்லங்கள் தோறும் சென்று பிச்சையெடுக்க நேர்ந்தாலும் கற்க வேண்டுமென்ற குறிக்கோளைக் கைவிடக் கூடாது. அரசியல், இலக்கியம், பொருளாதாரம், சமயம், விஞ்ஞானம் ஆகிய கலைகளில் பாண்டித்தியம் பெற்ற இவ்வறிஞர்கள் மத்தியில் அறிவைப் பெறுவதற்கு எவ்வளவோ வாய்ப்பு இருக்கிறது இதை நீ உணர்வாயாக.

நீ நினைக்கக் கூடாது கற்றால் மட்டும் நமது கடமை முடிந்து விட்டது என்று. அப்படி நினைத்தால் அது பெரும் தப்பாகும்.

"கற்கக் கசடறக் கற்க
கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்று கூறினார் வள்ளுவனார். நீ கற்பதை ஐயம் திரிபு அறக் கற்று அதன்படி நின்றொழுகுதலே மேலானதாகும். உனது சாதாரண வாழ்க்கையும் கலை வாழ்க்கையாக மிளிர வேண்டும். ஓர் பேல் நாட்டறிஞர் கூறுகிறார் ஒரு அந்தர் போதனையைப் பார்க்கிலும், ஒரு அவுன்ஸ் சாதனை எவ்வளவோ சிறந்தது என்று.

எனவே நீ நாட்டுக்கு நன்மை பயக்க எதையாவது சாதித்து மொழிப் பற்று, நாட்டுப் பற்று, சமயப்பற்று உள்ளவனாக வாழ்க்கையை செலுத்துவாயாக. மீதி பிறகு.

வணக்கம்.

உன் அண்ணா.
—சு. சந்திரசேகரம்.

---

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம் கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் .இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

### வளர்மதி
### சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப்பத்திரம்

இல. 8.

பெயர்..........................................................

பாடசாலை..........................................................

விலாசம்..........................................................

..........................................................

.................................. ..................................
பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் கையொப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொக்குவில் ஹரிஜன சகாய நிதி

மகாத்மா காந்தி ஞாபகார்த்த ஹரிஜன சகாய நிதி (கொக்குவில்) என்ற பெயருடன் ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிதியின் பெயரால் யாழ்ப்பாணத்திலுள்ள இந்துக் கல்லூரிகளிலும், அரசினர் கல்லூரிகளிலுமாக 18 மாணவ, மாணவிகள் உதவிகள் பெற்று வருகின்றனர். 1955, 1956, 1957 ஆகிய மூன்று ஆண்டுகளிலும் தெரிவுப் பரீட்சை மூலம் தேர்ந்து எடுக்கப்பட்ட இவர்கள் 5 வருட உதவி பெறுவதற்கான ஒழுங்குகள் இருந்தன. கல்வி முறையில் ஏற்பட்ட சில மாற்றங்களால் பிள்ளைகள் 6 வருடங்களில் எஸ். எஸ். சி. வகுப்பைப் பூர்த்தியாக்க வேண்டி வருவதால் ஐந்தாவது வருட முடிவில் தேர்ச்சியைக் கவனித்து ஒரு வருடத்தைக் கூட்டிச் சகாய நிதி வழங்குவதாக நிச்சயிக்கப்பட்டதுடன், இந்த உதவி பெற்றுக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்குள் எஸ். எஸ். சியில் போதிய திறமை காட்டிச் சர்வகலாசாலைப் புகு முகப் பரீட்சைக்குப் படிக்க விரும்புகின்றவர்களில் திறமைசாலிகளுக்குச் சர்வகலாசாலைக் கல்விவரை உதவுவதாகவும் நிதி பொறுப்பாளர்கள் தீர்மானித்துள்ளார்கள்.

இந்த நிதியின் பெயரால் வருடந்தோறும் கொக்குவில் ஆர். கே. எம். ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலையில் கல்வி கற்கும் ஹரிஜன மாணவர்களுக்கு அவர்கள் தகுதி நோக்கி உதவிகள் செய்யப்பட்டு வந்திருக்கிறது. டி வித்தியசாலையிலிருந்து இவ்வுதவி பெற்று எஸ். எஸ். சி. பரீட்சையில் திறமையுடன் சித்தி பெறும் மாணவருக்குச் சர்வகலாசாலைப் படிப்புக்கு உதவுவதாகத் தீர்மானிக்கப்பட்டு இவ்வருடம் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தற்போது கல்வி கற்கும் 18 மாணவர்களின் அனுபவங்களைக் கொண்டு எதிர்காலத்தில் சகாயம் வழங்கும் ஒழுங்குகள் திருத்தி அமைக்கப்படும். அதுவரை புது மாணவர்கள் எடுக்கப்பட மாட்டார் எனமேற்படி சகாயநிதிக் காரியதரிசி திரு சி கந்தையா அறிவிக்கிறார்.

# கழகச் செய்திகள்

### கலைவாணி சன சமூக நிலையம்

ஒட்டுமடம் கலைவாணி சன சமூக சேவா முன்றலில் தமிழர் தம் தனிப் பெரும் பண்டிகையான பொங்கல் விழா மிக விமரிசையாக நடைபெற்றது. அவ்வமயம் அங்கத்தவர்கள் அநுதாபிகள் யாவரும் பாற்பொங்கலைப் பரிவுடன் ஏற்றனர்.

பின்னர் நிலையத்தின் ஆண்டுக் கூட்டம் நிலையத் தலைவர் திரு கா. தம்பிஐயா தலைமையில் நடைபெற்றது.

நிலையச் செயலாளர் தமது ஆண்டு அறிக்கையினைவாசித்தார். திருவாளர்கள் நா. செல்வநாயகம், ஐ. லோகீஸ்வரன் ஆகியோர் பேசிய பின்னர் நிலைய புதுவருட உத்தியோகஸ்தர்கள் தேர்வு நடைபெற்றது.

தலைவராக திரு கா. தம்பிஐயாவும், உபதலைவர்களாய் திருவாளர்கள் வி. எஸ். சுப்பையா, ப. முத்துலிங்கம் ஆகியோர்களும் செயலாளராய் திரு சி. க. சிவசக்திவேல், திரு நா. செல்வநாயகம் ஆகியோர்களும் பொருளாளராய் திரு வே. பொன்னையாவும், உப பொருளாளராய் திரு ம. தெய்வேந்திரமும் கணக்கு ஆய்வாளராய் திரு இ. நடராசாவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

---

### தமிழ் முன்னேற்றக் கலை மன்றம்

முத்தமிழ் முன்னேற்றக் கலைமன்றக் கூட்டம் அணிமையில் 121 மலாய்வீதி கொம்பனித் தெருவில் திரு. ப. இசைநலராசனின் தலைமையில் நிகழ்ந்தது. இயல், இசை, நாடகம்எனும் முத்தமிழ்த் துறையில் முன்னேற்றமும் மறுமலர்ச்சியும் காண்பதே மன்றத்தின் குறிக்கோளும், இலட்சியமாகுமென இளங்கோ கலைமன்றச் செயலாளர் திரு. மணியும், திரு. செல்வராசனும் உரைத்தனர். மற்றும் வைரவன், கௌதமன், இராசேந்திரன், பூபாலசிங்கம், செல்வி. இராமலெட்சுமி ஆகியோர் உரையாற்றினர். அடுத்த கூட்டத்தின் பொழுது தமிழ்த் தலைவர்களிலொருவரை அழைத்துக் கௌரவிப்பதென மன்றம் முடிவு செய்தது.

---

### ஈழத் தமிழர் முன்னேற்ற கலை மன்றம்

ஈழத் தமிழர் முன்னேற்ற கலை மன்றத்தின் கலை நிகழ்ச்சியும் பொங்கல் விழாவும் 14-1-60-ல் மன்றப் பணிமனையில் டைரக்டர் ஆர். ஆர். டேலர் தலைமையில் நடைபெற்றது விழாவில் "புரட்சித்தேவன்" நாடகமும் நடன இன்னிசையும் இடம் பெற்றன. இறுதியில் தேனீர் விருந்துடன் விழா முடிவுற்றது.

---

### திரு. வி. எஸ். பிள்ளைக்கு பிரியாவிடை

நரக்களி உரோமன் கத்தோலிக்க சிரேஷ்ட தமிழ்ப் பாடசாலையில் கடந்த பத்து வருடங்களாக முதல் உதவி ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. வீ. எஸ். பிள்ளையவர்கள் 18-1-60 முதல் சலாபம்: சென்மேரிஸ் சிரேஷ்ட ஆண்கள் பாடசாலைக்கு மாறிச் செல்லவிருப்பதை முன்னிட்டு மேற்படி பாடசாலை ஆசிரியர், மாணவர்களும், கிராமப் பொது மக்களும் அன்னாரைக் கௌரவிக்கும் முகமாக 11-1-60 பங்குக் குருவானவர் சங்கை பிதா நீக்கிலாஸ் பிள்ளை (ஓ. எம். ஐ.) தலைமையில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் ஆசிரியர் மாலைசூட்டி வரவேற்கப்பட்டார். மாணவிகள் வாழ்த்துக்கீதம் பாடியபின் மாணவன் பி. அன்றனியால் அழகிய வேலைப்பாடமைந்த உபசாரப் பத்திரமொன்று வாசித்து ஒப்பிக்கப்பட்டதுடன, விலை மதிப்புள்ள பொருட்களும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

வண. நீக்கிலாஸ் சுவாமியாரும் தலைமை ஆசிரியர், திரு எம். நீ. லெம்பட்டும் மாறிச் செல்லும் ஆசிரியரின் சேவைத் திறனை வியந்து பாராட்டிச் சொற்பொழிவுகளாற்றிய பின், ஆசிரியர் வீ. எஸ். பிள்ளையவர்கள் தமக்களித்த சிறப்பான பிரியாவிடை வைபவ கர்த்தாக்கள் அனைவர்க்கும் நன்றி கூறினர்.

---

### சமாச ஆண்டு விழா

"யாழ்ப்பாண மாவட்டத்தில் கலாச்சார மறு மலர்ச்சிக்குச் சன சமூக நிலையங்கள் ஆற்றி வரும் மகத்தான சேவைகள் என் உள்ளத்தைக் கவர்கின்றன. மறைந்து வரும் நமது கிராமிய கலை, கலாச்சார பண்பாடுகளைப் போற்றி வளர்க்கும் பெரும் பணி இந் நிலையங்களையே சார்ந்துள்ளது." இவ்வாறு பூநகரிக்காரியாதிகாரி திரு. எஸ். ஸ்ரீ நிவாசன் அணிமையில் நிகழ்ந்த யாழ்ப்பாண மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாச ஆண்டு விழாவில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் தன்னிகரற்ற தமிழர் கலாச்சாரம் பண்பாடு என்பன பாதுகாககப்பட வேண்டியது மிகவும் அவசியமென்றார்.

சமாசத் தலைவர், அரசவாசல் முதலியார் திரு. சி. [illegible] உள்ளூராட்சி உதவியதிபர் திரு. ஏ. யோசேப் பேசுகையில் கலாச்சாரத் துறையில் புதியதோர் விழிப்புணர்ச்சியை ஊட்டிய பெருமை இச் சமாசத்திற்குண்டென்றும், கலை வளர்ச்சிக்கான முயற்சிகளில் சமாசம் தீவிர கவனம் செலுத்தி வருவது பாராட்டற்குரியதென்றும் கூறினர். சமாசச் செயலாளர் முகாந்திரம் திரு. ஈ. பி இராசையா வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கடந்த 10 ஆண்டுகளில் சமாசம் ஆற்றியுள்ள சேவைகளை விவரித்தார். வேறு பலரும் பேசிய பின்னர் புது வருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்!—

தலைவர்: அரசவாசல் முதலியார் திரு. சி. தியாகராசா, உபதலைவர்கள்: முகாந்திரம், ஈ. பி இராசையா, முதலியார் வி. மகேசன், செயலாளர்: திரு. உ ந. தேவகடாட்சம், உபசெயலாளர்: திரு. த. துரைசிங்கம் பொருளாளர்: திரு. எஸ். இராசரத்தினம், "சமூகத் தொண்டன்" ஆசிரியர்: திரு. க. பே. முத்தையா.

---

### இ. தி. மு. க. பொரளைக் கிளை

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக பொரளைக் கிளையின் உறுப்பினர் கூட்டம் நிர்வாகிகள் தேர்தலுக்காக தேர்தல் அதிகாரி தோழர் எச். பத்மநாதன் முன்னிலையில் 7-1-60-ம் நாள் கொழும்பு முதலாம் பகுதி மருதானை 307/25C இலக்க மண்டபத்தில் கூடியது.

கூட்டத்திற்கு தோழர் எஸ். சங்கர் தலைமை தாங்கினர். கூட்டத்திற்கு வருகை தந்திருந்த தோழர்கள் அனைவரையும் வரவேற்று முன்னாள் செயலாளர் தோழர் ஏ. எஸ். சண்முகநாதன் பேசினர். தேர்தல் அதிகாரி திரு. எச் பத்மநாதன் தேர்தல் பற்றிய விளக்க உரை யாற்றிய பின் கீழ்க்காணும் நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்:—

செயலாளர்: எஸ். பி. சிவம், துணை செயலாளர்: ஏ. எஸ். சண்முகநாதன், பொருளாளர்: எஸ் குமார்.

செயற் குழுவினர்: எம். மனோகர், பி. சீனி, ஏ. இசக்கிமுத்து, ஓ. நயினர், பி. கந்தையா, எஸ். பேரின்பம்,

பொதுக் குழு பிரதிநிதிகள்: எஸ். சங்கர், ஏ. எஸ். சண்முகநாதன், எஸ். பீ. சிவம்.

---

### துறைநீலாவணை மறுமலர்ச்சி மன்றம்

துறைநீலாவணை மறுமலர்ச்சி மன்றத்தின் ஆதரவில் சென்ற 14-1-60-ல் திரு. ஜே. எம். செல்லத்துரை தலைமையில் தமிழர் திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ் விழாவில் இயல், இசை, நாடக, கிராமிய, அரங்குகள் இடம் பெற்றன. நாடகங்களும், நாட்டுக் கூத்துக்களும், கும்மிகளும், இவ் விழாவில் இடம் பெற்று விழாவைச் சிறப்பித்தன.

இவ்விழாவில் திருவாளர்கள் கே. கே. கிருஷ்ணபிள்ளை, எஸ். ஆறுமுகம், முத்துகுமாரன், "துறைநீலன்" ஆகியோர் "பொங்கல்" என்னும் தலைப்பில் சொற்பெருக்காற்றினர்.

# சமசமாஜிகள் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேலை நிறுத்தஞ் செய்து வெற்றி பெற்றிருக்கிறார்கள் தான். ஆனால் சென்ற மார்ச் 3-ந் திகதி அடையாள வேலை நிறுத்தத்தில் பலர் கலக்கவில்லை. இத் தோல்வியைக் கட்சியே ஏற்றுவிட்டது.

### யாழ்ப்பாணத்தில் நடந்தது

கடந்த யாழ்ப்பாணத்தில், சிங்களத் தொழிலாளரை துணைக்கு அழைக்கவியலாது போகவே தமிழ்த் தொழிலாளரைக் கொண்டு அநுதாப வேலை நிறுத்தம் செய்யப்போவதாக இவர்கள் சொன்னது ஏன்? இதையெல்லாம் யோசித்தால் ஒரு விஷயம் விளங்கும். தோழர்களின் தொழிலாளர்கள் அரசியற் போராட்டங்களில் இவர்களுக்கு ஆதரவு அளிக்கவில்லை. அப்படியிருக்க, தமிழர்களின் உரிமைகளுக்காக இவர்கள் போராட வென்றால் தலைவர்கள் தான் முன்னும் பின்னும் நிற்க வேண்டும்.

### சிங்களவர்களும் ஆதரியார்

இன்னொரு விஷயம். இவர்கள் சமதர்மவாதிகள். இவர்களைப் போல பிலிப்பின் கட்சியினரும் சமதர்மவாதிகள் என்கிறார்கள்; ராஜரத்தினா, சாம் பண்டாரநாயக்காவும் தாமும் அதே கொள்கையுடையவரென்று தான் தம் பட்டம் அடிக்கிறார்கள். ஆனால், பின்னைய கட்சியாரெல்லாம் தமிழுக்கு உரிமையில்லை என்கிறார்கள். ஆகையால் இவர்கள் அளிக்கும் சமதர்ம அரசாங்கத்தை தமிழுக்கு அந்தஸ்து மறுக்கும் இன்னொரு கட்சி அளிக்கும் பொழுது சிங்கள வாக்காளர்கள் முந்திய சுட்சியை ஏன் ஆதரிக்கப் போகிறார்கள்? இலாபமொன்றுமில்லை.

குறிப்பு: சமசமாஜக் கட்சியைப் பற்றி இங்கு எழுதியது, சிற சில மாற்றங்களுடன் இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சிக்கும் பொருந்தும்.

# காய், கனி . . .

[2-ம் பக்கத் தொடர்ச்சி)

மத்தவர் ஒவ்வொருவரும் வாங்கிவைத்துக் கொள்வதென்றால் அது சாத்தியமாகாமற் போகலாம். ஆகையால் கூட்டுறவு முறையில் அவற்றை வாங்கி வைத்துக்கொண்டு, அவசியமானவர்கள் அவற்றை உபயோகித்துக் கொள்ளும்படி செய்தல் இலாபகரமாகும்.

(உபயம்: இலங்கை வானொலி)

# ஒரு நாள் இன்பம்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தசாமி அவளிடம் பொய் சொல்லவில்லை. உண்மையையும் சொல்லிவிடவில்லை. சிரித்து மழுப்பினான். பேச்சை வேறு துறைக்கு மாற்றினான்.

"இன்றைக்கு நீ மிகவும் அழகாக இருக்கிறாய்" என்று கொஞ்சினான்.

"போங்க...!" என்று அவள் கடைக்கண்ணால் அவனை நோக்கினாள். அவன் அவளை இழுத்து தன் மடியில் படுக்க வைத்தான். அவள் நெளிந்தாள்.

●

விடிந்தது.

கந்தசாமி படுக்கையை விட்டு எழவில்லை; எழ முடியவில்லை. அவனுக்கு நல்ல காய்ச்சல். முதல் நாள் வெய்யிலில் அலைந்ததன் விளைவு.

தங்கம் குடிநீர் போட்டுக் கொடுத்தாள். அதைக் குடித்துவிட்டு, வீடு தேடி வந்த கடன் காரரின் வசைகளை வாங்கிக் கொண்டு கிடந்தான்.

மூன்றும் நாள் காலை அவனுடைய வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. அதிலிருந்து அவன் வேலை பார்த்த கடை முதலாளியே இறங்கி வந்தார்.

"எப்படியப்பா கந்தசாமி சுகம்?"

"இப்போ பரவாயில்லை சார்" என்று பயபக்தியுடன் பதில் தந்தான் கந்தசாமி.

"அவசரப் படாமல் நன்றாகச் சுகம் வந்ததும் வேலைக்கு வா. இது இந்த மாதச் சம்பளம். உனக்கு நெருக்கடியாக இருக்குமென்று இருபத்தைந்து ரூபா மேலதிகமாக வைத்திருக்கிறேன். அதை அடுத்த மாதச் சம்பளத்தில் பிடித்துக் கொள்ளலாம்" என்று சொல்லி ஒரு உறையை தங்கத்திடம் கொடுத்தார்.

முதலாளி போய்விட்டார்.

கந்தசாமி உறையை வாங்கி ஆவலோடு பிரித்து, உள்ளே இருந்த ஒரே ஒரு நோட்டை வெளியே எடுத்தான். அதன்.........வலது பக்க மேல் மூலையில்......... ஒரு சிலுவை அடையாளம் இருந்தது.

ஒரு நூறு ரூபா நோட்டு!


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறுமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர் சுதந்திரன்.

தபால் பெட்டி 1183, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# 2-வது இன்பவாரமாக காட்சியளிக்கிறது.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி) மொடர்ன் (பதுளை) ஸ்ரீ கிருஷ்ண (திருகோணமலை)

தீவொளி (நுவரெலியா) விஜிதா (மஸ்கெலியா) சென்ட்ரல் (மாத்தளை) ஜெமினி (பொகவந்தலாவை)

ஆகிய தியேட்டர்களில்





நடிகர் திலகம்

## சிவாஜி கணேசன்,

பாலையா, சாவித்திரி,
தங்கவேலு, பி. கண்ணாம்பா,
சந்திரபாபு, ஈ. வி. சரோஜா,
சகாதேவன், எம். என். ராஜம்,
ஓ. ஏ. கே. தேவர், மோகனா
நடித்த

### ஆர். ஆர். பிக்சர்ஸ்

# காத்தவராயன்





சிவ பார்வதி நடனம்:
**கோபி கிருஷ்ண**
**கமலா லக்ஷ்மணன்**

பின்னணி:
சௌந்தரராஜன், ஜெயராமன்,
கண்டசாலா, எஸ். ஸி. கிருஷ்ணன்,
பி. லீலா, ஜிக்கி, சுசீலா, ஏ. பி. கோமளா,
ரத்னமாலா, ஜமுனாராணி.

பாடல்கள்: **தஞ்சை ராமையாதாஸ்**

சங்கீதம்: **ஜி. ராமனாதன்**

டைரக்ஷன்:
**டி. ஆர். ராமண்ணா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்த, 1[illegible] சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த, சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 ஜனவரி 24-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.